# 5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொது நோக்கு

*இலங்கையின் வெளிநாட்டுத் துறை குறிப்பிடத்தக்க அழுத்தங்களுக்குட்பட்ட வேளையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகளினால் 2018ஆம் பின்னரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் ஆண்டின் இறுதியளவில் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரித்தது. வெளிநாட்டுப் பக்கத்தில், ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை வட்டி வீத உயர்வினைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் வலுவடைந்தமையானது, இலங்கை உட்பட தோற்றம் பெற்றுவரும் சந்தைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறக் காரணமாகியது. உள்நாட்டுப் பக்கத்தில், இவ்வாண்டுப்பகுதியின் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தின் வளர்ச்சி ஏற்றுமதி வருவாய்களை விஞ்சியமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் கூடுதலாக விரிவடைந்தது. விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறைகளை, உலகளாவிய நிதியியல் சந்தை நிலைப்பாடுகளின் இறுக்கமடைகின்ற பின்னணியில் உயர்வடைந்த மூலமான வெளிப்பாய்ச்சல்கள் போன்றவற்றைப் பிரதிபலித்து உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் திரவத்தன்மை நிலைப்பாடுகள் 2018இன் இரண்டாம் அரைப்பகுதியில் பெருமளவில் இறுக்கமாகவிருந்தது. இதன் விளைவாக, 2018இன் தொடக்கப்பகுதியில் அலுவல்சார் ஒதுக்குகள் கணிசமானளவு கட்டியெழுப்பப்பட்ட போதிலும் இலங்கை ரூபா 2018 இறுதியளவில் கணிசமானளவு தேய்வடைந்தது. அதேவேளை ஆண்டின் இறுதியில் அரசியல் சூழ்நிலைகளில் காணப்பட்ட மோசமான நிகழ்வுகள் முதலீட்டாளர் மனோபாவத்தினை பாதிக்கச் செய்து வெளிநாட்டுத் துறையின் அழுத்தத்தினை தீவிரமடையச் செய்தது. இத்தகைய அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கியும் அரசாங்கமும் தீர்வைகள் மற்றும் அனைத்து வைப்புத் தேவைப்பாடுகளை அதிகரித்தல், கடனுக்கான பெறுமதி வீதத்தினைக் குறைத்தல், உந்துஊர்திகளின் இறக்குமதிகளிற்கு உரிமத்தினை பயன்படுத்துவதனை இடைநிறுத்துதல் போன்ற அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தன. இதன்விளைவாக, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து ஆண்டின் இறுதியளவில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்த வேளையில் அரச பிணையங்கள் சந்தைக்கான சில உட்பாய்ச்சல்களுடனும் 2018 இறுதியளவில் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வின் தணிவான நாணயக் கொள்கையினொரு விளைவாக வெளிநாட்டுச் சூழல் மேம்பட்டமையினால் நிதியியல் கணக்கு வசவடையத் தொடங்கியமை தாழ்ந்த எண்ணெய் விலைகள் மற்றும் வர்த்தக நெருக்கடிகள் குறைவடைந்தமை போன்றவற்றினால் ஆண்டின் இறுதியை நோக்கி வெளிநாட்டுத் துறை மேம்பட்ட தாக்குப்பிடிக்கும் தன்மையை சான்றுபடுத்துகின்றது.*

*2018இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மீதி ஆரோக்கியமான வளர்ச்சியைக் காட்டிய போதும், வர்த்தப் பற்றாக்குறை விரிவடைந்தமை மற்றும் இரண்டாந்தர வருமான மீதிகள் மிதமடைந்தமை என்பனவற்றின் விளைவாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2017இன் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்திலிருந்து 2018இல் மொ.உ.உற்பத்தியில் 3.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தகக் கணக்கில், 2018இன் ஆரம்பத்தில் குறிப்பாக, உந்து ஊர்திகள், மற்றும் எரிபொருள் மற்றும் தங்க இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக இறக்குமதிச் செலவினம் ஏற்றுமதி வருவாய்களை விஞ்சி 2018இல் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்களவு விரிவினை ஏற்படுத்தியது.*

5

*திருத்தியமைப்பதற்கான கொள்கை வழிமுறைகளின் காரணமாக, வர்த்தகப் பற்றாக்குறை 2018 நவெம்பர் மற்றும் திசெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து செலாவணி வீதத்தின் மீதும் சென்மதி நிலுவையின் மிதமான அழுத்தத்தினைத் தளர்த்தியது. அதேவேளை, வெளிநாட்டுக் கடன்கள் மீதான அரசாங்கத்தின் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுடனும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளினால் செய்யப்பட்ட பங்கிலாபக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புடனும் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை ஒரு மிதமான அதிகரிப்பை பதிவுசெய்த வேளையில் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் கணிசமானளவு குறைவடைந்தன. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் பணிகள் கணக்கின் மிகை அதிகரித்தமைக்கு, முக்கியமாக, சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் அதேபோன்று போக்குவரத்து மற்றும் கணனிப் பணிகள் துறைகளுக்கு ஏற்பட்ட ஆரோக்கியமான உட்பாய்ச்சல்களும் தூண்டுதலாக அமைந்தன. அதேவேளை, ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதி முழுவதிலும் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் இறுதிக் காலாண்டில் மிதமடைந்தமையின் காரணமாக இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகை மிதமானளவில் வீழ்ச்சியடைந்தது.*

*2018ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்ந்தளவு உட்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் கணக்கு. பெருமளவிற்கு அதிகரித்தது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள், வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதியின் பெறுகைகள் ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதி பெறப்பட்டமை மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கு ஆதரவளித்தன. எனினும் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் நிதியியல் கணக்கின் மீது அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. நிதியியல் கணக்கின் ஏனைய முக்கிய வெளிப்பாய்ச்சல்களாக வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி காணப்பட்டது. இவ்வபிவிருத்திகளுடன் 2018 ஏப்பிறல் இறுதியில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 9.9 மில்லியன் கொண்ட உயர்ந்த மட்டத்தினை அடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதன் பின்னர் மிதமடைந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனை அடைந்து அதிகரித்த படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளின் தாக்கத்தினையும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டினையும பிரதிபலித்தது. இதன் விளைவாக 2018இல் திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 1,103 மில்லியனைப் பதிவுசெய்தது.*

*2018இல் மத்திய வங்கி சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையினைத் தொடர்ந்தும் பின்பற்றியதுடன் ரூபாவின் நியாயமற்ற*

அட்டவணை 5.1
சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விபரம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2017 (அ) | 2018 (ஆ) | 2017 (அ) | 2018 (ஆ) |
| நடைமுறை கணக்கு (தேறிய) | -2,309 | -2,814 | -351,341 | -454,308 |
| வர்த்தக நிலுவை | -9,619 | -10,343 | -1,466,133 | -1,673,111 |
| ஏற்றுமதிகள் | 11,360 | 11,890 | 1,732,440 | 1,933,533 |
| இறக்குமதிகள் | 20,980 | 22,233 | 3,198,572 | 3,606,644 |
| பணிகள் (தேறிய) | 3,302 | 3,766 | 503,332 | 611,233 |
| பெறுகைகள் | 7,724 | 8,374 | 1,177,281 | 1,358,881 |
| கொடுப்பனவுகள் | 4,421 | 4,608 | 673,949 | 747,648 |
| முதன்மை வருமானம் (தேறிய) | -2,319 | -2,399 | -352,856 | -391,934 |
| பெறுகைகள் | 173 | 262 | 26,394 | 42,620 |
| கொடுப்பனவுகள் | 2,492 | 2,661 | 379,250 | 434,554 |
| இரண்டாந்தர வருமானம் (தேறிய) | 6,327 | 6,163 | 964,316 | 999,504 |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,175 | 7,023 | 1,093,607 | 1,139,324 |
| தொழிலாளர் பணவலுப்பல்கள் | 7,164 | 7,015 | 1,091,972 | 1,138,124 |
| அரசாங்க மாற்றல்கள் | 11 | 8 | 1,634 | 1,201 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 848 | 860 | 129,291 | 139,821 |
| மூலதன கணக்கு (தேறிய) | 11 | 14 | 1,667 | 2,265 |
| மூலதன கணக்கு : வரவு | 40 | 42 | 6,125 | 6,702 |
| மூலதன கணக்கு : செலவு | 29 | 27 | 4,458 | 4,437 |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய) | -2,298 | -2,799 | -349,674 | -452,043 |
| நிதியியல் கணக்கு (தேறிய) | -2,123 | -3,328 | -329,233 | -536,943 |
| நேரடி முதலீடு : சொத்துக்கள் | 72 | 68 | 10,946 | 11,021 |
| நேரடி முதலீடு : பொறுப்புகள் | 1,373 | 1,611 | 210,027 | 260,215 |
| சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள் | ... | ... | -12 | 6 |
| படுகடன் பிணையங்கள் | ... | ... | -12 | 6 |
| சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள் | 1,771 | 129 | 271,165 | -2,281 |
| பங்கு மூலதனம் | 359 | -4 | 54,606 | -3,728 |
| படுகடன் பிணையங்கள் | 1,413 | 134 | 216,559 | 1,446 |
| நிதியியல் பெறுதிகள் | - | - | - | - |
| ஏனைய முதலீடு : சொத்துக்கள் | 82 | 343 | 13,268 | 59,977 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 78 | 80 | 12,094 | 14,605 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 35 | 148 | 5,293 | 23,941 |
| கிடைக்க வேண்டிய ஏனைய கணக்குகள் | -31 | 116 | -4,119 | 21,430 |
| ஏனைய முதலீடு : பொறுப்புகள் | 1,916 | 997 | 298,832 | 170,968 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -228 | -632 | -33,698 | -107,187 |
| கடன்கள் | 1,889 | 1,568 | 293,279 | 268,661 |
| மத்திய வங்கி | 184 | 252 | 28,630 | 39,999 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 271 | 697 | 40,156 | 120,016 |
| மத்திய அரசாங்கம் | 1,223 | 558 | 192,174 | 96,909 |
| ஏனைய துறைகள் | 211 | 61 | 32,319 | 11,737 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 195 | 224 | 29,436 | 32,629 |
| செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகள் | 61 | -162 | 9,815 | -23,135 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| ஒதுக்கு சொத்துக்கள் | 2,784 | -1,002 | 426,590 | -179,045 |
| நாணய தங்கம் | - | -103 | - | -16,244 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 2 | -3 | 354 | -519 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 2,782 | -896 | 426,236 | -162,282 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 393 | -1,012 | 60,087 | -169,138 |
| பிணையங்கள் | 2,389 | 122 | 366,135 | 6,732 |
| தேறிய பிழைகளும் தவறுகளும் | 175 | -529 | 20,441 | -84,899 |
| திரண்ட நிலுவை (இ) | 2,068 | -1,103 | 330,004 | -4,354 |
| மொ.உ.உ. இன் சதவீதமாக | | | | |
| வர்த்தக நிலுவை | -10.9 | -11.6 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -7.2 | -7.4 | | |
| நடைமுறை கணக்கு | -2.6 | -3.2 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -2.6 | -3.1 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.13 பார்க்குக


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 5.1

## வெளிநாட்டுத்துறை நிழற்படம் - 2018

**இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகள் இரண்டினாலும் 2018இல் கணிசமான அழுத்தத்திற்கு முகங்கொடுத்தது**

### வர்த்தகப் பற்றாக்குறை 2018இல் விரிவடைந்தது








ஏற்றுமதிகள் 4.7% ▲

இறக்குமதிகள் 6.0% ▲

ஏற்றுமதியின் சாதகமான வளர்ச்சிக்கு புறம்பான உந்து ஊர்திகள், எரிபொருள் மற்றும் தங்கம் மீதான இறக்குமதி செலவினங்கள் 2018இன் முதல் மூன்று காலாண்டுகளில் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவடைதலுக்கு இட்டுச் சென்றன

### நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையின் விரிவடைதலுக்கு இட்டுச் சென்றது




சுற்றுலா மீதான உயர்ந்த வருவாய், தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளை பெறுதல் (பி.பி.ஓ), மற்றும் போக்குவரத்துத் துறையின் உறுதியான வளர்ச்சி, தொழிலாளர் பணவனுப்புதல்கள் மற்றும் முதலாந்தர கணக்கு பற்றாக்குறை உறுதியாக இருந்ததற்கும் புறம்பாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2018இல் விரிவடைந்தது

### நிதியியல் கணக்கு கணிசமான உட்பாய்ச்சல்களை பெற்றுக்கொண்ட வேளையில்


| பங்கு மூலதன உட்பாய்ச்சல்கள் | பங்கு மூலதன வெளிப்பாய்ச்சல்கள் | படுகடன் உட்பாய்ச்சல்கள் | படுகடன் வெளிப்பாய்ச்சல்கள் |
|---|---|---|---|
| வெ.நெ.மு. ஐ.அ.டொ 2.1பில் | சொத்துப் பட்டியல் ஐ.அ.டொ 4மில் | நா.ப.மு. ஐ.அ.டொ 2.5பில் | அரச கடன்கள் ஐ.அ.டொ 1.8பில் |
| | | அரச கடன்கள் ஐ.அ.டொ 2.3பில் | வங்கிகளின் முறிகள் ஐ.அ.டொ 1.35பில் |
| | | ப.நா.நி.-வி.நி.வ ஐ.அ.டொ 252மில் | அரச பிணையங்கள் ஐ.அ.டொ 1.0பில் |

உயர்வான படுகடன் மீள் கொடுப்பனவுகள் மற்றும் அரச பிணையங்களிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களுக்கு புறம்பாக கணிசமான பங்கு மூலதனம் மற்றும் படுகடன் உட்பாய்ச்சல்களுடன் நிதியியல் கணக்கு வலுவடைந்தது

வெ.நெ.மு. வெளிநாட்டு நேரடி முதலீடு
நா.ப.மு - நாட்டிற்கான பன்னாட்டு முறி
பா.நா.நி-வி.நி.வ பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி

### இதன் விளைவான இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் 2019இன் ஆரம்பத்தில் வெளிநாட்டுத் துறையினை வலுப்படுத்தியது

இறக்குமதிகளை உறுதிப்படுத்துவதற்கும் செலாவணி வீதத்தின் அழுத்தத்தினை குறைப்பதற்கும் பல்வேறு கொள்கை வழிமுறைகள் பின்பற்றப்பட்டன...



**உந்து ஊர்திகள்**

செத் 2018: ஐ.அ.டொ. 138 மில்
ஒத் 2018: ஐ.அ.டொ. 161 மில்
நவெ 2018: ஐ.அ.டொ. 105 மில்
திசெ 2018: ஐ.அ.டொ. 77 மில்
சன 2019: ஐ.அ.டொ. 50 மில்




**தங்கம்**

சன-ஏப் 2018
ஐ.அ.டொ. 437 மில்
மே-திசெ 2018
ஐ.அ.டொ. 1 மில்
சன 2019
ஐ.அ.டொ. 0.1 மில்


...உந்து ஊர்திகள் மற்றும் தங்க இறக்குமதிகளை கணிசமான அளவு குறைத்து 2018இன் இறுதியிலும் 2019இன் ஆரம்பத்திலும் வர்த்தகப் பற்றாக்குறையை கட்டுப்படுத்துவதற்கு வழிவகுத்தது.

இந்த அபிவிருத்திகள் வெளிநாட்டுத் துறைமீதான அழுத்தத்தினை இலகுபடுத்தி 2019 மார்ச்சு இறுதியளவில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க பெறுமதி உயர்விற்கு வழிவகுத்தது.




5

வரைபடம் 5.2
**சென்மதி நிலுவை**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டுமே தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இறுக்கமான திரவத்தன்மை காணப்பட்ட போதும், மத்திய வங்கி குறிப்பாக இரண்டாமரைப் பகுதியில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தது. உலகளாவிய ரீதியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் வலுப்படுத்தப்பட்டமை குறிப்பாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளுடைய ஏனைய பல தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களினைப் போல வெளிநாட்டு முதலீடுகளின் கணிசமான வெளிப்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. இது அதிகரித்த இறக்குமதிச் செலவினத்துடன் இணைந்து உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மையை இறுக்கமாக்கி அதன் மூலம் இலங்கை ரூபாவின் மீது கணிசமான அழுத்தத்தினை உருவாக்கியது. 2018இன் நான்காம் காலாண்டில் தீவிரமடைந்த வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு நாளுக்குள்ளேயான குறிப்பிடத்தக்க தளம்பலைக் கவனத்திற் கொண்ட மத்திய வங்கி, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிடுவதில் எச்சரிக்கையுடன் கூடிய அணுகுமுறையினைப் பின்பற்றிய வேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் முன்மதியுடைய மட்டத்தில் பேணப்பட்டன. இதன் விளைவாக, 2018இல் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில், மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை ஐ.அ.டொலர் 1,120 மில்லியனைத் தேறிய அடிப்படையில் நிரம்பல் செய்தது. மேலும், இலங்கையின் வெளிநாட்டுப் போட்டிதன்மையின் குறிகாட்டியொன்றாக விளங்கும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண், 2018 செத்தெம்பரிலிருந்து தள ஆண்டின் மட்டத்திற்குக் கீழே வீழ்ச்சியடைந்து இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையில் மேம்பாடொன்றினை எடுத்துக்காட்டியது.*

*வெளிநாட்டுத் துறை 2018இன் இறுதியிலும் 2019இன் முதற்காலாண்டு முழுவதிலும் கூடியளவிற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் காட்டியது. அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கம், அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிப்பாய்ச்சல்களின் மெதுவடைதல் மற்றும் மேம்பட்ட அரசியல் சூழல் என்பன ஆண்டின் இறுதியில் வெளிநாட்டுத் துறையில் உறுதித்தன்மையினைத் தோற்றுவித்தன. ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கியினால் மேலும் வட்டி வீதம் உயர்த்தப்படுவதில் காணப்பட்ட தாமதம், 2019 சனவரியில் அரசாங்கத்தினால் ஐ.அ.டொலர் 1 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையிலிருந்து தோன்றிய சாதகமான தோற்றப்பாடு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் விரிவாக்கப்பட்டமை மற்றும் 2019இல் ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வழங்கல் என்பன 2019இன் முதலாம் காலாண்டில் வெளிநாட்டுத் துறையில் சாதகமான உத்வேகத்தினைத் தோற்றுவித்த அபிவிருத்திகளில் சில அபிவிருத்திகளாகும். இதன் விளைவாக, 2018இல் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்த இலங்கை ரூபா 2019இன் முதற் காலாண்டுப்பகுதியில் பெறுமதியில் உயர்வடைந்து 3 சதவீதத்திற்கு மேலான பெறுமான உயர்வினைப் பதிவுசெய்தது. எனினும், ஒப்பீட்டு ரீதியில் பாரிய படுகடன் தீர்ப்பனவுக் கடன்பாடுகளும் அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிப்பதன் மூலம் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான தேவை என்பன நடுத்தர காலத்தில் சவாலுக்குரியனவாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இப்பின்னணியில், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளில் தங்கியிருப்பதனைக் குறைத்தல், நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைப் பேணுதல் மற்றும் நீண்ட காலப் படுகடனை உருவாக்காத மூலதனப்பாய்ச்சலூடாக பன்னாட்டு ஒதுக்குகளைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்பன முக்கிய முன்னுரிமைக்குரியனவாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. ஏற்றுமதி சார்ந்த தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஐ.அ.டொலர் 3 பில்லியன் கொண்ட வருடாந்த இலக்குடன் கவர்ந்து கொள்வது நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடுவதில் வெளிநாட்டுக் கடன்பாடுகளைக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு அவசியமாகும். மேலும், பணி ஏற்றுமதிகளின் முழு உள்ளார்ந்த வளத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் விதத்திலான முன்னெடுப்பு வழிமுறைகள் நடுத்தர காலத்தில் நாட்டிற்கு உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை உறுதிப்படுத்தும்.*

5

*சில கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்பட்டமைக்கிடையிலும் 2019இன் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு சாதகமானதாகவே காணப்படுகிறது. 2019இல் இறக்குமதிகளில் வீழ்ச்சிகள் எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி தொடர்ச்சியாக மேல்நோக்கிய உத்வேகத்துடன் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் பற்றாக்குறை சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலா மீதான வருவாயினால் ஆதரவளிக்கப்பட்டு பணிகள் கணக்கின் மிகை மேம்பாடடையுமென எதிர்பாாக்கின்ற வேளையில் இறுக்கமான உலக நிதியியல் நிலைப்பாடுகளுக்கு மத்தியில் இவ்வாண்டுக்காலத்தில் முதன்மை வருமானக் கணக்கு விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைய போக்கினைப் பேணிக்கொண்டு தொழிலாளர் பணவனுப்பல்கள் மூலமான உட்பாய்ச்சல் 2018இன் மட்டங்களிற்கு ஒப்பீடான மட்டங்களில் தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் மூலம் பெருமளவிற்கு மேம்பாடடையுமென எதிர்பார்க்கின்ற வேளையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பனவற்றிற்கான வெளிநாட்டு முதலீடுகளும் உறுதித்தன்மையை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மீள ஆரம்பிக்கப்பட்டமை மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவத்துடன் சேர்ந்து வெளிநாட்டுத் துறையை வலுவடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டுப் பகுதியில் வெளிநாட்டு தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்காக எதிர்பார்க்கப்பட்ட வழிமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் அலுவல்சார் ஒதுக்குகள் போதுமான மட்டங்களில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும்கூட, 2019இல் வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாடு சாத்தியமான பாதிக்கப்படக்கூடிய தன்மைகளின் காரணமாக கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை கொண்டிருக்கக்கூடும். குறிப்பாக, உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற உரிமங்களின் இடைநிறுத்தல்கள் அகற்றப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதனால் இது வர்த்தக நிலுவையில் அவதானிக்கப்பட்ட சாதகமான சீராக்கங்களை பின்நோக்கித் தள்ளிவிடக்கூடும். மேலும், உலகளாவிய எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட உயர்வு, மோசமான உள்நாட்டு வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து எரிபொருள் இறக்குமதிகளின் மீது அதிகரித்த செலவினங்களைத் தோற்றுவிக்கக்கூடும். மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வட்டிவீத வழமைப்படுத்தும் வேகம் மற்றும் அளவு என்பனவற்றில் எதிர்பாராது ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் எல்லை கடந்த மூலதனப் பாச்சல்களை நிலைகுலையச் செய்து சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கினைப் பாதிக்கக்கூடும்.*

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**நிறுவன ரீதியான ஆதரவினை ஒழுங்குமுறைப்படுத்தி அதிகரித்தமையின் மூலமாக வெளிநாட்டு வர்த்தகத்தினை ஊக்குவித்து வசதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் 2018இல் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைச் சூழலை வசதிப்படுத்துவதற்கு மேலும் உதவியிருக்கிறது.** 2018 சனவரியில் இலங்கை சிங்கப்பூருடன் இருபுடை வர்த்தக உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டதுடன் இது 2018 மேயில் நடைமுறைக்குவந்தது. இது, இலங்கையின் முதலாவது அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை வர்த்தக ஒப்பந்தமாகும். அதேவேளை, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தாய்லாந்து, சீனா மற்றும் இந்தியாவுடன் அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. 2018இல் தாழ்ந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்காவினால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை வசதி 2020 இறுதிவரை நீடிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமையின் பயன்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்கு பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. உலகளாவிய பெறுமதிச் சங்கிலியினை நோக்கி இலங்கை நகரும் விதத்தில் 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வர்த்தக கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போட்டித்தன்மை, வர்த்தகத் தாராளமயப்படுத்தல் மற்றும் முதலீடுகளைக் கவர்தல் என்பனவற்றினை நோக்கி நெறிப்படுத்தப்பட்டமை 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தது. இச்செயன்முறைக்கு ஆதரவளிக்கும் விதத்தில் நிறுவனங்களும் தனிநபர்களும் போட்டித்தன்மையினை எதிர்நோக்குவதற்கு உதவுகின்ற நோக்குடன் வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. மிகச் சிறந்த வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிக்கும்பொருட்டு தேவையற்ற பொருட்களைக் குவித்தலுக்கெதிரான மற்றும் ஈடளிக்கும் தீர்வைச் சட்டம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைச் சட்டம் ஆகிய முக்கிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில்கள் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டன. அதேவேளை, ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை விரைவுபடுத்துவதற்காக தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022, 2018 யூலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைய, அனைத்தையுமுள்ளடக்கிய நடவடிக்கைத் திட்டமொன்றுடன் சேர்த்து நான்கு வர்த்தக ஆதரவுத் தொழிற்பாடுகளும் ஆறு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய துறைகளும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. மேலும், உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின்படி வர்த்தக தகவல் நுழைவாயில் 2018 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட வேளையில்

தேசிய ஒரே கூரையின் கீழான நிலையத்தை நிறுவுவது முன்னேற்றமடைந்தது. அதேவேளை, முதலீட்டு ஒப்புதல்களை விரைவுபடுத்தும் பொருட்டு முதலீட்டுச் சபை வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரே கூரையின் கீழான நிலையமொன்றை ஆரம்பித்தது. அத்தகைய வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2019இல் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண் 2018இன் 100 இலிருந்து 111 இற்கு மேம்பட்ட வேளையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுடன் மேலும் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் மற்றும் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றின் கீழான ஏற்றுமதிகள் முன்னுரிமை உடன்படிக்கைகளின் கீழான ஏற்றுமதிச் செயலாற்றத்திற்கு முக்கியமாகப் பங்களித்தன.** 2017 மேயில் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டம் மீண்டும் கிடைக்கப்பெற்றமையின் காரணமாக மொத்தத் தீர்வைத் தொடர்களில் 66 சதவீதத்திற்கான தீர்வை அகற்றலைப் பெற்றுக் கொண்டமையின் மூலம் நன்மையைப் பெற்று இத்திட்டத்தினூடான ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியுற்றன. ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை ¸ இன் கீழ் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் கடலுணவு என்பன முக்கிய ஏற்றுமதி வகைகளாகக் காணப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய நாடுகளிடமிருந்து மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியைக் கோரியதன் மூலம் பிராந்திய குவித்தலினூடாக ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை ¸ திட்டத்தின் பயன்பாட்டினை அதிகரித்துக் கொள்ள இலங்கை முயற்சிகளை மேற்கொண்டது. எடுத்துக்காட்டாக, இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கு இலங்கை ஆடைத் துறைக்கு அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக 2018இல் இலங்கை, இந்தோனேசியா அரசாங்கங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திற்குக் கூட்டாக கோரிக்கையொன்றினை விடுத்திருந்த வேளையில் ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை ¸ இன் விரிவாக்கப்பட்ட குவிவு விதியின் கீழ் தென் கொரியாவிலிருந்து ஆடை மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கையினால் இன்னொரு முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது. முன்னுரிமை உடன்படிக்கைகளின் கீழான மொத்த ஏற்றுமதிகளில் 15 சதவீதத்திற்கு வகைகூறிய ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைகளின் கீழான ஏற்றுமதிகள் 2018இல் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டத்தில் பயணப்பொருட்களையும் உள்ளடக்குவதற்கு ஐக்கிய அமெரிக்காவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத் தொடர்ந்து, இலங்கை உட்பட அனைத்து நன்மைபெறும் நாடுகளும் 2018 யூலை 01 இலிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கான பயணப் பொருட்களின் ஏற்றுமதிகள் தீர்வையற்ற வசதிகளுக்கான தகைமையைப் பெற்றுக்கொண்டன. இலங்கை ருஷியாக் கட்டமைப்பு, யப்பான், அவுஸ்திரேலியா, துருக்கி, கனடா மற்றும் சுவிற்சிலாந்து போன்ற மற்றைய பல அபிவிருத்தியடைந்த நாடுகளினால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டங்களிலிருந்து தொடர்ந்தும் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட போது ஏற்றுமதிக்கான அவற்றின் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாகும். அதேவேளை, 2018இல் வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையின் கீழான இலங்கையின் ஏற்றுமதிகள் அதிகரித்தமைக்கு மெக்சிக்கோ, பெரு மற்றும் ஈகுவடோர் என்பனவற்றிற்கான கறுவா ஏற்றுமதி வழிவகுத்தது. குறுகிய ஏற்றுமதித் தளமும் தாழ்ந்த உற்பத்தி நுழைவும் இத்தகைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களிலிருந்தான முழு நன்மைகளையும் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து இலங்கையைத் தடை செய்கின்றன.

**புதிய இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளினூடாக உள்ளார்ந்த வளம் மிக்க சந்தைகளை அடைகின்ற அதேவேளையில் உலகளாவிய பெறுமதிச் சங்கிலி அமைப்பில்**

அட்டவணை 5.2
முன்னுரிமை உடன்படிக்கைகளுக்கு கீழான இலங்கையின் ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2017 | 2018 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை (ஜி.எஸ்.பீ) | 3,851.2 | 3,927.7 | 2.0 | 82.7 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (ஜி.எஸ்.பீ + உள்ளடங்களாக) (ஆ) | 2,473.9 | 2,665.3 | 7.7 | 56.1 |
| அமெரிக்கா | 782.1 | 708.0 | -9.5 | 14.9 |
| ருசிய கூட்டாட்சி | 188.3 | 166.6 | -11.5 | 3.5 |
| யப்பான் | 96.4 | 92.7 | -3.8 | 2.0 |
| கனடா | 90.5 | 71.6 | -20.9 | 1.5 |
| அவுத்திரேலியா | 81.4 | 79.5 | -2.4 | 1.7 |
| துருக்கி | 79.8 | 79.5 | -0.4 | 1.7 |
| 2000ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 442.3 | 483.5 | 9.3 | 10.2 |
| 1975ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 151.1 | 157.0 | 3.9 | 3.3 |
| 1989ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 81.2 | 92.6 | 14.0 | 1.9 |
| 2005ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 60.3 | 51.0 | -15.5 | 1.1 |
| 2006ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 41.1 | 35.4 | -13.8 | 0.7 |
| 1995ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட | 4.5 | 3.5 | -21.2 | 0.1 |
| முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள் | 4,631.7 | 4,750.7 | 2.6 | 100.0 |
| இலங்கையினுடைய மொத்த விற்பனைக்குள்ள ஏற்றுமதிகளின் பங்கு | 40.8 | 40.0 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்கு பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ருஸ்ஸியா,பெலறூஸ் மற்றும் கசாக்த்தான் உள்ளடங்கலாக
(ஈ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்டது

*மூலம்:* வணிகத் திணைக்களம்

**நல்ல நிலையொன்றினைப் பெற்றுக்கொள்வனையும் நோக்காகக் கொண்டு மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** எட்டுச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2018 சனவரியில் இலங்கை ‘ சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கையெழுத்தானதுடன் 2018 மேயிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இலங்கை’ சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது பொருட்கள் மற்றும் பணிகளிலான வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தக நிவாரணங்கள், தொலைத்தொடர்பூட்டல், ஈ-வர்த்தகம், அரசாங்கக் கொள்வனவு, போட்டித்தன்மை, புலமைச் சொத்து உரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றை உள்ளடக்கிய முதலாவது அனைத்தையுமுள்ளடக்கிய ஒப்பந்தமாகக் காணப்படுகிறது. இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பரந்தளவு உடன்படிக்கைகளை உள்ளடக்கியிருக்கின்ற போதும் சிங்கப்பூர் பொதுவாகப் பொருட்களின் 99 சதவீதத்திற்கும் கூடுதலான தீர்வையற்ற சந்தை வசதிகளை வழங்குவதன் காரணமாக இலங்கை முக்கியமாகப் பணிகளிலுள்ள வர்த்தகத்திலிருந்து கூடுதலான வியாபார வாய்ப்புக்களின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் சிங்கப்பூரிலிருந்து முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதனையுமே முக்கியமாக எதிர்பார்க்கிறது. இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தீர்வை தாராளமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் இலங்கை 50 சதவீதமான (3719) தீர்வைத் தொடர்களை தாராளமயப்படுத்தியிருக்கிறது. எனினும், இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் பல ஆர்வலர்களும் கரிசனைகளை எழுப்பியதன் காரணமாக இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பற்றி மேலும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதன் விளைவாக, அத்தகைய கரிசனைகள் தொடர்பில் மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை முன்னெடுத்துச் செல்வது பற்றிய தீர்மானம் எதிர்வரும் காலத்தில் நடத்தப்படவுள்ள கூட்டங்களில் தீர்மானிக்கப்படும். இலங்கை சீனாவுடனும் அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றினை செய்து கொள்ள எதிர்பார்த்திருக்கிறது. இதற்காக ஆறு பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளமையுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் 2019இல் எதிர்பார்க்கப்படுகின்றன. உத்தேச இலங்கை - சீனா சுதந்திர வர்த்தக உடன்படிக்கை முக்கியமாகப் பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்புக்கள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு என்பனவற்றை உள்ளடக்க எதிர்பார்க்கிறது. அதேவேளை, இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையிலான அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான செயற்பரப்பு தொடர்பான கூட்டம் 2018 மேயில் நடத்தப்பட்டதுடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2018 யூலையிலும் செத்தெம்பரிலும் நடத்தப்பட்டன. இப்பேச்சுவார்த்தைகளின் போது ஒன்பது தொழிற்பாட்டுக் குழுக்கள் நிறுவப்பட்டதுடன் தொழிற்பாட்டுக் குழுக்களின் செயற்பரப்பும் வேலைத் திட்டங்களும் கலந்துரையாடப்பட்டன. அதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான உத்தேச பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்ததுடன் 2018 செத்தெம்பர் அளவில் 11 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளன. பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையும் ஒரு அனைத்தையுமுள்ளடக்கிய உடன்படிக்கையாக இருப்பதுடன் இது ஏற்கனவேயுள்ள இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரிவுபடுத்தியதன் மூலம் பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. எனவே, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதாக இருக்கின்றது. மேலும், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் விசேட கவனம் தற்போதைய இருபுடை வர்த்தகத்தில் மிகப்பெரும் தடைகளாக அடையாளம் காணப்பட்ட தர நியமங்கள், சுகாதாரம், தாவரவியலுடன் தொடர்பான சுகாதார வழிமுறைகள் போன்ற தீர்வையல்லாத் தடைகளைக் கொண்ட துறைகளின் மீது செலுத்தப்படுகிறது. மேலும், 2017 மாச்சில் இந்தியா அதன் இருபுடை முதலீட்டு உடன்படிக்கைகளை முடிவுறுத்தியிருப்பதனால் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் முதலீட்டு அத்தியாயம் இரு நாடுகளுக்கிடையிலுமான முதலீட்டுப் பாய்ச்சலை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான அத்தியாயம் வேளாண்மை, கல்வி, சுற்றுலா, போக்குவரத்து, வான் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள், வலு, விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி போன்ற பொருளாதாரத்தின் பல துறைகளில் ஒத்துழைப்பினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சாத்தியமான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை அடைவதற்கான வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டு மலேசியா, இந்தோனேசியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் தொடக்க ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.

**உயர்ந்த பயன்பாட்டு வீதங்கள் காணப்பட்ட போதும் இச்சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வர்த்தக அளவுகள் குறைவாக இருப்பதனை கருத்திற்கொண்டு ஏற்கனவேயுள்ள இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை மேலும் அதிகரிப்பதற்காகப் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** 2000ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருந்துவரும் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கையின் ஏற்றுமதிக்கு பங்களிக்கின்ற முக்கியமான இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாக இருந்து வருகிறது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக

5

உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதிகள் அதிகரித்த வேளையில் இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாடு இலங்கைக்குச் சாதகமாகக் காணப்பட்டது. முன்னுரிமை நியதிகளின்கீழ் இந்தியாவிலிருந்து இடம்பெற்ற ஏறத்தாழ 6 சதவீதமான இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவிற்கான, விலங்குத்தீன், அடிப்படை உலோகங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள் மற்றும் ஆடைகள் என்பனவற்றை முக்கியமாகக் கொண்ட இலங்கையின் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 62 சதவீதம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக வழிப்படுத்தப்பட்டது. அரசாங்கம் ஆடைகள் மற்றும் கறுப்பு மிளகு மீதான அளவுசார் கட்டுப்பாடுகள், சுங்க தீர்ப்பனவுகள் மற்றும் குறிப்பாக தேயிலை மீதான மாதிரிப் பரீட்சிப்புக்கள் மீதான நடைமுறைகள், மிகையான ஆவணப்படுத்தல் கட்டணங்கள் மற்றும் தாமதங்கள் போன்ற இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையுடன் தொடர்பான நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. அதேவேளை, பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திகள் வெற்றிலை மற்றும் நடுத்தர அடர்த்தியைக்கொண்ட கண்ணாடி இழை அட்டைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. குறைந்த வர்த்தக அளவுகள் காணப்பட்டமைக்கிடையிலும் பயன்பாட்டு நியதிகளில், பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடான ஏற்றுமதிகள் ஏறத்தாழ 67 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாக விளங்கிய வேளையில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள் ஏறத்தாழ 10 சதவீதத்திற்கும் குறைவானதாக விளங்கி 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாட்டிலிருந்து நன்மைகள் பெறப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. இதன்படி, முன்னுரிமைகளின் நியதிகளின் கீழ் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இரண்டின் கீழும் இலங்கை சாதகமான வர்த்தக மீதியைப் பேணியமைக்கு இது சான்றாக விளங்குகிறது.

**பிராந்திய மற்றும் பல்புடை முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் மீதான ஈடுபாடுகள் பிராந்திய வர்த்தக மற்றும் பணிகளின் வலையமைப்பிற்கிடையே அதிகரித்த ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு மேலும், வலுப்படுத்தப்படவேண்டிய தேவைப்பாடுள்ளது.** 2006இல் ஆரம்பிக்கப்பட்ட தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தென்னாசிய முன்னுரிமை வர்த்தகப்படுத்தல் ஒழுங்கிற்குப் பதிலாக முன்னுரிமை வர்த்தகத்தினை ஊக்குவிப்பதன் ஊடாக சார்க் பிராந்தியத்திலுள்ள பொருளாதாரத்தின் ஒருங்கிணைப்பினை மேலும் அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டிருந்தது. இது இக்காலப்பகுதியில் தென்னாசிய முன்னுரிமை வர்த்தகப்படுத்தல் ஒழுங்குகளின் பயன்பாட்டில் வீழ்ச்சியைத் தோற்றுவித்த வேளையில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கையின் பயன்பாடும் 2018இல் குறைவாகவே காணப்பட்டது. தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியத்தின் வர்த்தக தாராளமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்கள் முறையே 2015இலும் 2018 திசெம்பரிலும் இலங்கையினால் பூர்த்தி செய்யப்பட்டன. 2018இல் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் முக்கியமாக கருந்தேயிலை, செயற்படுகரியம், தெரிவுசெய்யப்பட்ட ஆடைகள், தேங்காய் உற்பத்திகள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய சீனாவிற்கான ஏற்றுமதிகள் அதிகரித்தன. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையில் பங்கேற்கும் நாடுகள் 2017 செத்தெம்பரில் நடைபெற்ற 51ஆவது துணைநில் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி 2018 சனவரி 01 இலிருந்து சலுகைகளின் நான்காவது சுற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கிக் கொண்டதுடன் இலங்கை 2018 மாச்சில் சலுகைகளை நடைமுறைப்படுத்தியது. அதேவேளை, 2018 நவெம்பரில் நடாத்தப்பட்ட பல்துறை ரீதியான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கு வங்காள விரிகுடாவின் 21ஆவது வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழு முன்முயற்சிகளை மேற்கொண்டதுடன் வணிகப் பொருட்கள் தொடர்பில் பல்துறை ரீதியான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்கான உடன்பாடொன்று எட்டப்பட்டது.

**உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டமையுடன் சேர்ந்து உலக வர்த்தக அமைப்புடனான ஈடுபாடு 2018இல் தொடர்ந்தது.** இலங்கை 2016 மேயில் வர்த்தகத்திற்கான வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை உறுதிப்படுத்தியதுடன் இது 2017 பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்தது. அதிலிருந்து இலங்கை 'அ', 'ஆ', 'இ' வகைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு உலக வர்த்தக அமைப்பிற்கான அதன் கடப்பாடுகளை இலங்கை கவனத்திற்கொண்டிருந்தது. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் 2018 யூலையில் வர்த்தக தகவல் நுழைவாயிலொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இது வர்த்தகம் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தகவலினை தனியொரு நுழைவாயிலில் உள்ளடக்கியிருந்தது. 43 ஆர்வலர்களினால் ஆதரவளிக்கப்பட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்படும் வர்த்தகத் தகவல் நுழைவாயிலில் சுமூகமான வர்த்தகப் பாய்ச்சலை உறுதிப்படுத்துவதற்காக எல்லை கடந்த வர்த்தகத்திற்கு வசதியளிப்பதில் ஒரு முக்கிய நடவடிக்கையாக செயற்படுகின்றது. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் மற்றொரு முக்கிய நடவடிக்கையாக விளங்கும் தேசிய ஒரே கூரையின் கீழான நிலையம் உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருவதுடன் இதன்

செயற்றிட்ட வரைவு இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. 2017 திசெம்பரில் நடாத்தப்பட்ட 11ஆவது உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்ட மாநாட்டினைத் தொடர்ந்து தற்போதைய உலகளாவிய பின்னணியில் வர்த்தக நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அதிகரித்தளவிலான பிரச்சனைகள் உருவாகியமைக்கு மத்தியிலும் இவ்விடயம் தொடர்பான பிரச்சனை தொடர்பில் இன்னமும் இணக்கப்பாடுகளை எய்தவேண்டியிருக்கிறது. அத்தகைய புதிய பிரச்சனைகள் இ-வர்த்தகம், முதலீடுகளை வசதிப்படுத்தல், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பணிகளில் உள்நாட்டு ஒழுங்குவிதிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

**ஏற்றுமதிகளை ஊக்குவிப்பிற்கான கொள்கை மற்றும் நிறுவன ரீதியான ஆதரவினை வலுப்படுத்துகின்ற நோக்குடன் 2018இல் பல முக்கிய முன்னெடுப்புக்கள் நடைமுறைக்கிடப்பட்டன.** புதிய வர்த்தகக் கொள்கையின் கீழான வழிமுறைகள் வர்த்தகத் தாராளமயப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் உற்பத்திப் பகிர்வு வலையமைப்பில் பங்கேற்பு ஆகிய துறைகளில் முன்னெடுக்கப்பட்டன. இது புதிய வர்த்தகக் கொள்கையினால் முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களினூடாக உள்நாட்டுக் கைத்தொழில்களை மறைமுகமாகப் பாதிப்படையச் செய்யக்கூடிய புதிய சந்தைச் சூழ்நிலைகளுக்கு நிறுவனங்களும் தொழிலாளர்களும் சுமூகமாக மாறிச்செல்வதற்கு உதவும் விதத்தில் வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வர்த்தக வசதிப்படுத்தல் பொதியினை உற்பத்தித்திறன் வாய்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவதனை இயலச்செய்யும் நோக்குடன் வர்த்தக உற்பத்தித்திறன் குழு மற்றும் ஒரு கூட்டான வழிகாட்டல் குழுவினை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2019 மாச்சில் வழங்கியது. அதேவேளை, அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் சேர்ந்து 2018 யூலையில் தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022 இனை நடைமுறைக்கிட்டதுடன் (தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022 தொடர்பான மேலதிக விபரங்களுக்கு சிறப்புக்குறிப்பு 2 பார்க்கவும்) தேசிய ஏற்றுமதி உபாயத்தின் கீழ் நடவடிக்கைக்கான திட்டங்கள் ஏற்கனவே தொழிற்படுத்தப்பட்டிருக்கின்றன. குறைந்த ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தல் போன்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு, "தேசிய தர உட்கட்டமைப்பு" மற்றும் "புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை உபாயம் 2018 - 2022" போன்ற பல உபாயங்களை அபிவிருத்தி செய்தது. மேலும், அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு இலங்கையின் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த தரமிடலை 2020 அளவில் 70 இற்கு முன்னேற்றும் நோக்குடன் 2017இல் அடையாளம் காணப்பட்ட முதலீட்டுச் சூழல் சீர்திருத்தங்களுக்கான வழிகாட்டலின் கீழ் எட்டு செயலணிக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தது. இச்செயலணிக் குழு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பல நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டன. இது 2019 இற்கான வியாபாரத்தைச் செய்யுங்கள் தரமிடலினை 11 புள்ளிகளினால் 100 இற்கு மேம்படுத்த உதவியது. தேசிய ஏற்றுமதி உபாயங்கள் 2018 - 2022 மற்றும் நடவடிக்கைத் திட்டத்தின் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடப்பட்டமைக்குப் புறம்பாக, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை புதிய பல வழிமுறைகளை முன்னெடுத்த வேளையில் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பாக ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களையும் தொடர்ந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது சந்தைகளை அணுகுவதற்கான ஆதரவுத்திட்டம், தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புக்கள், இலத்திரனியல் மற்றும் மின்னியல் கூறுகள் துறைக்கான பல் தேசிய கூட்டுத்தாபன விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல் மற்றும் படகுகளைக் கட்டுகின்ற துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வர்த்தக ஊக்குவிப்புத் தளமொன்றை நிறுவுதல் மற்றும் 2018ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி "ஆரம்புமா" கொடுகடன் திட்டம் போன்ற பல புதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. மேலும், 2000 பிரதேச ரீதியான சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை புதிய ஏற்றுமதிச் சம்பியன்களாக மாற்றுதல், பெண் தொழில்முயற்சியாண்மையாளர்களாக உயர்த்துதல் மற்றும் ஒரு கிராமம் ஒரு உற்பத்தி எனும் எண்ணக்கருவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள் தொடர்பில் வேளாண்மைக் கொத்தணிகளை ஏற்படுத்துதல் போன்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் நேரடி மற்றும் மறைமுக புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கியது. தெரிவுசெய்யப்பட்ட புதிய ஏற்றுமதியாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிக்கான விஜயங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பனவற்றினூடாக நன்மையடைந்தனர். மேலும், சந்தைகளை அணுகும் தன்மை மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் வசதிப்படுத்தல் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தக பொருட்காட்சி போன்றவற்றில் பங்கேற்றல், உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் வர்த்தக தூதுக்குழுக்களுக்கு வசதியளித்தல், வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்காக ஏற்றுமதியாளர்கள் ஆய்வரங்குகளை நடாத்துதல் மற்றும் விருது வழங்கும் விழாக்களினூடாக ஏற்றுமதியாளர்களைப் பாராட்டுதல் போன்றவற்றுடன் தொடர்பான வழமையான நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தன. வர்த்தக சம்மேளனங்களுங்கூட இவ்வாண்டு முழுவதும் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்குப் பங்களித்தன. இது, கொள்கை வகுத்தல், குறைபாடுகளைக் கையாளுதல் மற்றும் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்தல் போன்ற தொடர்பில் அரச மற்றும் தனியார் துறை ஆர்வலர்களுடன் உள்ளக இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கு உதவியிருக்கிறது.

வர்த்தக சம்மேளனங்கள் ஆர்வலர்களுடனான ஆலோசனைகள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தன. அதேவேளை, இலங்கைச் சுங்கம் கொள்கலன்களைக் கையாளுதல், தன்னியக்கமான தீர்ப்பனவுகள், பரீட்சிப்பு மற்றும் கண்காணிப்பு செயன்முறைகள் தொடர்பான அதன் நடவடிக்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தியது.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல தீர்வை மற்றும் வர்த்தக ஆதரவு சட்டவாக்கங்களுக்குப் புறம்பாக 2019 வரவுசெலவுத் திட்டம் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக பல புதிய முன்மொழிவுகளை அறிவித்தது.** 2019ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் 5 - ஆண்டு காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் மீதான மேலதிகத் தீர்வைகளை தொடர்ந்தும் படிப்படியாக அகற்றுவதற்கு முன்மொழிந்திருக்கிறது. மேலும், ஏற்றுமதிச் சந்தைகளை அணுகுகின்ற நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டம் என்பன ஊடாக வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேசிய ஏற்றுமதி உபாயம் மற்றும் புதிய வர்த்தகக் கொள்கை என்பனவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் புதிய ஆராய்ச்சி வசதிகள், முன்னுரிமைத் துறைகளில் வர்த்தக இல்லங்கள் என்பனவற்றை நிறுவுவதற்கும் துறைமுக வசதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் தனியார் துறை ஊக்குவிக்கப்படும். அதேவேளை, புதிய உற்பத்திகளை புத்தாக்கம் செய்யும் அபிவிருத்திகளுக்கு உதவும்பொருட்டு தொழில்முயற்சி புத்தாக்க நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், பிங்கிரிய, வகவத்த ஆகிய இடங்களில் இரண்டு கைத்தொழில் வலயங்களை ஆரம்பிக்கவுள்ள வேளையில் வடக்கிலும் கிழக்கிலும் பல கைத்தொழில் பேட்டைகளை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்காக சுற்றுலா விடுதிகளை புதிதாகத் திருத்தியமைத்தல், கட்டுமானப் பொருட்கள் போன்ற தெரிவுசெய்யப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரிவுகளில் பயன்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகள் மீதான மேலதிகத் தீர்வையும் சுங்கத் தீர்வைகளும் குறைக்கப்பட்டன. உந்து ஊர்திகளின் இறக்குமதிகளை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு, உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை மேல்நோக்கி திருத்தப்பட்டுள்ள வேளையில் நாணயக்கடிதத்திற்கெதிரான அளவு வைப்புத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளன.

**புதிதாக முன்னெடுக்கப்பட்டிருக்கும் உபாயங்கள், கொள்கைச் சீர்திருத்தங்கள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் போட்டித்தன்மைவாய்ந்த செலாவணி வீதங்கள் என்பன எதிர்காலத்தில் வர்த்தகச் செயலாற்றத்திற்கு பாதுகாப்பாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் உலகளாவிய நிகழ்வுகளும் தீர்க்கப்படாத உள்நாட்டுத் தடைகளும் வர்த்தகச் செயலாற்றத்தின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்கு தொடர்ந்தும் சவாலாக அமையும்.** முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள், வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணில் ஏற்பட்ட முன்னேற்றம், புதிய இருபுடை சுதந்திர வர்த்த உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தல், தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022 மற்றும் வர்த்தக தகவல் நுழைவாயில் என்பன நடைமுறைக்கிடப்பட்டமை, வர்த்தக நிவாரணச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீத அமைப்பு பேணப்பட்டமை என்பன 2018இல் வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றத்திற்கு பக்கபலமாக அமைந்த முக்கியமான சாதனைகளாகும். 2017இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + மீளக்கிடைத்தமை, 2016இல் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடை அகற்றப்பட்டமை என்பன ஏற்றுமதிகளின் மீது சாதகமான பெறுபேறுகளை விளைவித்தன. எனினும், முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த இறக்குமதிகள், தாழ்ந்த உற்பத்தித்திறன் மற்றும் உயர்ந்த உற்பத்திச் செலவு காரணமாக உருவான தாழ்ந்த போட்டித்தன்மை காலநிலை மாற்றங்களின் தாக்கம் போன்றவை நீடித்த நிலையான வர்த்தகச் செயலாற்றம் எதிர்நோக்கும் முக்கிய உள்நாட்டுச் சவால்களாக விளங்குகின்றன. மேலும், அபிவிருத்தி அடைந்த நாடுகளினால் பின்பற்றப்பட்ட பாதுகாப்புச் சார்ந்த வர்த்தகக் கொள்கைகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவிற்கிடையிலான வர்த்தகப் பிணக்குகளுக்கு வழிவகுத்ததுடன் உலகளாவிய வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மீதான கசியும் தாக்கங்கள், பிறெக்சிட் முக்கிய வர்த்தகப் பங்காளர்களிடையே நிகழும் புவியியல் சார்ந்த பதட்டங்கள், உலகளாவிய பெறுமதிச் சங்கிலியின் பங்கேற்புக் குறைவாகக் காணப்பட்டமை, உயர்ந்த மற்றும் தளம்பலான மசகெண்ணெய் விலைகள் மற்றும் உயர் மத்தியதர வருமான அந்தஸ்திற்கு நாடு உயர்வடைவதன் காரணமாக முன்னுரிமை வசதிகளை இழப்பதனால் ஏற்படும் இடர்நேர்வு என்பன கரிசனைக்குரிய முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. எனினும், வர்த்தகத் தாராளமயப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உபாயங்கள் மற்றும் தேசிய வர்த்தகக் கொள்கை, தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022, முதலீட்டாளர் வழிகாட்டல் போன்ற சீர்திருத்தங்களும் வெளிநாட்டு வர்த்தகத்திற்குக் காணப்படும் முக்கிய பிரச்சனைகளையும் சவால்களையும் அடையாளங் கண்டிருப்பதுடன் அவற்றிற்கான நிவாரண வழிமுறைகளும் நடைமுறைக்கிடப்பட்டிருக்கின்றன. அடையாளங் காணப்பட்ட உபாயங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவது தவிர்க்கமுடியாததாக இருக்கின்ற போதும், பிரச்சனைகளின் தன்மையினையும் அமைப்பியல் தன்மையைக் கருத்திற்கொள்கையில் நிவாரண வழிமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு கணிசமான காலம் எடுக்கக்கூடும். உயர்ந்த உற்பத்திச் செலவுகள் மற்றும் தேவையான தொழிலாளர்கள் போதுமானளவில் இல்லாமை போன்ற வழங்கல் பக்கத்தடைகளை அகற்றுவதற்கும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் ஆதரவளிக்கப்பட்ட ஏற்றுமதிக் கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்கும் வர்த்தக மற்றும்

முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழலொன்றினை உருவாக்குவதற்கு நிறுவன ரீதியான கட்டமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். உலகளாவிய சிக்கல்கள் அதிகரித்த வர்த்தக உறவுகளினூடாக தீர்க்கப்பட வேண்டும். இதன்படி, புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், அதேபோன்று அதிகரித்த பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றினூடாக சந்தையை அணுகுவதனை அதிகரிப்பதற்கு மேலும் முயற்சிகள் எடுக்கப்பட்ட வேளையில் ஏற்றத்தாழ்வற்ற வெளிநாட்டுக் கொள்கைகள் பேணப்பட வேண்டும். இலங்கை மேல் நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்திற்கு உயர்த்தப்படுகின்றமை நன்மையளிக்கக்கூடியதாகவிருந்த போதும் நாடு முன்னுரிமைச் சந்தை அணுகுமுறைகள் அகற்றப்படவுள்ளமை போன்ற இவ்வந்தஸ்துடன் தொடர்பான இடர்நேர்வுகளை எதிர்நோக்குவதற்கு தயாராக இருக்கவேண்டுமென்பதுடன் அந்நிலைமைக்கு சுமூகமாக மாறிச்செல்வதற்கு தேவையான சீராக்கங்களையும் முன்கூட்டியே திட்டமிடப்படுதல் வேண்டும்.


## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**2017இல் வலுவாக மீள் உத்வேகமடைந்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இலும் அதன் வளர்ச்சி உத்வேகத்தினை தொடர்ந்தும் பேணின.** ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளுக்கான பொதுவாக்கப்பட்ட முறைமை + வசதி மீண்டும் கிடைக்கப்பெற்றமை, தூண்டுதலளிக்கும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் என்பன வலுவான நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் மத்திய வங்கியினால் பேணப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கொள்கை என்பனவற்றுடன் சேர்ந்து ஏற்றுமதி வருவாய்களின் செயலாற்றத்திற்குப் பக்கபலமாக விளங்கின. இதன்படி, 2018இல் ஆண்டின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 11,360 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 11,890 மில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 2018இல் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஏற்றுமதி வருவாய்களின் விரிவாக்கத்திற்குப் பங்களித்த வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

**ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + வசதி மீண்டும் கிடைத்தமையின் ஆதரவின் முக்கிய காரணமாக 2018இன் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.** மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 9,258 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தன. புடவை மற்றும் ஆடைகள்,


வரைபடம் 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2018




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, மற்றும் பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களிலிருந்தான வருவாய்களில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த செயலாற்றம் இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது. 2017 மேயிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை ு வசதி மீண்டும் கிடைக்கப்பட்டமையின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2018இல் ஐ.அ.டொலர் 5,318 மில்லியன்களுக்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்தில் மிகப் பெரும் சந்தையாக விளங்கிய ஐக்கிய இராச்சியத்திலிருந்தான கேள்வியில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 2,053 மில்லியனுக்கு 3.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் சுவீடன் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த கேள்வியே காரணமாகும். மேலும், ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்

வரைபடம் 5.4
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஸ்பி/ ஜிஎஸ்பி + திட்டத்தின் கீழான ஏற்றுமதிகள்




*மூலம்:* வணிகத்திணைக்களம்

6.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இந்தியா, யப்பான், அவுஸ்திரேலியா மற்றும் மெக்சிக்கோ போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றிய சந்தைகள் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, வியட்நாம் மற்றும் துருக்கி என்பனவற்றிலிருந்து புடவைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியின் காரணமாக இவ்வகைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018இல் முறையே 26.6 சதவீதத்தினாலும் 10.9 சதவீதத்தினாலும் அதிகரித்தன. 2018இல் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 43.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளினதும் நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் அதிகரித்த விலைகளினதும் இணைந்த தாக்கமே காரணமாக அமைந்தது. ஆண்டுக்காலப்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த எண்ணெய் விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீர்க்கல மற்றும் வானூர்தி எண்ணெய் விலைகள் 29.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தன. இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முன்னயை ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 875 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இறப்பர் டயர் ஏற்றுமதிகளில் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றமே காரணமாகும். மேலும், 2018இல் உணவு, குடிபானம் மற்றும் புகையிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 462 மில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு தானியத் தயாரிப்புக்கள் நீங்கலாக அனைத்துத் துணை வகைகளினதும் மேம்பட்ட செயலாற்றமே காரணமாக அமைந்தது. 2018இல் பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளிலும் குறிப்பாக இலத்திரனியல் கருவிகள் மற்றும் காப்பிடப்பட்ட கம்பிகள், கம்பி வடங்கள் மற்றும் மின் கடத்திக் கருவிகள் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்த செயலாற்றமே காரணமாகும். மேலும், இரத்தினக்கற்கள்,

அட்டவணை 5.3
**ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**

| வகை | 2017 | | 2018 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,767.2** | **24.4** | **2,579.3** | **21.7** | **-187.9** | **-6.8** | **-35.5** |
| தேயிலை | 1,529.8 | 13.5 | 1,428.5 | 12.0 | -101.3 | -6.6 | -19.1 |
| இறப்பர் | 38.9 | 0.3 | 31.6 | 0.3 | -7.3 | -18.8 | -1.4 |
| தெங்கு | 347.9 | 3.1 | 311.0 | 2.6 | -36.9 | -10.6 | -7.0 |
| வாசனைப் பொருட்கள் | 406.2 | 3.6 | 360.2 | 3.0 | -46.0 | -11.3 | -8.7 |
| மரக்கறிகள் | 28.5 | 0.3 | 28.2 | 0.2 | -0.2 | -0.8 | ... |
| தயாரிக்கப்படாத புகையிலை | 36.5 | 0.3 | 35.6 | 0.3 | -0.9 | -2.5 | -0.2 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 138.7 | 1.2 | 118.4 | 1.0 | -20.3 | -14.7 | -3.8 |
| கடல் உணவு | 240.6 | 2.1 | 265.8 | 2.2 | 25.2 | 10.5 | 4.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **8,541.9** | **75.2** | **9,258.2** | **77.9** | **716.2** | **8.4** | **135.3** |
| புடவைகளும் ஆடைகளும் | 5,031.9 | 44.3 | 5,317.7 | 44.7 | 285.7 | 5.7 | 54.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 835.4 | 7.4 | 875.3 | 7.4 | 39.9 | 4.8 | 7.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 434.3 | 3.8 | 622.1 | 5.2 | 187.8 | 43.2 | 35.5 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 257.5 | 2.3 | 278.0 | 2.3 | 20.5 | 8.0 | 3.9 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 392.7 | 3.5 | 462.3 | 3.9 | 69.6 | 17.7 | 13.2 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 370.8 | 3.3 | 434.8 | 3.7 | 64.0 | 17.3 | 12.1 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 48.8 | 0.4 | 31.7 | 0.3 | -17.2 | -35.2 | -3.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 162.3 | 1.4 | 120.3 | 1.0 | -42.0 | -25.9 | -7.9 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 158.4 | 1.4 | 147.7 | 1.2 | -10.7 | -6.8 | -2.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 33.7 | 0.3 | 31.3 | 0.3 | -2.5 | -7.3 | -0.5 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 816.1 | 7.2 | 937.1 | 7.9 | 121.1 | 14.8 | 22.9 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **34.5** | **0.3** | **34.4** | **0.3** | **-0.1** | **-0.4** | **...** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **16.9** | **0.1** | **17.8** | **0.1** | **1.0** | **5.8** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **11,360.4** | **100.0** | **11,889.6** | **100.0** | **529.2** | **4.7** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **152.46** | | **162.54** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள் :* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், இராசாயன உற்பத்திகள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டுப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உத்வேகத்திற்குப் பங்களித்தன. எனினும், போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 2018இல் ஐ.அ.டொலர் 120 மில்லியனுக்கு 25.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2017இல் சிங்கப்பூரிற்கு மூன்று கப்பல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமையினால் ஏற்பட்ட தளத்தாக்கமே முக்கிய காரணமாகும். அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முறையே 6.8 சதவீதத்தினாலும் 35.2 சதவீதத்தினாலும் 7.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

**2018இல் வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் தேய்வடைந்தது.** மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறிய வேளாண்மை ஏற்றுமதிகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2018இல் ஐ.அ.டொலர் 2,579 மில்லியனுக்கு 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு கடலுணவு தவிர்ந்த பெரும்பாலும் அனைத்து முக்கிய துணை வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாகும். சாதகமான பன்னாட்டு தேயிலை விலைகளின் உதவியுடன் முன்னைய ஆண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இல் ஐ.அ.டொலர் 1,428 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த ஏற்றுமதி விலைகள் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு குறைவடைந்தமை ஆகிய இரண்டினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். கருந்தேயிலை உற்பத்தியின் உயர்ந்த அளவு குறிப்பாக ஆபிரிக்காவிலிருந்தான ஏற்றுமதி என்பன மொம்பாசா மற்றும் கொல்கத்தா ஏலங்களில் பன்னாட்டு தேயிலை விலைகளில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தபோதும் இலங்கைத் தேயிலை விலைகள் ஒப்பீட்டு ரீதியில் வலுவானதாகக் காணப்பட்டமைக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பலும் ஏனைய ஏல நிலையங்களில் காணப்பட்ட பெறுமதி இழப்புக்களின் தாக்கம் குறைவாக இருந்தமையும் காரணங்களாக அமைந்தன. எனினும், 2018இன் முதற்காலாண்டுப் பகுதியில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதும் தேயிலையின் கி.கிறாமொன்றிற்கான சராசரி ஏற்றுமதி விலை 2017இன் ஐ.அ.டொலர் 5.29 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 5.06 இற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஈரான் மற்றும் ருஷியா ஆகிய நாடுகள் மீதான தடையினைத் தொடர்ந்து அந்நாடுகளுடனான கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகமே காரணமாகும். வேளாண் இரசாயனங்களின் பயன்பாடு மீது அவ்வப்பொழுது செய்யப்படும் கொள்கை மாற்றங்கள், வேலை தொடர்பான பேச்சுவார்த்தை மற்றும் வேலை தொடர்பான பேச்சுவார்த்தை தவிர்ந்த ஏனைய காரணிகளினால் வேலை நிறுத்தப்பட்டமை மற்றும் சில மாதகாலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் என்பன காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த உற்பத்தியின் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018இல் துருக்கி, இலங்கைத் தேயிலையின் முதலாவது இறக்குமதியாளராக தொடர்ந்தும் இருந்ததுடன் அதனைத் தொடர்ந்து ரூசியா, ஈராக் மற்றும் ஈரான் என்பன காணப்பட்டதுடன், கூட்டாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏறத்தாழ 41 சதவீதத்திற்கு பங்களித்தன. உள்ளீடு அல்லா தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதும் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 311 மில்லியன்களுக்கு 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாகும். மோசமான வானிலை நிலைமைகளின் பிந்திய தாக்கத்தின் காரணமாக தெங்கு உற்பத்தி குறைவடைந்தமையினைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு முதலரைப்பகுதியில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 21.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைவடைந்தமை முக்கிய காரணமாகும். அதேவேளை, தெங்கு உள்ளீடு அல்லாத உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அனைத்து துணை வகைகளினதும் குறிப்பாக தும்பு ஏற்றுமதிகளில் காணப்பட்ட உயர்ந்த செயலாற்றமே காரணமாக அமைந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் வாசனைத் திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 360 மில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு கறுவா தவிர்ந்த பெரும்பாலும் மற்றைய அனைத்து வகை வாசனைத் திரவியங்களினதும் குறைந்த செயலாற்றமே இதற்குக் காரணமாகும். மோசமான அறுவடைகளின் காரணமாக கராம்பு, மிளகு மற்றும் சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்றவற்றின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைவடைந்தமையின் காரணமாக அவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் காரணமாக கறுவா ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 118 மில்லியனுக்கு 14.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறிப்பாக, பாக்கு, வெற்றிலை மற்றும் பழவகை போன்ற பெரும்பாலான வகைகளின் குறைந்த செயலாற்றமே காரணமாகும். மேலும், இறப்பர், காய்கறிகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 2018இல் வீழ்ச்சியடைந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீதான தடை அகற்றப்பட்டமை மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை +

5

வசதி மீண்டும் கிடைக்கப்பெற்றமை என்பனவற்றின் மூலமான நன்மைகளிலிருந்து 2018இல் கடலுணவு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 266 மில்லியனுக்கு 10.5 சதவீதத்தினால் தொடர்ந்தும் உயர்வடைந்தன. இதன்படி, ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான கடலுணவு ஏற்றுமதிகள் இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 92 மில்லியனுக்கு 37.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தான உயர்ந்த கேள்வியே காரணமாகும்.


**2018இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 34 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.4 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன.** இரும்புத்தாது, கழிவு இரும்பு மற்றும் சாம்பல் கட்டிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த போதும் கற்கள் மற்றும் பெறுமதிமிக்க உலோகங்கள் என்பனவற்றின் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

### 5.3.2. இறக்குமதிச் செயலாற்றம்

**2018 முதலரைப்பகுதியில் வணிகப் பொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் கணிசமான வளர்ச்சி ஆண்டின் பின்னரைப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் மற்றும் இலங்கை ரூபாவின் ஒப்பீட்டு ரீதியில் கடுமையான தேய்வும் ஒன்றுசேர்ந்து காரணங்களாக அமைந்தன.** இதன்படி, இறக்குமதிகள் மீதான செலவினம் 2017இன் ஐ.அ.டொலர் 20,980 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 22,233 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் எரிபொருள், தனியாள் உந்து ஊர்திகள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மற்றும் வளமாக்கி என்பன மீது உறப்பட்ட உயர்ந்த செலவினம் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. அதேவேளை, எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 18,081 மில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

**மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 56 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2018இன் இறக்குமதிச் செலவினத்தின் விரிவாக்கத்திற்குப் பெருமளவிற்குப் பங்களித்தது. இதன்படி 2018இல் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 12,488 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,152 மில்லியனுக்கு 21.1 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மசகெண்ணெய் இரண்டினதும் சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் இவ்வகைகளின் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் மிதமாக அதிகரித்தமையுமே முக்கியமான காரணங்களாகும். மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2017இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 57.79 இலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 76.25 இற்கு 31.9 சதவீதத்தினால் அதிகரித்து பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த எண்ணெய் விலைகளை பிரதிபலித்தது. அதேவேளை, நிலக்கரி மீதான இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 237 மில்லியனுக்கு 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நிலக்கரி மூலமான வலு உருவாக்கம் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் அளவு குறைவடைந்தமையே காரணமாகும். மேலும், புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிக்கான உயர்ந்த கேள்வியுடன் இணைந்து செல்லும் விதத்தில் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2018இல் 4.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெரும்பாலும் அனைத்து துணை வகைகளினதும் குறிப்பாக துணிகள் மற்றும் நூல் இழைகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே வழிவகுத்தது. 2018இல் வளமாக்கி மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமானளவிற்கு அதிகரித்தமைக்கு வளமாக்கிகளின் இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த அளவுகளினதும் சராசரி இறக்குமதி விலைகளினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். வளமாக்கியின் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 2018இல் 116.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமைக்கு பகுதியளவில் 2017இல் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளின் விளைவாக வேளாண்மை நடவடிக்கைகள் குறைவடைந்தமையினால் 2017இல் வளமாக்கிக்கான குறைந்த கேள்வியின் தளத்தாக்கம் காசுக் கொடைகளுக்குப் பதிலாக வளமாக்கி உதவு தொகைகள்

வரைபடம் 5.5
இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2018




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2017 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2017 பங்கு (ஆ) % | 2018 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2018 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,502.5** | **21.5** | **4,979.7** | **22.4** | **477.1** | **10.6** | **38.1** |
| உணவும் குடிபானங்களும் | 1,841.1 | 8.8 | 1,606.1 | 7.2 | -235.0 | -12.8 | -18.8 |
| அரிசி | 300.9 | 1.4 | 106.8 | 0.5 | -194.1 | -64.5 | -15.5 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 258.0 | 1.2 | 249.7 | 1.1 | -8.3 | -3.2 | -0.7 |
| பால் உற்பத்திகள் | 315.8 | 1.5 | 332.3 | 1.5 | 16.5 | 5.2 | 1.3 |
| பருப்பு வகை | 114.4 | 0.5 | 78.6 | 0.4 | -35.8 | -31.3 | -2.9 |
| ஏனையவை | 851.9 | 4.1 | 838.7 | 3.8 | -13.2 | -1.5 | -1.1 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 2,661.5 | 12.7 | 3,373.6 | 15.2 | 712.1 | 26.8 | 56.8 |
| வாகனங்கள் | 772.7 | 3.7 | 1,573.5 | 7.1 | 800.8 | 103.6 | 63.9 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 520.0 | 2.5 | 532.0 | 2.4 | 12.0 | 2.3 | 1.0 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 258.2 | 1.2 | 232.2 | 1.0 | -25.9 | -10.1 | -2.1 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 369.0 | 1.8 | 310.3 | 1.4 | -58.8 | -15.9 | -4.7 |
| ஏனையவை | 741.6 | 3.5 | 725.6 | 3.3 | -16.0 | -2.2 | -1.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,435.8** | **54.5** | **12,488.0** | **56.2** | **1,052.3** | **9.2** | **84.0** |
| எரிபொருள் | 3,427.9 | 16.3 | 4,151.9 | 18.7 | 724.0 | 21.1 | 57.8 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,724.2 | 13.0 | 2,858.5 | 12.9 | 134.3 | 4.9 | 10.7 |
| வைரங்கள், அருமையான கற்கள் மற்றும் உலோகங்கள் | 772.4 | 3.7 | 572.7 | 2.6 | -199.7 | -25.9 | -15.9 |
| இரசாயன உற்பத்திகள் | 834.5 | 4.0 | 904.2 | 4.1 | 69.7 | 8.4 | 5.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 356.6 | 1.7 | 373.5 | 1.7 | 16.9 | 4.7 | 1.3 |
| வளமாக்கி | 102.8 | 0.5 | 261.6 | 1.2 | 158.8 | 154.4 | 12.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 3,217.3 | 15.3 | 3,365.6 | 15.1 | 148.3 | 4.6 | 11.8 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,894.7** | **23.3** | **4,690.4** | **21.1** | **-204.3** | **-4.2** | **-16.3** |
| கட்டடப் பொருட்கள் | 1,591.4 | 7.6 | 1,524.5 | 6.9 | -66.8 | -4.2 | -5.3 |
| போக்குவரத்துக் கருவிகள் | 674.9 | 3.2 | 668.1 | 3.0 | -6.8 | -1.0 | -0.5 |
| பொறியும் கருவியும் | 2,620.6 | 12.5 | 2,491.6 | 11.2 | -129.0 | -4.9 | -10.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 7.8 | ... | 6.1 | ... | -1.7 | -22.4 | -0.1 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **146.8** | **0.7** | **74.6** | **0.3** | **-72.1** | **-49.1** | **-5.8** |
| **மொத்த இறக்குமதிகள் (இ) (ஈ)** | **20,979.8** | **100.0** | **22,232.7** | **100.0** | **1,252.9** | **6.0** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (உ)** | **152.46** | | **162.54** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ ஐ.அ.டொ. நாணயமாற்று வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய க்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

5

மீள அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் சேர்த்து 2018இல் நெல் பயிரிடப்பட்ட பிரதேசம் விரிவடைந்தமை போன்றவற்றின் காரணமாக அமைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த வளமாக்கி விலைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வளமாக்கியின் சராசரி இறக்குமதி விலைகள் அதிகரித்தன. மேலும், இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், அடிப்படை உலோகம் மற்றும் தாள் மற்றும் தாள் அட்டைகள் மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்து இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினத்தின் அதிகரிப்பிற்கு பங்களித்தன.

**கொள்கை வழிமுறைகளைத் தொடர்ந்து தங்க இறக்குமதிகளின் கடுமையான வீழ்ச்சி மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைவதற்குப் பங்களித்தது.** வைரங்கள், பெறுமதி மிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் 25.9 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சிடையந்தமைக்கு, தங்கத்தின் இறக்குமதிகள் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சுங்கத் தீர்வையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தங்கத்தின் இறக்குமதியில் 32.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சி அறிக்கையிடப்பட்டமையே காரணமாகும். 2018இன் முதல் நான்குமாத காலப்பகுதியில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 437 மில்லியனுக்கு 126.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இந்தியாவில் காணப்பட்ட தங்கத்தின் மீதான 10 சதவீத சுங்கத் தீர்வையினதும் இலங்கையின் பூச்சிய சதவீதத் தீர்வையினதும் காரணமாக தங்க இறக்குமதிகள் தொடர்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தீர்வை வேறுபாடுகளின் விளைவாக ஏற்படக்கூடிய சட்டத்திற்கு மாறான வணிகத்தினைப் பரிசீலனையில் கொண்டு இலங்கை அரசாங்கம் 2018 ஏப்பிறலிலிருந்து தங்க இறக்குமதிகள் மீது 15 சதவீத சுங்கத்தீர்வையினை மீள விதித்தது. இதன் விளைவாக, தங்கத்தின் மீதான இறக்குமதிச் செலவினம் 2018

மேயிலிருந்து கணிசமாக வீழ்ச்சியடைந்து ஆண்டின் எஞ்சிய எட்டுமாத காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட சிறிதளவு பெறுமதியை அடைந்தது. அதேவேளை, இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மூலப்பொருள் வடிவிலான குறைந்த இறப்பர் இறக்குமதிகளே காரணமாக அமைந்த வேளையில், கனிம உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினமும் சிமெந்துச் சூளைக்கற்களின் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமையின் காரணமாக 14.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உணவுத் தயாரிப்புக்கள் மீதான செலவினமும் 2018இல் வீழ்ச்சியடைந்தன.

**2018இல் மொத்த இறக்குமதிகளில் 22 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாக அமைந்தது.**

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **600** | **286** | **30** | **748** | **249** |
| 1ஆம் காலாண்டு | 6 | 176 | 6 | 259 | 203 |
| 2ஆம் காலாண்டு | 102 | 91 | 9 | 79 | 37 |
| 3ஆம் காலாண்டு | 145 | 9 | 6 | 160 | 2 |
| 4ஆம் காலாண்டு | 348 | 9 | 8 | 250 | 7 |
| **கோதுமை** | **1,179** | **1,208** | **948** | **1,250** | **1,297** |
| 1ஆம் காலாண்டு | 271 | 242 | 171 | 291 | 412 |
| 2ஆம் காலாண்டு | 324 | 342 | 326 | 334 | 329 |
| 3ஆம் காலாண்டு | 291 | 373 | 271 | 359 | 285 |
| 4ஆம் காலாண்டு | 292 | 251 | 179 | 265 | 271 |
| **சீனி** | **520** | **624** | **651** | **498** | **645** |
| 1ஆம் காலாண்டு | 131 | 169 | 147 | 108 | 205 |
| 2ஆம் காலாண்டு | 162 | 161 | 144 | 158 | 166 |
| 3ஆம் காலாண்டு | 152 | 156 | 179 | 101 | 119 |
| 4ஆம் காலாண்டு | 75 | 137 | 181 | 132 | 154 |
| **மசகு எண்ணெய்** | **1,824** | **1,763** | **1,685** | **1,591** | **1,674** |
| 1ஆம் காலாண்டு | 548 | 369 | 372 | 282 | 283 |
| 2ஆம் காலாண்டு | 365 | 355 | 456 | 376 | 459 |
| 3ஆம் காலாண்டு | 462 | 472 | 384 | 464 | 461 |
| 4ஆம் காலாண்டு | 449 | 567 | 473 | 469 | 471 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்** | **3,385** | **3,321** | **3,885** | **4,895** | **4,959** |
| 1ஆம் காலாண்டு | 970 | 799 | 830 | 1,275 | 1,382 |
| 2ஆம் காலாண்டு | 762 | 952 | 1,163 | 1,123 | 1,207 |
| 3ஆம் காலாண்டு | 1,006 | 744 | 749 | 1,336 | 1,317 |
| 4ஆம் காலாண்டு | 647 | 826 | 1,142 | 1,161 | 1,054 |
| **வளமாக்கி** | **765** | **873** | **527** | **399** | **861** |
| 1ஆம் காலாண்டு | 202 | 163 | 139 | 78 | 256 |
| 2ஆம் காலாண்டு | 190 | 244 | 135 | 73 | 154 |
| 3ஆம் காலாண்டு | 95 | 189 | 126 | 129 | 225 |
| 4ஆம் காலாண்டு | 277 | 277 | 127 | 119 | 226 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

இதன்படி, நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் 2017இன் ஐ.அ.டொலர் 4,503 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,980 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.6 சதவீதத்தினால் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் ஐ.அ.டொலர் 1,606 மில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த அரிசி விலைகளுடன் இணைந்துசெல்லும் விதத்தில் அரிசியின் சராசரி இறக்குமதி விலைகளில் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும், அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2017இன் ஐ.அ.டொலர் 301 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 107 மில்லியனுக்கு 64.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு நெல் அறுவடையில் ஏற்பட்ட மீட்சியினைத் தொடர்ந்து அரிசியின் உள்நாட்டு நிரம்பல் அதிகரித்தமையின் விளைவாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதன்படி, அரிசியின் இறக்குமதி அளவுகள் 2017இன் 748 மில்லியன் கிலோ கிறாம்களிலிருந்து 2018இல் 249 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2018இல் காய்கறிகள் மீதான செலவினமும் 17.4 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு பருப்பு வகை, வெங்காயம், அவரை வகைக் காய்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பெரும்பாலான காய்கறி வகைகளின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். அத்துடன், கடலுணவு, சீனி மற்றும் இனிப்பு வகைகள் மீதான இறக்குமதிச் செலவினம் முறையே 9.3 சதவீதத்தினாலும் 3.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. எனினும், வாசனைத் திரவியங்கள் பாற்பண்ணை உற்பத்திகள், குடிபானங்கள் மற்றும் பழவர்க்கங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் அதிகரித்தது.

**2018இல் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினம் முக்கியமாகப் பங்களித்திருக்கிறது. இதன்படி, உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் ஐ.அ.டொலர் 3,374 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 26.8 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** 2018இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் ஊர்திகளுக்கான திருத்தப்பட்ட வரி அமைப்பின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஆண்டின் முதல் எட்டுமாத காலப்பகுதியில் தனியாள் உந்து ஊர்திகள் மீதான செலவினம் 116.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு சிறிய எந்திர இயலளவினைக் கொண்ட கலப்பு மற்றும் மின்னியல் ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். ஆகவே, அதிகரித்த உந்து ஊர்திகளிலிருந்தான செலாவணி வீதத்தின் காரணமாக வெளிநாட்டுத் துறை மீது ஏற்பட்ட அழுத்தங்களைப் பரிசீலனையில்கொண்டு உயர்ந்த ஊர்தி இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் இரண்டும் 2018 ஒகத்திலிருந்து

### அட்டவணை 5.6
### வாகன இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய கொள்கை வழிமுறைகள்

| திகதி | | கொள்கை அளவீடுகள் |
|---|---|---|
| 01.08.2018 | - | 1,000 உருளை இயலளவிற்கு குறைந்த மகிழூர்திகள், கலப்பு, இலத்திரனியல் ஊர்திகளின் இறக்குமதி மீது பிரயோகிக்கப்படும் கலால் தீர்வையானது மேல்நோக்கித் திருத்தப்பட்டது. |
| 19.09.2018 | - | வர்த்தக தோக்கமல்லா ஊர்திகளின் இறக்குமதி மீதான நாணயக்கடிதத்திற்கெதிராக 100 சதவீத எல்லை வைப்புத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. |
| 29.09.2018 | - | சலுகை அனுமதியினை பயன்படுத்தி வாகனங்களை இறக்குமதி செய்யும்போது திறக்கப்படும் நாணயக்கடிதங்கள் இடைநீக்கப்பட்டது. |
| - | | அரச நிறுவனங்களுக்கான ஊர்திகளின் கொள்முதல் இடைநீக்கப்பட்டது. |
| 01.10.2018 | - | வர்த்தக நோக்கமல்லாத ஊர்திகளின் இறக்குமதி மீதான நாணயக்கடிதங்களுக்கெதிராக எல்லை வைப்புத் தேவைப்பாட்டினை 200 சதவீதத்திற்கு அதிகரித்தல். |
| - | | கலப்பு உந்துஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதம் 70 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 26.11.2018 | - | உந்துஊர்திகளின் இறக்குமதிக்காக வெளிநாட்டு நாணய வடிவில் திறக்கப்படும் நாணயக்கடிதத்தின் மீது பிரயோகிக்கப்படும் ஆகக்குறைந்த காசு எல்லை 100 சதவீதமாக விதிக்கப்பட்டது. |

குறிப்பு: மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தொடர்பில் நாணயக்கடிதத்திற்கு எதிராக விதிக்கப்பட்ட எல்லைத் தேவைப்பாடு 07.03.2019இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீள்பெறப்பட்டது.

நவெம்பர் வரையான காலப்பகுதியில் பல கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது (அட்டவணை 5.6). எனினும், அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட உந்து ஊர்திகளுக்கான அனுமதிப் பத்திரத்தின் அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் 2018 நவெம்பரில் 2019 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் தீர்வை அதிகரிப்புக்கள் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு என்பனவற்றின் விளைவாக 2018 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாத காலப்பகுதியில் கொள்கை வழிமுறைகளின் உடனடித் தாக்கங்களை காணமுடியவில்லை. இருப்பினும்கூட, இக்கொள்கை வழிமுறைகளின் காலம் கடந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 நவெம்பரிலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கி 2018 திசெம்பர் முழுவதும் வீழ்ச்சிடைந்து அத்தகைய செலவினத்தின் சராசரி, ஆண்டின் முதல் பத்துமாத காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட மாதமொன்றிற்கான ஐ.அ.டொலர் 139 மில்லியன் கொண்ட சராசரியுடன் ஒப்பிடுகையில் மாதமொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 91 மில்லியனாகக் காணப்பட்டது. இதன்விளைவாக, தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2017இன் ஐ.அ.டொலர் 773 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 1,574 மில்லியனுக்கு 103.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இறக்குமதி மீதான அழுத்தத்தினைக் குறைக்கின்ற நோக்கத்துடன் இலங்கை மத்திய வங்கி குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், நறுமணப்பொருட்கள், செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் இறப்பர், டயர் போன்ற அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்காக கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது. இதன்படி, 2018 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீத அளவுவைப்புத் தேவைப்பாடு விதிக்கப்பட்டதுடன் 2018 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழான இறக்குமதிகளின் பொருள் பட்டியல் பெறுமதியின் அடிப்படை மீது 100 சதவீத அளவுவைப்புத் தேவைப்பாடொன்று விதிக்கப்பட்டது. அத்துடன் 2018 ஒத்தோபர் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வெளிநாட்டுச் செலாவணிகளை விடுவிக்கக்கூடாது என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பணிக்கப்பட்ட வேளையில் அத்தியாவசியமல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்காக வெளிநாட்டு நாணயங்களின் மூலம் நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கான ஏற்புடைத்தான 100 சதவீத குறைந்தபட்ச காசு அளவு 2018 நவெம்பர் 26 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் 2019 மாச்சு 07ஆம் நாளிலிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யப்பட்ட வேளையில், இறக்குமதிக்கான ஏற்றுக்கொள்ளல் ஆவணங்களின் கீழான இறக்குமதிகளின் அளவுவைப்புத் தேவைப்பாடு 2019 மாச்சு 12 இலிருந்து புறக்கீடு செய்யப்பட்டது. ஆடைகள் மற்றும் அதன் துணைப் பொருட்கள் மற்றும் வீட்டலகு மற்றும் தளபாடப் பொருட்களின் மீதான செலவினம் 2018இல் முறையே 15.9 சதவீதத்தினாலும் 9.0 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மீதான செலவினம் 2018இல் அதிகரித்தது.

**அனைத்துத் துணை வகைகளினதும் குறைந்த இறக்குமதிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018இல் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.** மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகைகூறும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2017இன் ஐ.அ.டொலர் 4,895 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 4,690 மில்லியனுக்கு 4.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் பொறி மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 2,492 மில்லியனுக்கு 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறியியற்படுத்தும் கருவிகள், மின்னியல் எந்திரங்கள் மற்றும் சாதனங்கள், அச்சிடல் பொறிகள், மருந்து மற்றும் ஆய்வுகூடச் சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். மேலும், கட்டட மூலப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,525 மில்லியனுக்கு 4.2 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கு அதனுடன் தொடர்பான பொருட்கள், கனிம உற்பத்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே

காரணமாகும். போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சரக்கு வண்டிகள், பேருந்துகள், வேளாண்மைக்கான உழுபொறிகள், தாங்கிகள் மற்றும் நீர்த்தாங்கிகள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்தன.

### 5.3.3 வர்த்தக நிலுவை

**2018இல் வர்த்தக கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்த போதும், ஆண்டு இறுதியளவில் அது, மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தை பிரதிபலிக்கின்ற விதத்தில் மிதமான வேகத்தில் காணப்பட்டது.** குறைவடைந்த ஏற்றுமதிச் செயலாற்றத்துடன் இணைந்து தங்கம், எரிபொருள் மற்றும் தனியாள் உந்து ஊர்திகள் மீது உறப்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. எனினும், 2018 ஏப்பிறல் தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில், இறக்குமதிச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளுடன் இலங்கை ரூபாவின் கடுமையான தேய்வு சேர்ந்து இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் வர்த்தப் பற்றாக்குறையின் விரிவாக்கத்தில் மிதமான தன்மையொன்றினைத் தோற்றுவித்தது. வர்த்தகப் பற்றாக்குறையானது 2017இன் ஐ.அ.டொலர் 9,619 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 10,343 மில்லியனுக்கு விரிவடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தகப் பற்றாக்குறை 2017இன் 10.9 சதவீதத்திலிருந்து 2018இல் 11.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.




### 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**இலங்கையின் ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குமிடையிலான விகிதாசாரத்தினைப் பிரசன்னப்படுத்தும் வர்த்தக மாற்று விகிதம் 2018இல் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது.** இவ்வாண்டுப்பகுதியில் இறக்குமதி விலைச் சுட்டெண் 95.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 4.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், ஏற்றுமதி விலைச் சுட்டெண் 100.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 4.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளின் காரணமாக, வர்த்தக மாற்று விகிதம் 2017இன் 105.5 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2018இல் சிறிதளவு மேம்பட்டு 105.6 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்தது.


**2018இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் உயர்ந்த விலைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச் சுட்டெண் உயர்வடைந்தது.** கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் இவ்வாண்டுப் பகுதியில் 6.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த எண்ணெய் விலைகளின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளுடன் தொடர்பான விலைச் சுட்டெண்ணில் 30.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பு காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும், புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றுடன் தொடர்பான ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் 2018இல் முறையே 3.6 சதவீதத்தினாலும் 25.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் இரசாயனப்பொருட்கள், மட்பாண்ட உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி என்பனவற்றின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் அதிகரித்தன. எனினும், 2018இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், பொறி மற்றும் எந்திரசாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலையுடன் தொடர்பான விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகளின் ஏற்றுமதி விலைச்சுட்டெண் 2018இல் 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை, சிறுவேளாண்மை உற்பத்திகள், இறப்பர் மற்றும் வாசனைத்திரவியங்கள் போன்ற அநேக வகைகள் விலை

வரைபடம் 5.6
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. பில்லியன்)




*மூலம்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.7
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.7
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | தொகைச் சுட்டெண் | | | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2017 | 2018 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2017 | 2018 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **120.0** | **111.9** | **-6.8** | **96.5** | **92.6** | **-4.0** | **124.3** | **120.8** | **-2.9** |
| தேயிலை | 106.2 | 99.2 | -6.6 | 87.4 | 85.5 | -2.2 | 121.6 | 116.0 | -4.6 |
| இறப்பர் | 22.5 | 18.2 | -18.8 | 31.4 | 26.7 | -15.1 | 71.6 | 68.4 | -4.4 |
| தெங்கு | 210.0 | 187.8 | -10.6 | 154.5 | 132.8 | -14.0 | 136.0 | 141.4 | 4.0 |
| வாசனைத்திரவியங்கள் | 196.1 | 173.9 | -11.3 | 132.2 | 120.5 | -8.9 | 148.3 | 144.3 | -2.7 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 194.2 | 165.7 | -14.7 | 169.8 | 162.0 | -4.6 | 114.4 | 102.3 | -10.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **140.2** | **152.0** | **8.4** | **156.3** | **158.7** | **1.5** | **89.7** | **95.7** | **6.7** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 150.0 | 158.6 | 5.7 | 129.8 | 132.4 | 2.0 | 115.6 | 119.8 | 3.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 165.0 | 236.3 | 43.2 | 228.5 | 251.1 | 9.9 | 72.2 | 94.1 | 30.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 150.1 | 157.2 | 4.8 | 109.4 | 111.4 | 1.8 | 137.2 | 141.1 | 2.9 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **142.4** | **141.8** | **-0.4** | **105.6** | **99.3** | **-5.9** | **134.8** | **142.8** | **5.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **131.8** | **137.9** | **4.7** | **136.7** | **137.3** | **0.5** | **96.4** | **100.4** | **4.2** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **182.0** | **201.3** | **10.6** | **167.4** | **183.4** | **9.6** | **108.7** | **109.7** | **0.9** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 139.2 | 121.4 | -12.8 | 146.7 | 129.5 | -11.8 | 94.8 | 93.8 | -1.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 231.1 | 293.0 | 26.8 | 191.0 | 245.3 | 28.4 | 121.0 | 119.4 | -1.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **142.1** | **155.2** | **9.2** | **158.6** | **162.2** | **2.3** | **89.6** | **95.6** | **6.8** |
| எரிபொருள் | 112.7 | 136.5 | 21.1 | 150.7 | 152.5 | 1.2 | 74.8 | 89.5 | 19.7 |
| வளமாக்கி | 42.8 | 108.9 | 154.4 | 53.7 | 136.0 | 153.3 | 79.7 | 80.1 | 0.4 |
| இரசாயன உற்பத்திகள் | 160.5 | 173.9 | 8.4 | 161.6 | 165.2 | 2.2 | 99.3 | 105.3 | 6.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 134.4 | 140.7 | 4.7 | 134.0 | 134.2 | 0.2 | 100.3 | 104.8 | 4.5 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 150.6 | 158.0 | 4.9 | 137.6 | 144.3 | 4.9 | 109.4 | 109.5 | 0.1 |
| பிளாத்திக்கு மற்றும் அவ்வகையான பொருட்கள் | 149.6 | 164.9 | 10.2 | 160.5 | 166.9 | 4.0 | 93.2 | 98.8 | 6.0 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 204.6 | 151.7 | -25.9 | 232.2 | 169.1 | -27.2 | 88.1 | 89.7 | 1.8 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **177.7** | **170.2** | **-4.2** | **208.7** | **208.2** | **-0.3** | **85.1** | **81.8** | **-3.9** |
| கட்டடப் பொருட்கள் | 193.7 | 185.5 | -4.2 | 220.1 | 212.1 | -3.7 | 88.0 | 87.5 | -0.6 |
| போக்குவரத்துக் கருவி | 113.9 | 112.8 | -1.0 | 112.8 | 109.3 | -3.1 | 101.0 | 103.1 | 2.2 |
| பொறி மற்றும் கருவி | 195.9 | 186.3 | -4.9 | 244.2 | 249.6 | 2.2 | 80.2 | 74.6 | -7.0 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 234.1 | 181.7 | -22.4 | 224.6 | 181.9 | -19.0 | 104.2 | 99.9 | -4.2 |
| **மொத்த இறக்குமதிகள்** | **156.5** | **165.8** | **6.0** | **171.3** | **174.3** | **1.8** | **91.3** | **95.1** | **4.1** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **105.5** | **105.6** | **0.02** |

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சிகளை கொண்டிருந்தமையே காரணமாகும். எனினும், இவ்வாண்டுப்பகுதியில் தேங்காய், தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் கடலுணவு, என்பனவற்றின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் அதிகரித்தன.

**2018இல் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரித்தமைக்கு இடைநிலைப்பொருட்களின் உயர்ந்த விலைகளும் அதனைத் தொடர்ந்து நுகர்வுப்பொருட்களின் சிறிதளவு விலை அதிகரிப்புக்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 6.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 19.7 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த எரிபொருளுடன் தொடர்பான விலைச் சுட்டெண் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தது.** மேலும், தாள் மற்றும் தாள் அட்டைகளின் இறக்குமதி விலைச் சுட்டெண் 6.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2018இல் இரசாயன உற்பத்திகள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் ஒவ்வொன்றும் 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. கோதுமை மற்றும் சோளம், ஊர்திகள் மற்றும் பொறிகள் அதன் பாகங்கள் வைரங்கள், பெறுமதிவாய்ந்த கற்கள், உலோகங்கள் மற்றும் வளமாக்கி என்பன தொடர்பான இறக்குமதி விலைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, உணவுத் தயாரிப்புக்கள், வேளாண்மை உள்ளீடுகள் மற்றும் இறப்பர் மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள், மற்றும் இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றின் இறக்குமதி விலைச் சுட்டெண்கள் 2018இல் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, நுகர்வுப் பொருட்கள் தொடர்பான விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதத்தினால் குறைந்தளவில் அதிகரித்தன. ஊர்திகள், ஆடைகள் மற்றும் அதன் துணைப் பொருட்கள், அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள், கடலுணவு, குடிபானங்கள் மற்றும் தானியம் மற்றும் அரைக்கும் ஆலைகளின் உற்பத்திகள் என்பனவற்றின் விலைகள் உயர்வாகவிருந்த வேளையில் வீட்டுச்சாதனங்கள் சீனி மற்றும் இனிப்பு வகைகள், வாசனைத் திரவியங்கள், பழவர்க்கங்கள்

மற்றும் பாற்பண்ணை உற்பத்திகள் என்பனவற்றின் விலைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. எனினும், போக்குவரத்துக் கருவிகளுக்கான விலைச் சுட்டெண்ணில் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்ததற்கு மாறாக வீழ்ச்சியடைந்த பொறிகள் மற்றும் கருவிகள், கட்டடமூலப் பொருட்கள் என்பனவற்றின் குறைந்த விலைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018இல் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் குறைவடைந்தன.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு


**2018இல் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் 2017 உடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மாற்றமின்றி காணப்பட்டனர்.** 2018இல் இந்தியா இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா முக்கிய இடங்களில் காணப்பட்டன. இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஐ.அ.டொலர் 5 பில்லியனை விஞ்சிய வேளையில் சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் முறையே ஐ.அ.டொலர் 4.0 பில்லியனாகவும் 3.0 பில்லியனாகவும் காணப்பட்டு முறையே 14.7 சதவீதம், 12.8 சதவீதம், 10.6 சதவீதமான பங்குகளைக் கொண்டிருந்தன. மேலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யப்பான், சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி என்பன ஏனைய முக்கிய வர்த்தகப் பங்காளர்களாக விளங்கி 2018இல் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலான வர்த்தக அளவைக் கொண்டிருந்தன. இந்தியாவுடனான வர்த்தகம் 2018இல் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் குறைவடைந்தமை காரணமாக இருந்த வேளையில் சிங்கப்பூருடனான மொத்த வர்த்தகம் வீழ்ச்சியடைந்தமைக்கு சிங்கப்பூருக்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாக அமைந்தது. எனினும், இவ்வாண்டுப் பகுதியில் சீனா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி என்பனவற்றுடனான வர்த்தகம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. முன்னேற்றம் கண்ட நாடுகளில், முக்கியமாக, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் மிகப்பெரும் ஏற்றுமதி நாடுகளாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் ஆசியா, குறிப்பாக இந்தியா மற்றும் சீனா இறக்குமதிகளின் முக்கிய பங்கிற்கு வகைகூறின.

**ஐக்கிய அமெரிக்கா முக்கிய ஏற்றுமதி நாடு என்ற அதன் நிலையைத் தொடர்ந்தும் பேணி இலங்கையின் ஏற்றுமதிகளில் 25.9 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் (8.2 சதவீதம்) இந்தியாவும் (6.5 சதவீதம்) விளங்கின.** ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018இல் ஐ.அ.டொலர் 3,085 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 6.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு வகைகூறும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் பொறிகள் மற்றும் எந்திரசாதனங்களின் ஏற்றுமதிகள் முக்கிய காரணமாக அமைந்தன. இலங்கையின் ஆடை ஏற்றுமதி நாடுகளில் தனிப்பெரும் நாடாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கி 2018இன் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கு வகைகூறியது. இவ்வாண்டுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தேயிலை மற்றும் இரசாயன ஏற்றுமதிகள் அதிகரித்த வேளையில் கடலுணவு, வாசனைத்திரவியங்கள் மற்றும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. இரண்டாவது மிகப்பெரும் ஏற்றுமதி நாடான ஐக்கிய இராச்சியத்திலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018இல் 5.4 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி மற்றும் தேயிலை என்பனவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். எனினும், 2018இல் ஐக்கிய இராச்சியத்திற்கான புடவைகள் மற்றும் ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் 75 சதவீதத்தினை ஆடைகள் உள்ளடக்கியிருந்ததுடன் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகளில் 15 சதவீதமானவை ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கை ஏற்றுமதிகளில் மூன்றாவது பெரும் வாங்குநராக விளங்கும் இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதிகள் 2017இன் ஐ.அ.டொலர் 691 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 777 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு விலங்குத்தீன், புடவை மற்றும் ஆடைகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அவற்றின் பொருட்கள் பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். எனினும், 2018இல் இந்தியாவிற்கான வாசனைத் திரவியங்கள், பெற்றோலிய உற்பத்திகள், மர மற்றும் தாள் உற்பத்திகள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை மொத்த ஏற்றுமதிகளில் 5.2 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் ஜேர்மனிக்கான ஏற்றுமதிகள் 2018இல் 13.7 சதவீதத்தினால் அதிகரித்தன. ஜேர்மனிக்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 66 சதவீதத்திற்கு வகைகூறும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள் 2018இல் ஜேர்மனியிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பிற்குக் பெருளவிற்குப் பங்களித்தன. 2018இல் இத்தாலிக்கான ஏற்றுமதிகள் 9.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகள் முக்கிய காரணங்களாக விளங்கி இத்தாலிக்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 92 சதவீதத்திற்கு வகைகூறின. இலங்கை ஏற்றுமதிகளுக்கான மிக ஆதிக்கம்பெற்ற பிராந்திய சந்தையாக

விளங்கும் ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியம் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 29 சதவீதத்திற்கு வகைகூறி 2018இல் ஐ.அ.டொலர் 3,474 மில்லியனுக்கு 5.3 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆடை, இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை மற்றும் கடலுணவு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் 76 சதவீதத்திற்கு வகைகூறி ஐரோப்பிய ஒன்றியம் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைகள் வசதி மீளக்கிடைக்கப்பெற்றமை. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடை அகற்றப்பட்டமை என்பன ஒன்றுசேர்ந்தமையின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வதிகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்திருக்கிறது. 2018இல் மத்திய கிழக்கு, ரூசியா என்பன இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளுக்கான முக்கிய ஏற்றுமதி நாடுகளாக விளங்கி மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் முறையே 43.7 சதவீதத்திற்கும் 10.8 சதவீதத்திற்கும் பங்களித்தன. எனினும், இந்நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.


**இந்தியா, இறக்குமதிகளின் மிகப்பெரும் நாடாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் அதன் பங்கினை 2017இன் 21.6 சதவீதத்திலிருந்து 2018இல் மொத்த இறக்குமதிகளின் 19.0 சதவீதத்திற்குக் குறைத்துக் கொண்டது.** இந்தியாவிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 2018இல் ஐ.அ.டொலர் 4,231 மில்லியனுக்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 44 சதவீதத்திற்குப் பங்களிக்கும் பெற்றோலிய உற்பத்திகள், கட்டட மூலப்பொருட்கள், ஊர்திகள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகள் முக்கிய காரணங்களாக விளங்கின. இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரும் இறக்குமதி நாடுகளாக விளங்கும் சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மொத்த இறக்குமதிகளில் முறையே 18.5 சதவீதத்திற்கும் 8.3 சதவீதத்திற்கும் வகைகூறின. மொத்த இறக்குமதிகளில் 61.0 சதவீதத்திற்கு வகைகூறும் சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் கட்டடப்பொருட்களை முக்கியமாக உள்ளடக்கியிருந்த வேளையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக பெற்றோலிய உற்பத்திகள், வைரங்கள் மற்றும் பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் விளங்கி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் 87 சதவீதத்திற்கு வகைகூறின. யப்பானும் சிங்கப்பூரும் நான்காவது மற்றும் ஐந்தாவது மிகப்பெரும் இறக்குமதி நாடுகளாக விளங்கி

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம்:* இலங்கைச் சுங்கம்

வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்




*மூலம்:* இலங்கைச் சுங்கம்

மொத்த இறக்குமதிகளில் முறையே 7.1 சதவீதத்திற்கும் 6.2 சதவீதத்திற்கும் வகைகூறின. யப்பான் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் ஐ.அ.டொலர் 1,585 மில்லியனுக்கு 52.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த வேளையில் மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு 2017இல் 4.9 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் அறிவிக்கப்பட்ட கணிசமான அதிகரிப்பே முக்கிய காரணமாக விளங்கியது. யப்பானிலிருந்தான ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் யப்பானிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் 62 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2018இல் இலங்கைக்காக இறக்குமதி செய்யப்பட்ட ஊர்திகளில் 62.4 சதவீதமானவை யப்பானிலிருந்தானவையாகும். அதேவேளை, 2018இல் சிங்கப்பூரிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 1.5 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். 2018இல் வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள், பொறிகள் மற்றும் உலோகங்கள், இரசாயன உற்பத்திகள் என்பன 2018இல் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய விடயங்களாக விளங்கின. எனினும், சிங்கப்பூரிலிருந்தான வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள், பொறிகள் மற்றும் கருவிகள், இரசாயன உற்பத்திகளின் இறக்குமதிகள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.



## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலுள்ள வர்த்தகம்

**2018இல் பணிகளிலுள்ள வர்த்தகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமையின் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கு ஆதரவளித்தது.** 2018 ஆண்டுகாலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் வலுவானதொரு வளர்ச்சியினைப் பதிவுசெய்த வேளையில் போக்குவரத்து மற்றும் கணனிப் பணிகளும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்திருந்தன. இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 7,724 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் 8,374 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, சரக்குப்போக்குவரத்து, பயணிகள் கட்டணம் மற்றும் வெளிநாட்டுக்கான தனிப்பட்ட பயணம் போன்றவற்றிலான பணிகளின் அதிகரித்த கேள்வியின் காரணமாக, பணிகள் கணக்கின் பேரிலான வெளிப்பாய்ச்சல்களும் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,608 மில்லியனுக்கு 4.2 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன்படி, பணிகள் கணக்கு மிகையானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,302 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 3,766 மில்லியனுக்கு மேம்பட்டது.

அட்டவணை 5.8
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2017 (அ) | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **19,084** | **25,401** | **-6,317** | **20,264** | **26,841** | **-6,577** |
| **பொருட்கள்** | **11,360** | **20,980** | **-9,619** | **11,890** | **22,233** | **-10,343** |
| பொது வணிகம் | 11,360 | 20,330 | -8,970 | 11,890 | 21,794 | -9,904 |
| நாணயமல்லா தங்கம் | - | 650 | -650 | - | 439 | -439 |
| **பணிகள்** | **7,724** | **4,421** | **3,302** | **8,374** | **4,608** | **3,766** |
| போக்குவரத்து | 2,340 | 1,688 | 652 | 2,486 | 1,737 | 750 |
| கடல்வழி போக்குவரத்து | 1,064 | 790 | 274 | 1,134 | 819 | 315 |
| சரக்குத் தொகுதி | 1,064 | 790 | 274 | 1,134 | 819 | 315 |
| வான்வழி போக்குவரத்து | 1,277 | 898 | 379 | 1,353 | 918 | 435 |
| பயணிகள் | 1,158 | 810 | 348 | 1,227 | 827 | 400 |
| சரக்குத் தொகுதி | 118 | 88 | 30 | 126 | 91 | 35 |
| பயணம் (இ) | 3,925 | 1,599 | 2,326 | 4,381 | 1,660 | 2,721 |
| கட்டுமானம் | 69 | 32 | 37 | 65 | 33 | 32 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 123 | 94 | 29 | 130 | 97 | 33 |
| நிதியியல் பணிகள் | 263 | 415 | -152 | 242 | 447 | -205 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 926 | 455 | 471 | 995 | 484 | 511 |
| தொலைத்தொடர்புகள் | 140 | 110 | 30 | 147 | 112 | 35 |
| கணனி பணிகள் | 786 | 345 | 440 | 848 | 372 | 475 |
| ஏனைய வியாபார பணிகள் | 44 | 69 | -25 | 40 | 75 | -34 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் என்.ஐ.இ. | 34 | 69 | -35 | 35 | 75 | -41 |
| **முதலாந்தர வருமானம்** | **173** | **2,492** | **-2,319** | **262** | **2,661** | **-2,399** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 26 | 96 | -70 | 28 | 102 | -74 |
| முதலீட்டு வருமானம் | 147 | 2,395 | -2,249 | 234 | 2,560 | -2,325 |
| நேரடி முதலீடு | 27 | 915 | -888 | 23 | 790 | -767 |
| பங்கு இலாபங்கள் | 14 | 414 | -400 | 13 | 565 | -552 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | 13 | 500 | -487 | 10 | 225 | -215 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 954 | -954 | - | 1,059 | -1,059 |
| பங்கு மூலதனம் | - | 82 | -82 | - | 92 | -92 |
| வட்டி | - | 873 | -873 | - | 967 | -967 |
| குறுங்காலம் | - | 6 | -6 | - | 4 | -4 |
| நீண்டகாலம் | - | 866 | -866 | - | 963 | -963 |
| ஏனைய முதலீடு | 55 | 526 | -471 | 88 | 711 | -623 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 64 | - | 64 | 123 | - | 123 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,175** | **848** | **6,327** | **7,023** | **860** | **6,163** |
| பொது அரசாங்கம் | 11 | - | 11 | 8 | - | 8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,164 | 848 | 6,316 | 7,015 | 860 | 6,155 |
| **நடைமுறை கணக்கு** | **26,432** | **28,741** | **-2,309** | **27,549** | **30,363** | **-2,814** |
| **மூலதன கணக்கு** | **40** | **29** | **11** | **42** | **27** | **14** |
| மூலதன மாற்றல்கள் | 40 | 29 | 11 | 42 | 27 | 14 |
| பொது அரசாங்கம் | 20 | - | 20 | 14 | - | 14 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 20 | 29 | -9 | 28 | 27 | ... |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **26,472** | **28,770** | **-2,298** | **27,590** | **30,390** | **-2,799** |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் சேவைகள் என்பன போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

#### போக்குவரத்துப் பணிகள்

**போக்குவரத்துப் பணிகளில் காணப்பட்ட மிகையின் விரிவாக்கமானது 2018இல் பணிகள் கணக்கினை வலுவடையச்செய்தது.** பயணிகள் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் போன்றவற்றினை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளில் மொத்த உட்பாய்ச்சல்கள் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,486 மில்லியனை அடைந்து 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சி

வீதத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வெளிநாட்டிலுள்ள உள்நாட்டு விமான நிலையங்களினால் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் இலங்கையின் இறக்குமதியாளர்களினால் வதிவற்ற கப்பற்படுத்தும் நிறுவனங்களுக்கான அதிகரித்த கொடுப்பனவுகள் போன்றவற்றின் விளைவாக போக்குவரத்துப் பணிகளின் வெளிப்பாய்ச்சல்கள் 2018 ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,737 மில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கமைய, போக்குவரத்துத் துறையிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 652 மில்லியனிலிருந்து 2018 ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 750 மில்லியனுக்கு அதிகரித்தன.

**பயணிகள் கட்டணங்கள் பேரிலான உட்பாய்ச்சல்கள் 2018 காலப்பகுதியில் அதிகரித்தன.** பயணிகள் கட்டணங்களிலான அத்தகைய அதிகரிப்பானது இலங்கைக்கு பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரித்தமைக்கும், விமானப் பயணச் சீட்டுக்களின் விலைகள் அதிகரித்தமைக்குமான முக்கியமாகக் காரணமாகும். 2018இல் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,227 மில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இம்மேம்பாடானது சிறிலங்கன் எயர்லைன்சினால் சந்தை இயலாற்றல்களின் அடிப்படையிலான பறப்புகளின் அதிர்வெண் மற்றும் விமானங்களைப் பயன்படுத்தலிலான வினைத்திறனானதும் உரிய நேரத்திலானதுமான முகாமைத்துவம் போன்றவற்றினால் ஏற்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் லண்டன், மெல்போன், டுபாய், அபுதாபி, டோகா மற்றும் டெல்லி போன்ற உயர்ந்த பறப்பு அதிர்வெண்களை கொண்ட சந்தைகளை உள்ளடக்கிய 39 சேரிடங்களுக்கான தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.


**2018இல் சரக்குப் பணிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.** துறைமுகம் தொடர்பான நடவடிக்கைகளின் விரிவாக்கத்துடன் 2018இல் துறைமுக மற்றும் வானூர்தி நிலையங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளுக்கமைய, சரக்குக் கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் அதிகரித்தது. கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்ட அதிகரித்த சரக்கு கப்பல்கள், கொள்கலன்கள் மற்றும் மாற்றிக் கப்பலேற்றின் அளவு என்பவற்றினை பிரதிபலித்து ஐ.அ.டொலர் 1,260 மில்லியனுக்கு 6.6 சதவீத வளர்ச்சியினைத் தோற்றுவித்தது. ஆண்டுகாலப்பகுதியில், கொழும்பு துறைமுகம் துறைமுக வரலாற்றில் முதற்தடவையாக 7 மில்லியனுக்கும் மேற்பட்ட இருபது அடிக்கும் சமனான கொள்கலன் அலகுகளை கையாள்வதன் மூலம் குறிப்பிடத்தக்க சாதனையொன்றினை நிகழ்த்தி கடல் போக்குவரத்து பயணிகள் துறை விரிவடையப் பங்களித்தது. அதேவேளை, கொழும்பு துறைமுகமானது, அல்பிலைனர் உலகளாவிய துறைமுக தரப்படுத்தலினால் 2018இன் முதலரையாண்டுக்கான கொள்கலன் வளர்ச்சி நியமங்களில் உலகின் முதல் 30 கொள்கலன் துறைமுகங்களில் முதலாவதாகத் தரமிடப்பட்டது. இது, உலகளாவிய கடல் போக்குவரத்து தரமிடலில் உச்சத்தினை அடைந்து கொழும்பு துறைமுக வரலாற்றில் முதலாவது தடவையாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அடைவு மட்டமாகும்.

### பயணம் மற்றும் சுற்றுலா

**2018இல் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளாச்சியின் உதவியுடன் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய மூலமாக தொடர்ந்தும் விளங்கின.** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2,333,796 இற்கு 10.3 சதவீதத்தினால் அதிகரித்து ஓராண்டுப்பகுதியில் மிக உயர்ந்த வருகைகளைப் பதிவுசெய்தன. புகழ்பெற்ற பன்னாட்டு சுற்றுலா அமைப்புக்களிலிருந்தான அங்கீகாரம் மற்றும் கௌரவ விருதுகள், தீவிரமான ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் சுற்றுலாக் கைத்தொழிலில்களின் முதலீட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, பணி வழங்கலின் மேம்பட்ட தரம், வான் மற்றும் கடல்வழிகளின் ஊடான மிகச்சிறந்த போக்குவரத்து இணைப்புக்கள் என்பன 2018இல் சுற்றுலாக் கைத்தொழின் அதிகரித்த செயலாற்றத்திற்கு முக்கியமாகப் பங்களித்தன.


**கிழக்காசியா மற்றும் மத்திய கிழக்கு தவிர்ந்த அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலா வருகைகள் 2018இல் அதிகரித்தன.** மேற்கு ஐரோப்பா, இலங்கைக்கான மிகப் பெரிய சுற்றுலாப் பயணிகளின் மூல இடமாகத் தொடர்ந்தும் விளங்கி 840,956 வருகைகளைப் பதிவுசெய்ததன் மூலம் 23.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது. மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் இது 36.0 சதவீதம் கொண்ட ஒரு பங்காகும். இலங்கையின் இரண்டாவது மிகப்பெரும் மூலமான தென்னாசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 543,160 வருகைகளாக விளங்கி 4.8 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், மொத்த வருகைளின் பங்காக தென்னாசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 2017இல் 24.5 சதவீதத்திலிருந்து 2018இல் 23.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2016வரை சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையினது வரவேற்கத்தக்க வளர்ச்சியின் பின்னணயில் 2011 இலிருந்து உறுதியாக அதிகரித்த ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கும் 18.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 4.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், அவுஸ்திரலாசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 35.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவுசெய்தமையின் மூலம் மொத்த வருகைகளில் இதன் பங்கினை 2017இன் 4.3 சதவீதத்திலிருந்து 2018இல் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. அத்தகைய வளர்ச்சி முக்கியமாக இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவுக்குமிடையிலான நேரடி வான்போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டமையின் ஓரளவு காரணமாக அவுஸ்ரேலியாவிலிருந்தான வருகைகள் அதிகரிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். நாடுகளின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைப் பொறுத்தவரையில் இந்தியா 424,887 வருகைகளுடன் முதலாவது இடத்தில் தொடர்ந்தும்

வரைபடம் 5.10
**நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2018**




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

வரைபடம் 5.11
**சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

இருந்தவேளையில் சீனா சிறிதளவு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த போதும் தொடர்ந்தும் இரண்டாவது நாடாக விளங்கியது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் அவுஸ்ரேலியா ஆகியன காணப்பட்டன. முதல் ஐந்து சுற்றுலா நாடுகள் ஒன்றாக சேர்ந்து 2018இல் இலங்கைக்கான மொத்த சுற்றுலாப் பயணிகளின் 52.0 சதவீதத்திற்கு வகைகூறின. வருகைக்கான நோக்கத்தின் நியதிகளில் பெரும்பான்மையான சுற்றுலாப் பயணிகள் (84.8 சதவீதம்) பொழுதுபோக்கிற்காக நாட்டிற்கு வருகைதந்த வேளையில் 3.1 சதவீதத்தினர் வியாபார நோக்கங்களிற்காக வருகைதந்தனர். நண்பர்கள், உறவினர்களைக் காணவருபவர்கள், சமய மற்றும் கலாச்சார நோக்கங்கள், நலன், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற ஏனைய நோக்கங்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கு 2018இல் மொத்த சுற்றுால வருகைகளின் 12.1 சதவீதமாகவிருந்தது.



**முன்னெப்பொழுதுமில்லா சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் சுற்றுலாப் பயணி ஒருவரின் அதிகரித்த சராசரிச் செலவின் உதவியுடன் இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஆரோக்கியமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.** 2018இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 3,925 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 4,381 மில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட தங்கியிருக்கும் காலம் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் செலவிடல் மீதான அண்மைய ஆண்டு அளவீடுகளின்படி,2018இல் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் நாளொன்றுக்கு 2017இன் ஐ.அ.டொலர் 170.1 இலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 173.8 இற்கு உயர்வடைந்தது. மேலும், சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கியிருக்கும் காலம் 2017இன் 10.9 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.8 நாட்களென மதிப்பிப்பட்டது. இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள்,நாட்டின் சுற்றுலாவுடன் தொடர்பான உட்கட்டமைப்பினை தரமுயர்த்தி விரிவுபடுத்துவதில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் என்பனவற்றின் மூலம் சுற்றுலா வருவாய்களில் காணப்பட்ட உறுதியாக வளர்ச்சி நடுத்தரகாலத்திலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், பயணத்துடன் தொடர்பான வெளிப்பாய்ச்சல்கள் 2018இல் ஐ.அ.டொலர் 1,660 மில்லியனுக்கு 3.8 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. இதன்விளைவாக பயணம் மற்றும் சுற்றுலா துணைத் துறையில் காணப்பட்ட மிகை 2017இன் ஐ.அ.டொலர் 2,326 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 2,721 மில்லியனிற்கு அதிகரித்தது.

**2018இல் சுற்றுலாத் துறையின் முதலீடுகள் மேலும் விரிவடைந்தன.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை 2017இன் ஐ.அ.டொலர் 314 மில்லியன் கொண்ட மொத்த முதலீட்டுடன் கூடிய 95 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 919 மில்லியன் கொண்ட 141 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களுக்கான முன்மொழிவுகளைப் பெற்றது. இறுதி ஒப்புதல்கள், 2018இல் 1,302 அறைகளுடன் கூடிய 44 சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டமையின் மூலம் ஐ.அ.டொலர் 201 மில்லியன் கொண்ட முதலீடுகள் பயன்படுத்தப்பட்டன. மேலும், 2018இல் 35 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்கள் தொழிற்பாடுகளை ஆரம்பித்திருப்பதன் காரணமாக இக்காலப்பகுதியில் 1,125 அறைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை, சுற்றுலா பயணிகளை கவர்ந்து கொள்வதனைப் பிரபல்லியப்படுத்தும் வசதிகளை மேம்படுத்துவதற்காக மாகாண சபைகளின் ஒத்துழைப்புடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2019 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் சுற்றுலாக் கைத்தொழில்கள், சுற்றுலா விடுதிகளைத் திருத்தியமைத்தல் மற்றும் சுற்றுலாவுடன் தொடர்பான சாதனங்களை இறக்குமதி செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான வியாபாரம் மற்றும் முதலீடுகளுக்கான ஆரம்ப செலவுகளைக் குறைக்கும் பொருட்டு பல வரி நன்மைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், 2019 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் சுற்றுலா விடுதிகளினால் பெறப்படுகின்ற வெளிநாட்டு

நாணயத்தின் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை அகற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் சுற்றுலாவிடுதிகளை பதிவு செய்கின்ற செயன்முறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் துறையிலுள்ள முறைசாராத் துறையினை பிரதான நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. முன்னோக்கிப் பார்க்கையில், சுற்றுலாத் துறைக்கான முக்கிய முன்னுரிமைகளாக உட்கட்டமைப்பினையும் மற்றைய வசதிகளையும் மேம்படுத்தல் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களினூடாக மற்றும் பெரும்பாலும் கைத்தொழில் பங்காளர்களின் ஒத்துழைப்பினூடாக தேர்ச்சிபெற்ற தொழிற்படையினை அதிகரித்தல் என்பன காணப்படுகின்றன.

**இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்காக 2018இல் பல கொள்கை வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் பல ஊக்குவிப்புப் பிரச்சாரங்களும் நடைமுறைக்கிடப்பட்டன.** 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சுற்றுலா உபாயத்திட்டம் 2017 – 2020இன் நடைமுறைப்படுத்தல் 2018இலும் தொடர்ந்தது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் வர்த்தகப் பொருட்காட்சி, விளம்பரங்கள், நுகர்வோர் மற்றும் உணவுத் திருவிழாக்கள் என்பனவற்றில் பங்கேற்பது உட்பட 2018இல் 34 அடையாளம் காணப்பட்ட சந்தைகளில் நாட்டிற்கே உரித்தான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2018இல் வெப் சமூக வலைத்தளங்களில் 'புளொக்கர்ஸ்' என்ற கருத்துக்களைத் தெரிவிக்கும் நிகழ்ச்சிகள், சிஎன்என் போன்ற பன்னாட்டு ரீதியாக புகழ் பெற்ற ஊடகங்களில் அதேநேரக் கணனிவழிப் பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல், வெப்தள பதாதைகள் மற்றும் சமூக வலைத்தள நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தியது. இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் புதிய வர்த்தக நாமமாக –சோ சிறிலங்கா– என்ற அடையாளப்படுத்தலை 2018 நவெம்பரில் ஆரம்பித்தது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட காத்திரமான ஊக்குவிப்புக்களின் பெறுபேறாக –லோன்லி பிளநெட்–,–நஷனல் யோர்க்கிறபி– உட்பட பயணத்துடன் தொடர்பான பல நிறுவனங்கள் 2019இன் பயணத்தினை மேற்கொள்வதற்கான மிகச் சிறந்த இடங்களிலொன்றாக இலங்கையை அங்கீகரித்திருக்கின்றன. அதேவேளை, 50 இற்கு மேற்பட்ட உல்லாசப் பயணக் கப்பல்கள் மூலம் 86,000 இற்கும் மேற்பட்ட பயணிகள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தடைந்தனர். மேலும், பன்னாட்டு ரீதியாக பிரபல்யம் பெற்ற அயன்மான் 70.3 மற்றும் றெயிட் அமஷோன் போன்ற பல சாகச விளையாட்டு நிகழ்வுகள் இப்பிராந்தியததில் இலங்கையை பல்லினத்தன்மை கொண்ட சுற்றுலா நாடாக ஊக்குவிப்பதற்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியத்தினால் 2018இல் ஒழுங்கு செய்யப்பட்டன. அதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினையும் வசதியினையும் அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டு சுற்றுலாப் பயணிகள் சிநேகபூர்வ டுக்டுக், புதிய உயர்காப்புப் பிரிவுகள் மற்றும் நடமாடும் சுற்றுலாப் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்பட்டமை என்பன 2018இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும். ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்சு, இந்தியா மற்றும் சீனாவில் இலங்கையினை முன்னுரிமை வாய்ந்த நாடாக நிலைப்படுத்தும் பொருட்டு டிஜிட்டல் ஊக்குவிப்புப் பிரச்சாரத்திற்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. அதேவேளை இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், பன்னாட்டு ரீதியாக மிகுந்த வரவேற்புடன் அங்கீகரிக்கப்பட்ட சாகச விளையாட்டான –அட்வெஞ்ஜர் றேசிங் வோர்ள்ட் சம்பியன்சிப்– நிகழ்விற்கு அநுசரணை வழங்கும். 2019 திசெம்பரில் நடத்தப்படவுள்ள முதலாவது பன்னாட்டு வேக சாகச ஓட்டத்திற்கு இலங்கை அனுசரணை வழங்குகிறது.



அட்டவணை 5.9
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2018 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 1,527,153 | 1,798,380 | 2,050,832 | 2,116,407 | 2,333,796 | 10.3 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| பொழுதுபோக்கு | 1,037,644 | 1,198,240 | 1,710,027 | 1,744,149(ஆ) | 1,979,819 | 13.5 |
| வியாபாரம் | 20,270 | 23,323 | 37,121 | 70,683(ஆ) | 71,255 | 0.8 |
| ஏனையவை | 469,239 | 576,817 | 303,684 | 301,575(ஆ) | 282,722 | -6.3 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 15,119 | 18,163 | 20,918 | 23,068 | 25,205 | 9.3 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 74.3 | 74.5 | 74.8 | 73.3 | 72.8 | -0.7 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 317,479 | 405,492 | 512,373 | 598,143 | 711,961 | 19.0 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 207,889 | 225,476 | 249,837 | 282,622 | 305,066 | 7.9 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (இ) | 299,890 | 319,436 | 335,659 | 359,215 | 388,487 | 8.1 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 129,790 | 135,930 | 146,115 | 156,369 | 169,003 | 8.1 |
| மறைமுக தொழில்வாய்ப்புக்கள் | 170,100 | 183,506 | 189,544 | 202,846 | 219,484 | 8.2 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மதிப்பீடுகள்

*மூலங்கள் :* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய சுற்றுலாச் சந்தையில் இலங்கையின் உள்ளார்ந்த வளம் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படாமல் இன்னமும் காணப்படுகின்றது.** சுற்றுலாத் துறையில் மிகச் சிறந்த முறையில் செயற்படும் சிங்கப்பூர், கொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற இப்பிராந்தியத்தின் மிகச் சிறிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பரந்தளவு சுற்றுலாச் சந்தைகளுக்கு பணியாற்றக்கூடிய இயலாற்றலைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, 2017இல் இலங்கையிலும் பார்க்க 91 மடங்கு சிறியதான சிங்கப்பூர் இலங்கையிலும் பார்க்க ஏறத்தாழ 6.6 மடங்கு கூடுதலான சுற்றுலாப் பயணிகளுக்குப் பணியாற்றிய வேளையில் இலங்கையிலும் பார்க்க 5 மடங்கு கூடுதலான வருவாய்களையும் ஈட்டிக் கொண்டது. அண்மையில் ஐக்கிய நாடுகள் உலக வர்த்தக அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது நகரங்களில் விருந்தினர் வளர்ச்சியைப் புரிந்துகொள்ளவும் முகாமைப்படுத்தவுமென 11 உபாயங்களையும் 68 வழிமுறைகளையும் குறித்துரைக்கிறது. இதன்படி, சுற்றுலா ஊக்குவிப்புப் பணிகளின் வழிகாட்டல் (2017 – 2020) மற்றும் அதிகரிக்கப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளின்படியும் இலங்கை அதன் சூழல், சமூக மற்றும் கலாச்சார மூலவளங்களுக்குத் தீங்குகளேதுமின்றி தங்கவைக்கப்படக் கூடிய உயர்ந்தபட்ச சுற்றுலாப் பணிகளின் எண்ணிக்கையினை குறித்துரைக்கின்ற சுற்றுலாப் பயணிகளின் இயலளவினை அடையாமலேயே மிகப்பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகளுக்குப் பணிகளை வழங்கக்கூடியதாக இருக்கிறது. 2020 அளவில் சுற்றுலா உபாயத் திட்டத்தின் நீடித்துநிலைத்திருக்கும் சுற்றுலா இலக்குகளை எய்துவதற்கு அரச தனியார் பங்குடமை முயற்சியினூடாக அரசாங்கத்திற்கும் சுற்றுலாத் தொழில்துறை ஆர்வலர்களுக்குமிடையே இணைக்கப்பட்டதொரு முயற்சி அவசியமாகும். இலங்கையின் நன்கறியப்பட்ட சுற்றுலாத் தலங்களும் சில தேசிய பூங்காக்களும் உச்சபருவ காலத்தில் அளவுக்கதிகமான நெரிசல்களைக் கொண்டனவாக இருப்பதனால் அவற்றிற்கு மிகச் சிறந்த தீர்வுகளைக் காண வேண்டியிருப்பதுடன் அனுமதிப் பங்குகளின் அடிப்படையில் அதேநேர கணனிவழி நுழைவுச்சீட்டு முறை போன்ற இணைப்புச் செயன்முறைகளும் நில, வான் மற்றும் நீர்வழிகளின் மூலம் முழுநாட்டையும் உள்ளடக்குகின்ற விதத்தில் கேபிள் கார் போன்றவற்றை உள்ளடக்கிய உயர் மற்றும் வினைத்திறன்மிக்க பொதுப் போக்குவரத்து இணைப்புக்களும் தேவைப்படுகின்றன.

### தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள்

**2018இல் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் போன்றவற்றிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் ஒரு உறுதியான வளர்ச்சியினைக் காட்டின.** 2018இல் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2018இல் ஐ.அ.டொலர் 995 மில்லியனுக்கு 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தொலைத்தொடர்பூட்டல் பணிகள் துணைத்துறையிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 140 மில்லியனிலிருந்து ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 147 மில்லியனுக்கு அதிகரித்தன. இவ்வளர்ச்சி பிரதானமாக இணைய அடிப்படையிலான தொடர்பூட்டல்களின் அதிகரித்த பாவனையினால் அடைந்து கொள்ளப்பட்டதுடன் ஆண்டுகாலப்பகுதியில் நிலையான மற்றும் செல்லிட அகலப்பட்டை சந்தாதாரர்களின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்ட அகலப்பட்டைத் தரவுப் பணிகளினால் ஆதரவளிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்காக உயர்ந்தளவான வேகமுடைய தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை ரெலிக்கொம் பிஎல்சியானது புத்தம் புதிய தொழில்நுட்பத்தின் கட்டம் 3 தரவு நிலையம் ஒன்றினை ஆரம்பித்ததுடன் இது இலங்கையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உண்மையான தரவு கொள்ளல் வசதி மற்றும் அதிகமாகப் பகிருகின்ற கணனிப் பணிகளை மேம்படுத்துகின்ற தேசிய தரவு நிலையமாக அங்கீகரிக்கப்பட்டது.

**கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத்துறையானது 2018இல் அதன் வளர்ச்சிப் போக்கில் தொடர்ந்தும் காணப்பட்டது.** இதன்படி, 2018இல் கணனி மற்றும் தகவல் பணிகளுக்கான உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 786 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 848 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது. வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்று செயன்முறைப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் இயலுமைப்படுத்தல் பணிகளின் விரைந்த விரிவாக்கம் இத்துறையில் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் பங்களித்தது. இது தொடர்பில் உலகளாவியளவில் மிகச்சிறந்த தரமான தீர்வுகளை வழங்குவதற்காக இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கம்பனிகளை இயலச்செய்வதனை முன்னிலைப்படுத்தி 2018 ஏப்பிறலில் 'அறிவூட்டலின் தீவு- இலங்கை அறிவாற்றல் தீர்வுகள்' எனும் கோசத்தின் மூலம் இலங்கையின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் வியாபாரச் செயன்முறை முகாமைத்துவத்துறைக்கான தேசிய நாமத்தினை இலங்கை வெளிப்படுத்தியது. இது உலகளாவிய கம்பனிகளை ஒட்டுமொத்த புத்தாக்க மையமாக உருவாக்குவதனை இயலச்செய்தல் மற்றும் இலங்கையினை ஆசியாவின் ஒரு டிஜிட்டல் நுழைவாயிலாக்குதல் போன்றவற்றினை நோக்காகக் கொண்டிருந்தது.

## 5.4.2 முதலாந்தர வருமானம்

**முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2018இல் ஒரு மிதமளவான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் மற்றும் அரசாங்கத்தின் செயற்றிட்டக்கடன்கள் கணக்குகளின் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளால் மேற்கொள்ளப்பட்ட பங்குலாபக் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் முதலாந்தரக் கணக்கின் பற்றாக்குறையானது 2017இன் ஐ.அ.டொலர் 2,319 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 2,399 மில்லியனுக்கு விரிவடைந்தது. அதேவேளை இலாபத்தன்மை கொண்ட நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகள் முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடுகையில் 2018இல் உயர்ந்தளவான பங்குலாபக் கொடுப்பனவுக்காக முன்னுரிமையளித்தன. குறிப்பாக பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் உள்ளடங்கலான பாரிய நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் ஒப்பீட்டளவிலான குறைந்த இலாபங்களின் தேறல்களின் மூலம் மீள்முதலீட்டு வருவாய்கள் 2018இல் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தன. மேலும், முன்னர் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக 2017 மேயிலும் 2018 ஏப்பிறலிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிவழங்கல்களின் புதிய வழங்கல்கள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளுடன் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு காரணமாக, 2018இல் சொத்துப்பட்டியல் முதலீட்டின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தன. எனினும், 2018இல் ஐ.அ.டொலர் 1.35 பில்லியனுக்கு வகைகூறிய பன்னாட்டு முறிகள் முதிர்ச்சியடைந்தமையுடன் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறி வழங்கல்களுக்கான கூப்பன் கொடுப்பனவுகள் குறைவடைந்தன. முதலாந்தர வருமானக் கணக்கின் ஏனைய முதலீடுகளின் வட்டிக் கொடுப்பனவின் கீழான பிரதான பங்கினைக் கொண்டுள்ள அரசாங்க வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு புதிய வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் மற்றும் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்றிட்டக் கடன்கள் போன்றவையும் காரணமாகும். 2018இல் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு அதிகரித்த உலகளாவிய கடன்வழங்கல் வீதங்களே காரணமாகும். அதேவேளை பிரதானமாக அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் முதலீட்டு வருமானங்களின் அதிகரிப்பின் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 262 மில்லியனுக்கு அதிகரித்தன.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**2018இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் மெதுவடைந்து ஆண்டுகாலப்பகுதியில் இரண்டாந்தர வருமானக் கணக்கின் செயலாற்றம் குறைவடைந்தமைக்கு வழிவகுத்தது.** இரண்டாந்தர வருமான கணக்கிற்கான உட்பாய்ச்சல்களின் முக்கிய மூலமாக காணப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் 1.1 சதவீத வீழ்ச்சிக்குப் பின்னர் 2018இல் ஐ.அ.டொலர் 7,015 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களின் அத்தகைய தொடர்ச்சியான மெதுவடைந்தமைக்கு உலகலாவிய வளர்ச்சியின் மந்தம் மற்றும் எண்ணெய் விலைகளின் தளம்பல்கள் போன்றவற்றின் காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் நிச்சயமற்ற புவிசார் அரசியல் நிலைமைகளே பெரிதும் பங்களித்தன. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின் படி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான ஒட்டுமொத்த புலம்பெயர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை 2018இலும் அதன் வீழ்ச்சிப்போக்கினை தொடர்ந்தது. உள்நாட்டு ஊழியர் சந்தையின் மேம்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புக்கள் மற்றும் சில வகைகளில் தேர்ச்சியற்ற பெண் வேலையாட்களாகப் புலம்பெயர்வதனை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான பல கொள்கை வழிமுறைகள் என்பன வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் செல்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதற்குப் பிரதானமாக பங்களித்தன. அதேநேரம், ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்க மாற்றல்களின் வடிவிலான உட்பாய்ச்சல்களில் ஒரு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. இத்தகைய அபிவிருத்திகள் மூலம், 2018இல் இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 7,023 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை தனியார் மாற்றல்கள் மற்றும் இலங்கையில் வாழும் வதிவற்றோர்களுடன் தொடர்புடைய கொடுப்பனவு என்பன 2018இல் சிறிதளவானதொரு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதன் காரணமாக இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6,327 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 6,163 மில்லியனுக்கு வகைகூறியது.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

5

**2018இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது.** பணிகள் கணக்கில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பு காணப்பட்டமைக்கு மத்தியிலும் வர்த்தகப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்கதொரு விரிவாக்கம் மற்றும் இரண்டாந்தர வருமான மீதியில் காணப்பட்ட சிறிதளவான வீழ்ச்சி போன்றவற்றினால் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் திருப்திகரமானதொரு வளர்ச்சியினைப் பதிவுசெய்த போதிலும் இறக்குமதிகளில் காணப்பட்ட உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக வர்த்தக மீதி விரிவடைந்தது. தனியாள் உந்துஊர்திகள், தங்கம் மற்றும் எரிபொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்வினால் முக்கியமாகத் தூண்டப்பட்டு இறக்குமதிச் செலவினங்கள் உயர்வடைந்தன. சுற்றுலா, போக்குவரத்து மற்றும் கணனி துணைத்துறையிலிருந்தான வருவாய்களின் வலுவான வளர்ச்சியொன்றின் மூலம் பணிகள் கணக்கின் மிகையானது 2018 காலப்பகுதியிலும் தொடர்ந்தும் சாதகமான உத்வேகத்தினைத் தொடர்ந்தது. முதலாந்தர வருமானக் கணக்கில் பற்றாக்குறையும் அதிகரித்த பங்கிலாபம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் மீள்முதலீட்டு வருவாய்களின் ஒரு குறிப்பிடத்தக்களவிலான குறைவு காரணமாக ஆண்டுகாலப்பகுதியில் மிதமானளவு விரிவடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் வீழ்ச்சியின் மூலம் மேலும் நடைமுறைக் கணக்கிற்கு சுமையேற்பட்டது. இதன் காரணமாக நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை 2017இன் ஐ.அ.டொலர் 2,309 மில்லியனுடன்

## சிறப்புக்குறிப்பு 6
## பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை நடைமுறைப்படுத்தல்

**அறிமுகம்**


இலங்கை மத்திய வங்கி தற்பொழுது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை உள்ளடக்குகின்ற வங்கித்தொழில் துறையினூடாக அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தும் அவசியத்தினை அங்கீகரிக்கும் விதத்தில் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை என அழைக்கப்படும் புதிய தரவு சேகரிப்பு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை இந்தியா, இந்தோனேசியா, மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற ஆசியாவிலுள்ள பிராந்திய பொருளாதாரங்கள் உட்பட உலகம் முழுவதிலுள்ள பல்வேறு நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

செயற்றிட்டமானது, அனைத்து எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களினையும் மிக நுண்ணிய மட்டங்களில் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் மீதான தரவுகள் உரிய நேரத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் பல முக்கிய திணைக்களங்களின் கண்காணிப்புச் செயன்முறைக்கு உதவுவதற்கு எதிர்பார்க்கிறது. இது, ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைக்கான காத்திரமான தரவு அறிக்கையிடல் கட்டமைப்பிற்கும் கூடியளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களைத் தொகுப்பதற்கும் அதேபோன்று காத்திரமான பேரண்டப் பொருளாதார கொள்கை வடிவமைப்பிற்கும் வசதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றின் கோட்பாட்டு ரீதியான வடிவமைப்பும் முக்கிய கூறுகளும்


பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றிலிருந்தான தரவுகள் முக்கியமாக அனைத்து எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மீதான கொடுக்கல்வாங்கல் ரீதியான தரவு, வெளிநாட்டு நாணயக் கணக்குகளிடையேயான உள்நாட்டு மாற்றல்கள், வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான வைப்புக்கள் மற்றும் மீளப்பெறுகைகள் அதேபோன்று வங்கித்தொழில் முறைமையூடாக கணக்கு வைத்திருக்காதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்குகின்றன.

வரைபடம் சி.கு.6.1
உத்தேச பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிக்கையிடல் பொறிமுறை



கோட்டுபாட்டு ரீதியான வடிவமைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையொன்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களின் அனைத்து வேறுபட்ட வகைகளும் உள்ளடக்கப்பட்டு தனியொரு அறிக்கையிடல் தளமூடாக அறிக்கையிடப்படுகின்றது. அறிக்கையிடப்படுகின்ற தளமானது “மூடப்பட்ட பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை” என்பதை அடிப்படையாகக் கொண்டு கோருநர் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை மற்றும் வங்கி பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை என அழைக்கப்படும் இரண்டு அறிக்கையிடல் வடிவங்களை உள்ளடக்கியுள்ளது.


வரைபடம் சி.கு.6.2
பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களின் வகைகள் - தொடர்பான கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்




**கோருநர் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை:** கோருநர் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது அனைத்து எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் (வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் ரூபாய் கணக்குகள் இரண்டும்) மற்றும் வாடிக்கையாளர்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து உருவாக்கப்பட்ட அனைத்து வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வங்கித்தொழில் துறையின் வாடிக்கையாளர்களது அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

| | கொடுக்கல்வாங்கலின் தன்மை | உதாரணம் |
|---|---|---|
| 1 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயத்திற்கான எல்லை கடந்த பெறுகைகள் | ஏற்றுமதிப் பெறுகைகள் |
| 2 | இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கு இன்றி எல்லை கடந்த வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் | பன்னாட்டு நாணய மாற்றல் பணிகளினூடாகப் பெறப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் |

வரைபடம் சி.கு.6.3
பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களின் வகைகள் - தொடர்பான கணக்குகளுக்கான வெளிப்பாய்ச்சல்கள்




| | | |
|---|---|---|
| 3 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான உள்நாட்டு உள்முக மாற்றல்கள் | மற்றொரு வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான நிதிய மாற்றல்களுடாக வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான வெளிநாட்டு நாணய நிதியங்களின் பெறுகை |
| 4 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வங்கிகளினால் செய்யப்பட்ட உள்நாட்டு வரவுகள் | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான வட்டிப் பெறுகைகள் |
| 5 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான வெளிநாட்டு நாணயங்களின் வைப்புக்கள் | சொந்த வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வெளிநாட்டு நாணயங்களின் வாடிக்கையாளர் வைப்புக்கள் |
| 6 | வங்கிகளின் வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவு | இலங்கை ரூபாவின் பெறுகைகளுக்காக வங்கிகளுக்கு வாடிக்கையாளர் நாணயங்களை விற்றல் |
| 7 | வதிவற்ற தரப்பினர்களிடமிருந்து வாடிக்கையாளரின் இலங்கை ரூபாக் கணக்கிற்கு இலங்கை ரூபாவிலான பெறுகைகள் | புலம்பெயர் இலங்கை வேலையாட்களினால் இலங்கை ரூபாவிலான உள்முக பணவனுப்பல்கள் |
| 8 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான எல்லை கடந்த கொடுப்பனவுகள் | சொந்த வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக ஏற்றுமதியாளர் ஒருவரின் இறக்குமதிக் கொடுப்பனவுகள் |
| 9 | நாணய மாற்றலுக்குப் பின்னர் வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து எல்லை கடந்த கொடுப்பனவுகள் | ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றியதன் பின்னரும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வெளிநாட்டு நாணயங்களை வைப்புச் செய்ததன் பின்னரும் சொந்த வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக வாடிக்கையாளர் ஒருவர் கொடுப்பனவுகளைச் செய்தல் |
| 10 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் இல்லாமல் மொத்த எல்லை கடந்த வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகள் | நாணயக் கடிதமொன்றினைத் திறந்ததன் பின்னர் வாடிக்கையாளர் ஊர்தி ஒன்றை இறக்குமதி செய்தல் மற்றும் கொடுப்பனவுகளைச் செய்தல் |
| 11 | வாடிக்கையாளர் வெளிநாட்டுக் கணக்குகளிலிருந்து உள்நாட்டு வெளிமுக மாற்றல்கள் | ஒரு வாடிக்கையாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்த இன்னொரு வாடிக்கையாளரின் கணக்கிற்கு வெளிநாட்டு நாணய நிதிகளை மாற்றுதல் |
| 12 | நாணய மாற்றல்களின் பின்னர் வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து உள்நாட்டுக் கொடுப்பனவுகள் | இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டதன் பின்னர் சொந்த வெளிநாட்டு நாணயக் கணக்கில் வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயங்களை வைப்புச் செய்தல் மற்றும் இன்னொரு வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வெளிநாட்டு நாணயங்களை மாற்றல் செய்தல் |

5

| | | |
|---|---|---|
| 13 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வங்கியினால் செய்யப்படும் உள்நாட்டுப் பற்றுக்கள் | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கலிருந்து கழிக்கப்பட்ட வங்கி விதிப்புக்கள் |
| 14 | இலங்கை ரூபாவில் வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து எடுப்பனவு செய்யப்படும் காசு | சொந்த நாணயக் கணக்கிலிருந்து வாடிக்கையாளர் இலங்கை ரூபாவில் எடுப்பனவு செய்தல் |
| 15 | வெளிநாட்டு நாணயத்தில் வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து காசை மீளப்பெறுதல் | சொந்த வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயங்களை எடுப்பனவு செய்தல் |
| 16 | பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டு நாணயத்தின் விற்பனை | வெளிநாட்டுப் பயணத்திற்காக வங்கிகளிலிருந்து வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தல் |
| 17 | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வாடிக்கையாளர் இலங்கை ரூபாக் கணக்கிற்கு நிதிகளை மாற்றுதல் | வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கும் இலங்கை ரூபாக் கணக்கிற்குமிடையிலான நிதிய மாற்றல்கள் |

**வங்கி பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை:** கொடுக்கல்வாங்கல் அடிப்படையின் மீது ஒவ்வொரு வங்கியினதும் வெளிநாட்டு நாணய நொஸ்ரோ கணக்குகளினூடாக இயலுமைப்படுத்தப்பட்ட, வங்கியின் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்கிக் கொள்வதற்கு வங்கி பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை எதிர்பார்க்கிறது.

**மூடிய பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிக்கையிடல் முறைமை:** கோருநர் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் முறைமை மற்றும் வங்கி பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை என்பனவற்றினூடாக உருவாக்கப்பட்ட அறிக்கைகள், மொத்த பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினூடாக அறிக்கையிடப்பட்ட தரவுகள் முழுமையாக உள்ளடக்கப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் வேறுபட்ட வெளிநாட்டு நாணய நொஸ்ரோ கணக்குகளின் மீதிகள் இணக்கம் செய்யப்படும்.

எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் (பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள்) மற்றும் உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் என முன்னெடுக்கப்படும் வேறுபட்ட வகைக் கொடுக்கல்வாங்கல்கள், வேறுபட்ட கொடுக்கல்வாங்கல் வகைகள், பாய்ச்சல்கள், நிதியத்தின் மூலங்கள் மற்றும் கணக்குகளின் வகை போன்ற கீழே காட்டப்பட்டவற்றைப் பயன்படுத்தி அவற்றின் அடிப்படையில் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலுக்காக வகைப்படுத்தப்பட்டன.

- **கொடுக்கல்வாங்கல் வகை:** பன்னாட்டு அல்லது உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்
- **கொடுக்கல்வாங்கல் பாய்ச்சல்:** உட்பாய்ச்சல்கள் (வரவு) அல்லது வெளிப்பாய்ச்சல்கள் (பற்று)
- **கொடுக்கல்வாங்கல் ஆரம்பித்தல் கணக்கு:** வாடிக்கையாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வங்கியின் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வங்கியின் காசுக் கணக்கு
- **நிதிகளின் மூலம்:** வெளிநாட்டுப் பயன்பெறுநர்கள், வாடிக்கையாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வங்கியின் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வங்கியின் பௌதீக காசுக் கணக்கு

ஆரம்ப மட்டமானது, கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம் கொடுக்கல்வாங்கல் செய்பவரின் வகை மற்றும் பயன்பெறுநரின் விபரங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய சில குறிப்பிட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். கொடுக்கல்வாங்கல் நோக்கம், பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிக்கையிடல் கட்டமைப்புடன் சேர்த்து அறிவிக்கப்படவுள்ள பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை நோக்க குறியீடொன்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையூடாக அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுக்கல்வாங்கல்களின் வேறுபட்ட வகைகளின் விபரணம் வரைபடம் சி.கு.6.1 மற்றும் வரைபடம் சி.கு.6.2இல் விபரிக்கப்பட்டுள்ளது.

## 2. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றின் பயன்பாடு

பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் தரவுகளின் பயன்பாடு ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைக்கான தரவுகளை வழங்குதல், சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களின் தொகுப்பிற்கான தரவுகளைப் பெறுதல் மற்றும் கொள்கை தீர்மானங்களுக்காக துணைநிரப்புத் தகவல்களின் ஏற்பாடு என்பனவற்றை உள்ளடக்குகிறது.

### 2.1 ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைக்கான தரவு அறிக்கையிடல் கட்டமைப்பு

முன்மொழியப்பட்டுள்ள பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை வங்கித்தொழில் முறைமையினூடாக எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களின் தன்மையினைக் கண்காணிப்பதற்குக் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும். புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினூடாக எல்லை கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மேலும் தாராளமயப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவது, அநேக நாடுகள் அவற்றின் மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தல்

5

செயன்முறையின் போது பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினைப் பின்பற்றியிருப்பதனால் வலுப்படுத்தப்பட்ட கண்காணிப்புடன் இணைந்து கொள்ளும். காத்திரமான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைக்காக பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றின் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளில் சிலவற்றைப் பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

- **பன்னாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களுடன் தொடர்புபட்ட, தனியான தளமொன்றினூடான வங்கித்தொழில் துறையின் கொடுக்கல்வாங்கல் தரவு அறிக்கையிடல் தேவைப்பாடுகளில் பெரும்பான்மையான விடயங்களை நிறைவு செய்தல்:** உத்தேச முறைமையானது, தனியான தரவு அறிக்கையிடல் தளமூடாக உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் பெரும்பாலும் அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் தேவைப்பாடுகளினதும் அறிக்கையிடலுக்கு வசதியளிக்கும். உத்தேச முறைமையானது வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்காக ஒரே மாதிரியான தரவுகளை அறிக்கையிடுகின்ற இரட்டித்தல் வேலைகளைத் தவிர்க்கும்.

- **ஒழுங்குமுறைப்படுத்தல் தரவு அறிக்கைகளைச் சரியான நேரத்தில் பாதுகாப்பான முறையில் அறிக்கையிடல்:** புதிய தளமானது மிக தொழில் நுணுக்கம் வாய்ந்த தவறுகளை கண்டுபிடிக்கக்கூடிய பிரமாணங்களுடன் கூடிய உயர் கால இடைவெளிகளைக் கொண்ட சரியான நேரமும் பாதுகாப்பும் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தரவுகளை உறுதிப்படுத்தும். இது தரவுகளை அறிக்கையிடுவதில் வர்த்தக வங்கிகளின் சுமையினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக மிகக் கூடியளவு விபரங்களைக் கொண்ட, அனைத்தையுமுள்ளடக்கிய தரவுகள் அறிக்கையிடப்பட்டமையினை உறுதிப்படுத்துகின்றது. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையூடாக அறிக்கையிடப்பட்ட தரவுகளைப் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வலுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியும்.

- **ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்களுக்கான புதிய திருத்தங்கள் உள்ளடக்கப்படுவது சுலபமாகிறது:** உத்தேச முறைமையானது ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு புதிய திருத்தங்களைச் செய்வதற்கும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக வசதியளிக்கப்பட்ட பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கும் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும்.

- **தற்போதுள்ள ஒழுங்குவிதிகளின் காத்திரமான தன்மையினை சரிபார்த்தல்:** வெளிநாட்டு நாணயத்துடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் பின்பற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் காத்திரமான தன்மையினை சரிபார்ப்பதற்காக இம்முறைமையினைக் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும். இது, அவசியமான வேளையில் தற்போதுள்ள கொள்கைகளுக்குப் பொருத்தமான மாற்றங்களைச் செய்வதற்கும் புதிய கொள்கைகளைப் பின்பற்றுவதற்கும் உதவும்.

- **ஏற்றுமதிப் பெறுகைகளை அறிக்கையிடுவதனைக் கண்காணித்தல்:** வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி, பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிப் பெறுகைகளைத் தாய் நாட்டிற்குள் பெறுவதற்கான தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்காக இலங்கை சுங்கத்திலிருந்தான தரவுகளை இணைப்பதற்குப் பயன்படுத்த முடியும்.

- **இலக்கிடப்பட்ட ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தலுக்காக வர்த்தக வங்கிகளுக்காக மிகக்கூடியளவு வாடிக்கையாளர் சார்ந்த தரவுத்தளம்:** வர்த்தக வங்கிகள், கூடியளவு வாடிக்கையாளர் மற்றும் கொடுக்கல்வாங்கல் நோக்கம் சார்ந்த தரவுகளை ஒன்றுசேர்த்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்காக தமது தரவுத் தளங்களை மேம்படுத்துவதில் நன்மைபெறும்.

### 2.2 சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்

பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமைத் தரவு, சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களைத் தொகுப்பதில் துணைநிரப்பியாக ஆரம்பத்தில் பயன்படுத்தப்படும். இது கொடுக்கல்வாங்கல் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தரவுகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுகிறது. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது சென்மதி புள்ளிவிபரங்களிலுள்ள பன்னாட்டு ரீதியாகத் தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் வகைகளுக்கு இசைவான தனித்துவமான நோக்கக் குறியீட்டு முறையைப் பயன்படுத்தும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது, நேரடி அளவீடுகளினூடாக மேலும், கண்காணிக்கப்பட வேண்டிய தேவையைக் கொண்ட விசேட வகைக் கொடுக்கல்வாங்கல்களில் பெறுநர் மற்றும்

5

அனுப்புனர்களை அடையாளம் காண்பதில் முக்கிய மூலமாக இருக்கும். பணிகள் கணக்கிலுள்ள கொடுக்கல்வாங்கல்களின் அனைத்து முக்கிய வகைகளையும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினூடாகத் தொகுக்க முடியும். கீழே காட்டப்பட்டவாறு பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை நடைமுறைப்படுத்துவதனூடாக சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களைத் தொகுப்பதில் சில முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- **சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களில் ஒட்டுமொத்த முன்னேற்றம்:** உத்தேச முறைமையானது, தரவுகளை உள்ளடக்குகின்ற நியதிகளில், சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களைத் தொகுக்கும் கட்டமைப்பினைக் குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய தரவானது, சென்மதி நிலுவைத் தொகுப்புச் செயன்முறையில் உள்ளடக்கப்பட வேண்டிய சாத்தியமான கொடுக்கல்வாங்கல்களின் வேறுபட்ட வகைகளை அடையாளம் காணுமென எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையிலிருந்தான தரவுப் பணிகள், ஆரம்ப வருமான மற்றும் இரண்டாந்தரக் கணக்குகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் வகைகளுக்கு உள்ளீடாக பயன்படுத்தப்படவுள்ள வேளையில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் ஏற்கனவேயுள்ள அளவீட்டின் துணைநிரப்பியாகவும் இருக்கிறது.

- **பணிகள் துறையின் அதிகரித்த உள்ளடக்கம்:** பணிகள் கணக்கிலுள்ள கொடுக்கல்வாங்கல்களின் அனைத்து முக்கிய வகைகளையும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றினூடாகத் தொகுக்க முடியும். தற்பொழுது பணிகள் கணக்கின் புள்ளிவிபரங்கள் தற்பொழுது ஆண்டு மற்றும் அரையாண்டு அளவீடுகளை அடிப்படையாகக் கொண் மதிப்பீடுகளின் மூலம் தொகுக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய தரவுகளின் தரம் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையூடாகக் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட முடியும். குறிப்பிட்ட துறைகள் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறை, இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கான செலவு, போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல்கள் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆலோசனை, ஆக்கவுரிமை மற்றும் வேறு அத்தகைய பணிக் கொடுக்கல்வாங்கல்கள் போன்ற தோற்றம் பெற்றுவருகின்ற அவசரகாலப் பணிகள் துணைத் துறைகள் மீதான தரவுகளையும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் கீழ் உள்ளடக்க முடியும்.

- **தற்போதைய வெளிநாட்டுத் துறை அளவீடுகளின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தல்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை தற்போதுள்ள அளவீடுகளின், குறிப்பாக, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் உள்ளடக்கத்தினைக் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவுபடுத்தும். குறித்துரைக்கப்பட்ட நிதியியல் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான அனைத்து தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களையும் அடையாளம் காண்பதன் மூலம் உள்ளார்ந்த அளவீட்டுக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினைக் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும்.

- **தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேம்பட்ட புள்ளிவிபரங்கள்:** புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மற்றைய தொழிலாளர் அல்லா பணவனுப்பல்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுடன் சேர்த்து அனைத்து வதிவோர் வெளிநட்டு நாணய மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குள் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறது. புதிய முறைமையானது, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கிணங்க, தொழிலாளர் பணவனுப்பல் பாய்ச்சல்களைத் தனித்தனியாகப்

வரைபடம் 4:
**பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பில் முக்கிய மைல்கற்கள்**

**2018**
- பூர்வாக கோட்பாட்டு வடிவமைப்பு

**2019**
- பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் வடிவமைப்பு
- ஒழுங்குவிதிகளின் உருவாக்கம்
- பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிமுகம் மற்றும் வங்கித்தொழில் துறைக்கு அறிக்கையிடும் தேவைப்பாடுகள்
- ஒழுங்குவிதிகளை வழங்குதல்
- வங்கிகளின் தகவல் தொழில்நுட்ப முறைமையினைத் தரமுயர்த்தல்
- கண்காணிப்புப் பிரிவொன்றினை ஏற்படுத்தல்
- வங்கிகளின் முறைமைகளிலிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைமையினை அபிவிருத்தி செய்தல்
- தெரிவுசெய்யப்பட்ட வங்கிகளுடன் முன்னோடிப் பரீட்சிப்புக்களை நடைமுறைப்படுத்தல்

**2020**
- புதிய கணக்காணிப்பு முறைமையின் மீது வங்கி அலுவலர்களுக்குப் பயிற்சி
- முழுமையான முறைமை நடைமுறைப்படுத்தல்

பெற்றுக்கொள்ளும். உத்தேவ பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை உள்முக மற்றும் வெளிமுக தொழிலாளர் பணவனுப்பல் பாய்ச்சல்கள் இரண்டினையம் பெற்றுக்கொள்வதில் நன்மையளிப்பதாக இருக்கும்.

- **தேசிய கணக்கு புள்ளிவிபரங்களுக்கான தரவு உள்ளீடுகள்:** சென்மதி நிலுவை புள்ளிவிபரக் கட்டமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தேசிய கணக்குகளைத் தொகுப்பதற்கான மிக நுண்ணிய மட்டத்திலான தரவுகளைப் பெற வசதியளிக்கும்.

### 2.3 பேரண்ட பொருளாதாரக் கொள்கையினை உருவாக்குவதற்கான துணைத் தகவல்கள்

பேரண்டப் பொருளாதாரக் கொள்கையினை உருவாக்குவதற்கான துணைத் தகவல்களாக பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றிலிருந்தான தரவுகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை பேரண்டப் பொருளாதாரக் கொள்கையினை உருவாக்குவதற்குப் பின்வரும் விதத்தில் உதவியாக அமையும்.

- **வெளிநாட்டுச் சமநிலையற்ற தன்மைகள் தொடர்பில் நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் சமிக்ஞைகளை வழங்குதல்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை, எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல் மீதான அதேநேரத் தரவுகளைச் சீர்ப்படுத்துவதற்கு வசதியளிக்கின்றது. உதாரணமாக, உண்மைச் சொத்துக்களில்/ கூட்டுறுதித் தொடர்மாடிமனைத் துறையில் வெளிநாட்டு முதலீடுகள் மீதான தரவுகளை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால் வெளிநாட்டு முதலீடுகளினால் உருவாக்கப்படும் ஏதேனும் உண்மைச் சொத்து திடீர் அதிகரிப்புக்களுக்கான சாத்தியத்தினை அடையாளம் காண்பதனை இயலச் செய்கிறது.

- **கொள்கை முன்னெடுப்புக்களின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மதிப்பிடுவதற்கான உள்ளீடுகளை வழங்குதல்:** நேரத்தினையும் மூலவளங்களையும் சேமிக்கும் பொருட்டு கொள்கை முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் சாத்தியத்தன்மையினை மதிப்பிடுவது முக்கியமானதாகும். பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை சரியான நேரம் மற்றும் கால இடைவெளி முறை மீதான தரவுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய தரவினைத் தருகின்றது. உதாரணமாக, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் உள்நாட்டுக் கிளைகளை நிறுவியதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியின் சாத்தியமான சேமிப்புக்கள் மீதான தகவல்களைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

- **நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு வசதியளித்தல்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையிலிருந்து பெறப்பட்ட தரவுகளூடாக, உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மைப் பிரச்சனைகளுடன் மிகப் பாதிக்கப்படக்கூடிய துறைகளை அடையாளம் காணமுடியும். இதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவது தொடர்பிலான கொள்கைத் தீர்மானங்களுக்கு தரவு உள்ளீடுகள் வழங்கப்படுகின்றன.

## 3. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பு

2019இன் பின்னரைப் பகுதியில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தல் 2020இன் முதலரைப்பகுதியில் நிறைவு செய்யப்படும். முக்கியமான அனைத்து ஆரம்பப் பணிகளும் 2019 காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும். மத்திய வங்கி தற்பொழுது பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அறிக்கையிடல் தேவைப்பாடுகளை வடிவமைக்கும் செயன்முறையிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் ஆரம்ப வரைவிலும் ஈடுபட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் முன்னணி ஒத்துழைப்புத் திணைக்களங்கள் தற்பொழுதுள்ள அறிக்கையிடல் வழிப்படுத்தல் வழிவகைகள் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தல் மீது தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்களை நடத்துகின்றது. முன்னோக்கிச் செல்கையில், இலங்கை மத்திய வங்கி வங்கித்தொழில் துறைக்கு முறைமைகளை அறிமுகப்படுத்தவுள்ளதுடன், அறிக்கையிடல் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தல் வங்கிகளின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளைத் தரமுயர்த்தல் மற்றும் வங்கி அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளித்தல் ஆகிய செயன்முறைகளில் வங்கித்தொழில் துறையுடன் நெருக்கமாக இணைப்புக்களை மேற்கொள்ளும்.

ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 2,814 மில்லியனுக்கு விரிவடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2017இன் 2.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.2 சதவீதமாக காணப்பட்டது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**2018இல் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் அரசாங்கத்திற்கான மூலதன மாற்றல்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், தனியார் துறைக்கான மூலதன மாற்றல் ஒரு மேம்பாட்டினைப் பதிவுசெய்தது.** இதன் காரணமாக மூலதனக் கணக்கானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 11 மில்லியன் கொண்டதொரு மிகையுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 14 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்தது.

## 5.7 நிதியியல் கணக்கு

**தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் வீழ்ச்சியடைந்தது.** இருப்பினும், நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களினை விஞ்சி 2018 ஆண்டுகாலப்பகுதியில் தேறிய அடிப்படையில் பொறுப்புக்களின் ஒரு திரட்சியினைத் தோற்றுவித்தது. ஆண்டுகாலப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களாக ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி மற்றும் ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் கொண்ட முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்றவை காணப்பட்டன. நிதியியல் கணக்கின் பிரதான வெளிப்பாய்ச்சல்களாக ஐ.அ.டொலர் 1.35 பில்லியனுக்கு வகைகூறிய வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி மற்றும் ஐ.அ.டொலர் 990 மில்லியன் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க பிணையங்களிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் போன்றவற்றைக் கொண்டிருந்தது. அதேவேளை, ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தலையிட்டமைக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இழப்புடன், அரச வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் ஆண்டுகாலப்பகுதியில் சொத்துக்களின் தேறிய கையேற்புகளில் கவனத்திற்கொள்ளத்தக்கதொரு வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இதன்படி 2018இல் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 2,737 மில்லியனுக்கு வகைகூறிய வேளையில் சொத்துக்களின் தேறிய கையேற்பு ஐ.அ.டொலர் 591 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. 2018இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஒப்பீட்டளவில் உறுதியான நிலை நிலவியதுடன் இது வெளிநாட்டு தாங்கியிருப்புக்களைக் கட்டியமைக்கக்கூடிய

அட்டவணை 5.10 அ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2017(அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| நிதியியல் கணக்கு | 2,938 | 5,061 | -591 | 2,737 |
| நேரடி முதலீடு | 72 | 1,373 | 68 | 1,611 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 68 | 532 | 58 | 463 |
| வருவாய்களில் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 55 | 32 | 48 | 238 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 55 | 32 | 48 | 238 |
| வருமானத்தின் மீள் முதலீடு | 13 | 500 | 10 | 225 |
| படுகடன் கருவிகள் | 4 | 840 | 10 | 1,148 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர் | 4 | 840 | 10 | 1,148 |
| சொத்துப்பட்டியல் முதலீடு | ... | 1,771 | - | 129 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | 359 | - | -4 |
| படுகடன் பிணையங்கள் | ... | 1,413 | - | 134 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | -500 | - | -1,350 |
| நீண்ட காலம் | ... | -500 | - | -1,350 |
| பொது அரசாங்கம் | - | 1,913 | - | 1,484 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | 81 | - | -96 |
| நீண்டகாலம் | - | 1,832 | - | 1,580 |
| திறைசேரி முறிகள் | - | 360 | - | -894 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | -28 | - | -26 |
| நாட்டுக்கான முறிகள் | - | 1,500 | - | 2,500 |
| நிதியியல் பெறுதிகள் | - | - | - | - |
| ஏனைய முதலீடு | 82 | 1,916 | 343 | 997 |
| நாணயமும் வைப்புக்களும் | 78 | -228 | 80 | -632 |
| மத்திய வங்கி | - | -402 | - | -1 |
| குறுங்காலம் | - | -2 | - | -1 |
| நீண்ட காலம் | - | -400 | - | - |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 78 | 173 | 80 | -631 |
| குறுங்காலம் | 11 | 173 | -189 | -631 |
| நீண்ட காலம் | 67 | - | 268 | - |
| பக்கம் 175 இல் தொடர்கிறது. | | | | |
| ஞாபகார்த்த விடயங்கள் | | | | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் | | | | |
| பங்கு மூலதனம் | | 32 | | 238 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 500 | | 225 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 959 | | 1,574 |
| கம்பனிகளுக்கிடையிலானகடன்களுக்கான மீள்கொடுப்பனவு | | -119 | | -426 |
| மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1) | | 1,373 | | 1,611 |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 538 | | 525 |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ) | | 1,910 | | 2,136 |
| கொழும்பு பங்கு பரிவர்த்தனை இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள் | | 279 | | -55 |
| நேரடி முதலீடுகள் | | -80 | | -51 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | 359 | | -4 |
| ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) இலான தேறிய வெளிநாட்டு முதலீடு | | 441 | | -990 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 1,667 | | 706 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 1,226 | | 1,696 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பாதுகாப்பில் வித்தியாசங்கள் மற்றும் தொகுப்புக் காரணமாக முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம்

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டு செலாவணியை ஈர்த்து கொள்வதற்கு மத்தியவங்கியினை இயலச்செய்தது. இது 2018 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனுக்கு வகைகூறிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டு நாட்டுக்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான வருவாய்களுடன் சேர்த்து 2018 ஏப்பிறலில் உள்ளவாறு

5

வரைபடம் 5.12
**நிதியியல் கணக்கு**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஐ.அ.டொலர் 9.9 மில்லியன் கொண்ட வரலாற்று ரீதியில் உயர்மட்டத்தினைப் பதிவுசெய்வதற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கட்டியெழுப்புவதனை இயலச்செய்தது. இருப்பினும், உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகளின் இறுக்கமான தன்மை மற்றும் அதன்விளைவான அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை போன்றவற்றிலிருந்தான மூலதனப்பாய்ச்சல்களின் புறக்கீடு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கு 2018 ஏப்பிறலிலிருந்து மத்திய வங்கியினை தேவைப்படுத்தியது. இத்தகைய அபிவிருத்திகள் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுக் கணக்குகளின் வெளிப்பாய்ச்சலுடன் இணைந்து மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுக்கு குறைவடையச் செய்த வேளையில் திரண்ட நிலுவையானது ஐ.அ.டொலர் 1,103 மில்லியன் கொண்டதொரு பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

### 5.7.1 நேரடி முதலீடு

**முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2018இல் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்தை அடையும் வகையில் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்துள்ளன.** முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் உள்ளடங்கலான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 1,910 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 2,136 மில்லியனாகக் காணப்பட்டன. அதேவேளை முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,373 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 1,611 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளன. ஆண்டுகாலத்தில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1,148 மில்லியன் கொண்ட கம்பனிகளுக்கிடையிலான தேறிய படுகடனையும், ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்களையும் ஐ.அ.டொலர் 238 மில்லியன் கொண்ட பங்குரிமை மூலதனத்திலுள்ள தேறிய முதலீடுகளையும் உள்ளடக்கியிருந்தன. ஆண்டுகாலத்தில் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளால் அறிவிக்கப்பட்ட ஒப்பீட்டளவில் குறைந்த இலாபத்தன்மையை உணர்த்தும் வகையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018இல் மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்களில் குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2018இல் ஐ.அ.டொலர்கள் 426 மில்லியன் பெறுமதியான கம்பனிகளிற்கிடையிலான படுகடனில் ஒரு கணிசமான மீள்கொடுப்பனவு காணப்பட்டமை ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்களில் பாதகமாகத் தாக்கம் செலுத்தியது. மேலும், தொடர்பற்ற தரப்பினரிடமிருந்து முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 2017இன் ஐ.அ.டொலர் 538 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 525 மில்லியனாகக் காணப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களுக்கு வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை பன்னாட்டு துறைமுக (தனியார்) குழுமக் கம்பனியினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 828 மில்லியனே முக்கிய காரணமாகும். இது ஆண்டுகாலத்தில் அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியன் கொண்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகாலக் குத்தகையிலிருந்தான பெறுகைகளை உள்ளடக்கியுள்ளன. 2018இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் பெருமளவில் துறைமுகங்கள், தொலைத்தொடர்பூட்டல்கள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி மற்றும் சுற்றுலாவிடுதி என்பவற்றுடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அதேவேளையில் தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்படுகின்றன. உடனடி முதலீட்டாளர்களின் நாடுகளின் அடிப்படையில் சீனா, ஹொங்கொங், இந்தியா, மலேசியா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன 2018இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முதல் ஐந்து நாடுகளாகக் காணப்பட்டன. அதேவேளை, தேறிய சொத்துக்களின் கையேற்பின் விளைவாகிய இலங்கைக் கம்பனிகளினால் வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகள் 2017இன் ஐ.அ.டொலர் 72 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 68 மில்லியனாகக் காணப்பட்டன.

### 5.7.2 சொத்துப்பட்டியல் முதலீடுகள்

#### பங்குரிமை மூலதனம்

**நேரடி முதலீடுகள் நீங்கலான வெளிநாட்டு பங்குரிமை மூலதன முதலீட்டு உட்பாய்ச்சல்களைப் பிரதிபலிக்கின்ற பங்குரிமை மூலதனத்திலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2018இல் சிறிதளவான தேறிய வெளிப்பாய்ச்சலைப்**

5

**பதிவுசெய்துள்ளன.** நேரடி முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்களாக வகைப்படுத்தப்படாத கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு முதலீடுகளையும் இலங்கையின் தொழில் முயற்சியொன்றின் மொத்தப் பங்குடமையில் 10 சதவீதத்திற்கும் குறைவான உடமையைக் கொண்ட வதிவற்றோரினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கான கணக்குகளையும் பங்குரிமை மூலதனத்திலுள்ள சொத்துப்பட்டியல் முதலீடுகள் உள்ளடக்குகின்றன. தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களின் மூலதனச் சந்தை மீதான உலகளாவிய முதலீட்டாளர்களின் குறைந்த ஆர்வத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் பங்குரிமை மூலதனத்தின் வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2018இல் ஐ.அ.டொலர் 4 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் ஒன்றினைப் பதிவுசெய்துள்ளது. இது இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 82 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களையும் முதலாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 78 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியுள்ளன. ஐ.அ.டொலர் 202 மில்லியன் கொண்ட இரண்டாந்தரச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்களையும் ஐ.அ.டொலர் 157 மில்லியன் கொண்ட முதலாந்தரச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியுள்ள 2017இன் ஐ.அ.டொலர் 359 மில்லியனுக்கு வகைகூறிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடும் போது 2018இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள தேறிய உட்பாய்ச்சல்களில் கடுமையான மிதமடைவொன்று காணப்பட்டது.

5

### படுகடன் பிணையங்கள்

**இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய கரைகடந்த முறி வழங்கலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசின் இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலானது படுகடன் பிணையங்களின் பேரிலான முக்கிய உட்பாய்ச்சலாகக் காணப்படுகின்ற வேளையில் 2018இல் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட பல பன்னாட்டு முறிகள் முதிர்வடைந்துள்ளன.** 2018 ஏப்பிறலில் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1.25 பில்லியன் பெறுமதியான 5 வருட மற்றும் 10 வருட முதிர்வுக் காலங்களைக் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வழங்கலானது 2007இற்குப் பின்னரான பன்னாட்டு முறிகள் சந்தையில் இலங்கையின் பன்னிரண்டாவது ஐ.அ.டொலர் அடிப்படை அளவுக் குறியீட்டு வழங்கலினைக் குறித்துக் காட்டுகின்றது. இத்தகைய நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் இலங்கையின் முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மையைத் தொடர்ந்தும் பிரதிபலிக்கும் வகையில் ஆரம்ப விலையிடல் வழிகாட்டலுக்குள்ளாகவே விலையிடப்பட்டுள்ளன. பெடரல் றிசேர்வ் வங்கியின் கொள்கை வீத அதிகரிப்புக்களுடன் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் கணிசமானளவு வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. ஏற்படுத்தியிருந்தன. அதன்படி திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் 2018இல் முறையே ஐ.அ.டொலர் 894 மில்லியனையும் ஐ.அ.டொலர் 96 மில்லியனையும் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவு செய்துள்ளன. அதேவேளை இலங்கை அபிவிருத்தி முறிகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் 2018இல் ஐ.அ.டொலர் 26 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவு செய்துள்ளன. 2018 ஆண்டுகாலத்தில் படுகடன் பிணையங்கள் தொடர்பிலான முக்கிய வெளிப்பாய்ச்சல்கள் வங்கித்தொழில் துறையால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1,350 மில்லியன் கொண்ட பல்வேறுபட்ட பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சியுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டுள்ளதுடன் இது இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியனையும் தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 750 மில்லியனையும் டிஎவ்சிசி வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

## 5.7.3 ஏனைய முதலீடுகள்

### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**சொத்துக்களின் வடிவிலான நாணயம் மற்றும் வைப்புக்கள் அதிகரித்துள்ள வேளையில் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் 2018இல் குறிப்பிடப்பட்டதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.** இதற்கு வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புக்களுடன் தொடர்பான சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைவுமே முக்கிய காரணமாகும். அதன்படி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்துக்களின் வடிவிலான நாணயம் மற்றும் வைப்புக்கள் 2018இல் ஐ.அ.டொலர் 80 மில்லியனால் அதிகரித்துள்ள வேளையில் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 632 மில்லியனால் குறைவடைந்துள்ளது. வங்கித்தொழில் துறையின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி ஏற்படுவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட கணிசமானளவிலான அழுத்தங்களின் காரணமாக இருக்கக்கூடியதுடன் இது, குறிப்பாக வதிவற்றோரால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்படும் வைப்புப் பொறுப்புக்களில் குறைவினையும் குறிப்பாக 2018இன் பிற்பகுதியில் ஏற்றுமதிப் பெறுகைகளில் சாத்தியமான குறைவினையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

### கடன்கள்

**நிதியியல் கணக்கிற்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் 2018இல் மிதமடைந்துள்ளன.** ஆண்டுகாலத்தில் வங்கித்தொழில் துறையினால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டுக்கடன்கள் கணிசமானளவான அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ள வேளையில் முக்கியமாக அரசிற்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் குறைவடைந்ததன் காரணமாக தேறிய கடன் உட்பாய்ச்சல்களில் குறைவொன்று ஏற்பட்டது. அதன்படி, நிதியியல் கணக்கிற்கான

கடன்களின் தேறிய உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 1,889 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 1,568 மில்லியனாகக் காணப்படுகின்றன.

**2018 ஆண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக்கடன்களின் கணிசமானளவான மீள்கொடுப்பனவுகளின் காரணமாக அரசிற்கான தேறிய வெளிநாட்டுக்கடன் உட்பாய்ச்சல்கள் மிதமடைந்துள்ளன.** அரசிற்கான தேறிய வெளிநாட்டுக்கடன் உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 1,223 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 558 மில்லியனாகக் காணப்படுகின்றன. இது ஆண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 2,329 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக்கடன் பகிர்ந்தளிப்புக்களையும் ஐ.அ.டொலர் 1,771 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக்கடன் மீள்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ளது. மொத்த வெளிநாட்டுக்கடன் பகிர்ந்தளிப்புக்களில் ஐ.அ.டொலர் 1,204 மில்லியன் கொண்ட செயற்றிட்டக்கடன்கள், ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி மற்றும் ஐ.அ.டொலர் 125 மில்லியன் கொண்ட நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் என்பன உள்ளடங்குகின்றன. 2018இல் அரசின் பாரிய செயற்றிட்டக்கடன்களின் உட்பாய்ச்சல்களில் மாத்தறை முதல் பெலியட்ட வரையான தென்பகுதி விரைவுப் பாதை பிரிவு 1 இற்கான செயற்றிட்டம், கெரவலப்பிட்டியவிலிருந்து கடவத்தை வரையான வெளிச்சுற்று நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் கட்டம் III களனி கங்கைக்கு மேலாக புதிய பாலக் கட்டுமாணச் செயற்றிட்டம் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பிரிவு 3 என்பனவற்றிற்காகப் பெறப்பட்ட கடன்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட அதேவேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் கடன்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. கடன் மீள்கொடுப்பனவுகளின் நியதிகளில், வெளிநாட்டு செயற்றிட்டக்கடன்களின் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 1,158 மில்லியனுக்கு வகைகூறியுள்ள அதேவேளையில் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மீள்கொடுப்பனவு ஐ.அ.டொலர் 613 மில்லியனாகக் காணப்படுகின்றன. அரசின் வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகளின் கடப்பாடுகளும் சில ஆண்டுகளாக அதிகரித்து தேறிய அடிப்படையிலான அரசின் வெளிநாட்டுக் கடன்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமைக்கு வழிவகுத்துள்ளது.

**வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள், தனியார்துறை, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் மத்திய வங்கியால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களும் 2018இல் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்துள்ளன.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் தேறிய வெளிநாட்டுக்கடன் உட்பாய்ச்சல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 271 மில்லியனுடன் ஒப்பிடும் போது ஐ.அ.டொலர் 697 மில்லியனாகக் காணப்படுகின்றன. இத்தகைய அதிகரிப்பு முக்கியமாக வங்கித் தொழில் துறையின் கணிசமானளவான குறுங்காலக் கடன் உட்பாய்ச்சல்களினால் தூண்டப்பட்டுள்ளது. மேலும் ஐ.அ.டொலர் 657 மில்லியன் கொண்ட தனியார்துறையின் கடன் உட்பாய்ச்சல்களை உள்ளடக்கியுள்ள ஏனைய துறைகளுக்கான தேறிய வெளிநாட்டுக்கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 61 மில்லியனுக்கு வகைகூறியுள்ள வேளையில் ஆண்டுகாலத்தில் அரசுக்குச் சொந்தமான வியாபாரத்

அட்டவணை 5.10 ஆ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| **ஏனைய முதலீடு (பக்கம் 172 இலிருந்து தொடர்கிறது)** | | | | |
| கடன்கள் | - | 1,889 | - | 1,568 |
| மத்திய வங்கி | - | 184 | - | 252 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 184 | - | 252 |
| துணைநில் ஒழுங்கு | - | -235 | - | - |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | 419 | - | 252 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 271 | - | 697 |
| குறுங்காலம் | - | -280 | - | 844 |
| நீண்ட காலம் | - | 551 | - | -146 |
| பொது அரசாங்கம் | - | 1,223 | - | 558 |
| நீண்ட காலம் | - | 1,223 | - | 558 |
| ஏனைய துறைகள் (இ) | - | 211 | - | 61 |
| நீண்ட காலம் | - | 211 | - | 61 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 35 | 195 | 148 | 224 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 17 | - | -10 | - |
| குறுங்காலம் | 17 | - | -10 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 18 | 195 | 157 | 224 |
| குறுங்காலம் | 18 | 195 | 157 | 224 |
| பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | -31 | 61 | 116 | -162 |
| மத்திய வங்கி | - | 61 | - | -162 |
| குறுங்காலம் (உ) | - | 61 | - | -162 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -31 | - | 116 | - |
| குறுங்காலம் | -31 | - | 116 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **2,784** | | **-1,002** | |
| நாணய தங்கம் | - | | -103 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 2 | | -3 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 2,782 | | -896 | |
| நாணயமும் வைப்புக்களும் | 393 | | -1,012 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 859 | | 466 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | -465 | | -1,478 | |
| பிணையங்கள் | 2,389 | | 122 | |
| படுகடன் பிணையங்கள் | 2,389 | | 122 | |
| நீண்ட காலம் | 2,389 | | 122 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,123** | | **-3,328** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **1,223** | | **558** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 2,544 | | 2,329 |
| செயற்றிட்டக்கடன்கள் | | 1,544 | | 1,204 |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | | 1,000 | | 1,000 |
| நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் கடன்கள் | | - | | 125 |
| மீள்கொடுப்பனவுகள் | | 1,320 | | 1,771 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

5

தொழில்முயற்சிகளினால் எவ்வித வெளிநாட்டுக்கடன்களும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. தனியார்துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் செலுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக்கடன் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 596 மில்லியனுக்கு வகைகூறியுள்ளது. இதில் தனியார்துறையினால் ஐ.அ.டொலர் 410 மில்லியனும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் ஐ.அ.டொலர் 186 மில்லியனும் வெளிநாட்டுக்கடன் மீள்கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டுள்ளன. அதேவேளை ஆண்டுகாலத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான ஐந்தாவது தொகுதியின் பெறுகைகளின் மூலம் மத்திய வங்கியின் வெளிநாட்டுக்கடன்கள் ஐ.அ.டொலர் 252 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் ஒன்றினைப் பதிவுசெய்துள்ளன.

### பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் முற்பணங்கள் மற்றும் ஏனைய கணக்குகள்

**வதிவோரினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களும் அதேபோன்று வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களும் 2018இல் அதிகரித்துள்ளன.** பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடனின் முக்கிய கூறாக விளங்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் 2018 ஆண்டுகாலத்தில் அதிகரித்துள்ளன. பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடனின் தேறிய மீண்டெழும் பொறுப்புக்கள் முக்கியமாக ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட அதிகரித்த எரிபொருள் இறக்குமதியினால் தூண்டப்பட்டு 2017இன் ஐ.அ.டொலர் 195 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது ஐ.அ.டொலர் 224 மில்லியன் அதிகரிப்பினை விளைவித்தது. அதேவேளை, கரைகடந்த வர்த்தகப் பங்குபற்றுனர் மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்கு இலங்கையின் ஏற்றுமதியாளர்களால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடனை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் மீதான சொத்துக்களின் கையேற்பு 2017இன் ஐ.அ.டொலர் 35 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 148 மில்லியனுக்கு அதிகரித்துள்ளன. மேலும், முக்கியமாக மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களை உள்ளடக்குகின்ற ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் ஐ.அ.டொலர் 162 மில்லியன் கொண்ட தேறிய வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ள வேளையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏனைய பெறத்தக்க கணக்குகளும் 2018இல் ஐ.அ.டொலர் 116 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளன.

### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

அட்டவணை 5.11
**2018 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொ. மில்லியன் |
|---|---|
| **அரசாங்க திட்டங்கள் - மொத்தம்** | **1,204** |
| இதில் | |
| **சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **315** |
| இதில் | |
| மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையான தெற்கு விரைவுப்பாதையின் நீடிப்பு கட்டுமானம் - பகுதி 1 | 109 |
| கெரவலப்பிட்டியவிலிரந்து கடவத்தை வரையான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டுமானச் செயற்றிட்டம் - கட்டம் III | 70 |
| அந்தரவேவ திட்டம் ஊடாக மத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான தெற்கு விரைவுப்பாதையின் நீடிப்பு கட்டுமானம் - பகுதி 4 | 37 |
| பெலியத்தையிலிருந்து வற்றிய வரையான தெற்கு விரைவுப்பாதையின் நிட்டிப்பு கட்டுமானம் - பகுதி 2 | 24 |
| அம்பாந்தோட்டை மைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 21 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **276** |
| இதில் | |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 3 | 46 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு கடன் வசதி | 37 |
| சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன் வசதி – மேலதிக நிதியிடல் | 25 |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 4 | 20 |
| இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வித முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 1 | 18 |
| **யப்பானிய அரசாங்கம்** | **157** |
| இதில் | |
| களனி ஆற்றிற்கு மேலான புதிய பாலக் கட்டுமானச் செயற்றிட்டம் | 48 |
| பெரும் கொழும்பு கடத்தல் மற்றும் வழங்கல் இழப்புக்களை குறைத்தல் செயற்றிட்டம் | 35 |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டம் | 16 |
| தேசிய வீதி வலையமைப்பின் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்றிட்டம் | 16 |
| தேசிய வீதி வலையமைப்பின் பாரிய பாலங்களின் கட்டுமானச் செயற்றிட்டம் | 12 |
| **பன்னாட்டு அபிவிருத்திச் சபை** | **125** |
| இதில் | |
| இரண்டாம் நலத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 24 |
| நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு செயற்றிட்டம் | 21 |
| திறன் விருத்திச் செயற்றிட்டம் | 15 |
| **கல்யொன் விவசாயக் கடன்** | 57 |
| களனி உரிமை வங்கி நீர் வழங்கல் செயற்றிட்டம் - கட்டம் II இனை நடைமுறைப்படுத்தல் | 38 |
| பெரும் மாத்தளை நீர் வழங்கல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | 19 |
| **இந்திய அரசாங்கம்** | **49** |
| இதில் | |
| இரண்டு உயர் கரையோர கடல்றோந்துக் கப்பல் கொள்முதல் | 27 |
| **சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம்** | **41** |
| இதில் | |
| முன்னுரிமை வீதிகளின் செயற்றிட்டம் 3 (கட்டம் II) | 19 |
| **கோப் சென்றலே றைபிசன் - பொறென்லீன் பர்ங்க்** | 32 |
| இதில் | |
| 463 கிராமிய பாலங்களின் கட்டுமாணம் | 9 |

*மூலம்:* நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**2018 ஆண்டுகாலத்தில் ஒதுக்குச்சொத்துக்களின் இருப்புக்களில் ஏற்பட்ட குறைவுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2018இல் ஒதுக்குச்சொத்துக்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளன.** ஒதுக்குக் கொடுக்கல்வாங்கல்கள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,784 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2018இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,002 மில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளன. ஆண்டுகாலத்தில் மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புக்கள் ஐ.அ.டொலர் 1,012 மில்லியனால் குறைவடைந்துள்ள வேளையில்

வெளிநாட்டுப் படுகடன் பிணையங்களிலுள்ள மத்திய வங்கியின் முதலீடு ஐ.அ.டொலர் 122 மில்லியனால் அதிகரித்துள்ளது. மேலும், மத்திய வங்கி 2018 ஆண்டுகாலத்தில் ஐ.அ.டொலர் 103 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையால் அதனது நாணயத் தங்க உடமைகளைக் குறைத்துக் கொண்டுள்ளது.

## 5.8 திரண்ட நிலுவை

**ஆய்வுக்குரிய காலத்தில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற திரண்ட நிலுவையானது 2018இல் பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்துள்ளது.** திரண்ட நிலுவையானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,068 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 1,103 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்துள்ளது. இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் பெறுகைகள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகாலக் குத்தகையின் பெறுகைகள் என்பவற்றால் ஆண்டுகாலத்தில் நிதியியல் கணக்கில் ஏற்பட்ட கணிசமான உட்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 6,597 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 5,495 மில்லியனாக வீழ்ச்சியடைந்தமைக்குத் தொடர்ச்சியான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் 2018இல் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு செலாவணியின் தேறிய வழங்கல்கள் என்பனவே முக்கிய காரணமாகும்.

## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமைகள் அதிகரித்துள்ள வேளையில் 2018இல் வெளிநாட்டுச் சொத்து நிலைமைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.** நேரடி முதலீட்டின் சொத்து நிலைமைகள், நாணயம் மற்றும் வைப்புக்கள் மற்றும் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் மொத்த வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 12,704 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 12,065 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஒதுக்குச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட குறைவே முக்கிய காரணமாகும். வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் அதிகரிப்புடன் 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 62,486 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையுடன் ஒப்பிடும் போது நேரடி முதலீட்டு இருப்பு நிலைமை மற்றும் வர்த்தக வங்கிகள் மற்றும் அரசின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்வே இவ்வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். இத்தகைய அபிவிருத்திகளுடன் வெளிநாட்டு மொத்தப் பொறுப்பு மற்றும் சொத்து நிலைமைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக்

அட்டவணை 5.12
**பன்னாட்டு முதலீட்டு நிலைமை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | 1,375 | 10,755 | 1,433 | 12,757 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 1,366 | 7,423 | 1,414 | 8,351 |
| படுகடன் கருவிகள் | 9 | 3,332 | 19 | 4,406 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | ... | 15,620 | ... | 14,629 |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | | 1,533 | | 1,824 |
| ஏனைய துறைகள் | | 1,533 | | 1,824 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | ... | 14,087 | ... | 12,805 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | 1,666 | ... | 249 |
| நீண்ட காலம் | ... | 1,666 | ... | 249 |
| பொது அரசாங்கம் | | 12,244 | | 12,385 |
| குறுங்காலம் | | 167 | | 60 |
| நீண்ட காலம் | | 12,077 | | 12,326 |
| ஏனைய துறைகள் | | 177 | | 171 |
| நீண்ட காலம் | | 177 | | 171 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **3,371** | **34,186** | **3,714** | **35,100** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **784** | **2,213** | **864** | **1,581** |
| மத்திய வங்கி | | 1 | | ... |
| குறுங்காலம் | | 1 | | ... |
| நீண்ட காலம் | | - | | - |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 784 | 2,212 | 864 | 1,580 |
| குறுங்காலம் | 546 | 2,212 | 357 | 1,580 |
| நீண்ட காலம் | 238 | | 507 | |
| **கடன்கள்** | | **28,884** | | **30,382** |
| மத்திய வங்கி | | 765 | | 992 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 765 | | 992 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 4,833 | | 5,530 |
| குறுங்காலம் | | 2,929 | | 3,772 |
| நீண்ட காலம் | | 1,904 | | 1,758 |
| பொது அரசாங்கம் | | 19,111 | | 19,623 |
| நீண்ட காலம் | | 19,111 | | 19,623 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,175 | | 4,237 |
| நீண்ட காலம் | | 4,175 | | 4,237 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **1,002** | **1,930** | **1,150** | **2,154** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 109 | | 100 | |
| குறுங்காலம் | 109 | | 100 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 893 | 1,930 | 1,050 | 2,154 |
| குறுங்காலம் | 893 | 1,930 | 1,050 | 2,154 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | **1,584** | **594** | **1,700** | **432** |
| மத்திய வங்கி (எ) | | 594 | | 432 |
| குறுங்காலம் | | 594 | | 432 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | **1,584** | | **1,700** | |
| குறுங்காலம் | 1,584 | | 1,700 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | 563 | | 550 |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **7,959** | | **6,919** | |
| நாணய தங்கம் | 928 | | 819 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 4 | | 1 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 68 | | 67 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,958 | | 6,032 | |
| நாணயமும் வைப்புக்களும் | 3,037 | | 2,026 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 1,660 | | 2,126 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 1,377 | | -100 | |
| பிணையங்கள் | 3,921 | | 4,006 | |
| படுகடன் பிணையங்கள் | 3,921 | | 4,006 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **12,704** | **60,561** | **12,065** | **62,486** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-47,857** | | **-50,421** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 12,704 | 60,561 | 12,065 | 62,486 |
| குறுங்காலம் | 7,166 | 9,367 | 6,118 | 9,824 |
| நீண்ட காலம் | 5,538 | 51,194 | 5,947 | 52,663 |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வர்த்தக தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

5

கருத்திற்கொள்கின்ற இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 47,857 மில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 50,421 மில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமைக்குத் தேய்வடைந்துள்ளது. இத்தகைய இலங்கையின் தேறிய பொறுப்பு நிலைமைகளின் படிப்படியான கட்டியெழுப்பல்களானது முக்கியமாக அரசின் வெளிநின்ற படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமையின் படிப்படியான கட்டியெழுப்பல்கள் என்பவற்றால் உந்தப்பட்டுள்ளது.

### 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை அதேபோன்று நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமை என்பன 2018இல் அதிகரித்துள்ளன.** முதலீட்டுச்சபை கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் குறிப்பிடத்தக்களவான உட்பாய்ச்சல்கள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகாலக் குத்தகையின் பெறுகை என்பவற்றின் மூலம் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 10,755 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 12,757 மில்லியனுக்கு அதிகரித்துள்ளன. பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பெறுமதி இழப்புக்கள் காரணமாக நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமைக்கு குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டது. மேலும், முக்கிய சில கம்பனிகளின் பங்குரிமை மூலதன பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கு குறிப்பிடத்தக்க படுகடன் காணப்பட்டமையானது இக்கம்பனிகளின் பங்குரிமை மூலதன நிலைமையில் அதிகரிப்பொன்றையும் அக்கம்பனிகளின் படுகடன் நிலைமையில் அத்தொகைக்குச் சமமான குறைப்பதனையும் தோற்றுவித்தது. அதேவேளை, குறிப்பிடத்தக்களவு நேரடி முதலீடுகளுடன் சில பாரிய கம்பனிகள் இணைக்கப்பட்டமையானது இக்கம்பனிகளின் பங்குரிமை மூலதனமும் அதேபோன்று அவற்றின் படுகடன் நிலைமைகளும் திரட்சிப்படுத்தப்படுவதற்கு வழிவகுத்தன. சில பாரிய நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பங்குரிமை மூலதன பரஸ்பரபரிமாற்றலுக்கான படுகடன் காரணமாக படுகடன் நிலைமையில் குறிப்பிடத்தக்க குறைப்பு காணப்பட்ட போதும், நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளிலிருந்து படுகடன் சாதனங்களின் பொறுப்பு நிலைமை ஒட்டுமொத்தமாக அதிகரித்து நேரடி முதலீட்டாளர்களின் முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலித்தது. பங்குரிமை மூலதன வடிவிலான நேரடி முதலீடுகளின் மதிப்பீட்டு இழப்புக்கள் 2017 உடன் ஒப்பிடும் போது 2018 காலப்பகுதியில் மிதமடைந்துள்ளது. நேரடி முதலீட்டாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் படுகடன் சாதனங்களின் பொறுப்பு நிலைமை அதிகரித்துள்ளது. 2018 இறுதியிலுள்ளவாறான நேரடி முதலீட்டு பொறுப்பு இருப்பு நிலைமைகளின் நியதிகளில் சீனா, நெதர்லாந்து, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா என்பன முதல் ஐந்து நாடுகளாக விளங்குகின்றன. அதேவேளை இலங்கையின் வதிவோரினால் வெளிநாட்டில் வைத்திருக்கின்ற நேரடி முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 1,375 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 1,433 மில்லியனாகக் காணப்பட்டன.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமை 2018இல் குறைவடைந்துள்ளது.** அரசினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களுக்கு இடையிலும் அரசின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட கணிசமானளவான குறைவு, திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் வங்கித்தொழில் துறையின் பன்னாட்டுப் படுகடன் பிணையங்களின் பல்வேறுபட்ட முதிர்ச்சிகள் என்பவற்றினால் 2018இன் இறுதியில் வெளிநின்ற முதலீட்டுப் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளன. அதன்படி சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு இருப்பு நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 15,620 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 14,629 மில்லியனுக்குக் குறைவடைந்துள்ளது. சொத்துப்பட்டியல் முதலீட்டு பங்குரிமை மூலதன நிலைமை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 1,533 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 1,824 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்துள்ளது. அதேவேளை ஆண்டிறுதியில் படுகடன் பிணையங்கள் நிலைமை ஐ.அ.டொலர் 12,805 மில்லியனுக்கு 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 14,087 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளது. எனினும் 2018இன் பிற்பகுதியில் நிலவிய அரசியல் நிச்சயமற்ற தன்மைகளின் விளைவால் 2018இன் திசெம்பர் இறுதியில் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் குறிப்பிடத்தக்கதொரு குறைவொன்று ஏற்பட்டது. குறைவடைந்த சந்தை மனோபாவங்களின் காரணமாக வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டாந்தரச் சந்தை விளைவுகள் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்துள்ளதுடன் தற்போதுள்ள நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் கணிசமானளவான வீழ்ச்சியொன்றையும் விளைவித்துள்ளது. ஆண்டுகாலத்தில் புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கலுடன் 2018இல் அரசினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்கு இடையிலும் வதிவற்றோரால் வைத்திருக்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான கணிசமானளவான வெளிப்பாய்ச்சல்கள் அதேபோன்று தற்போதுள்ள நாட்டிற்கான

பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட குறைவு என்பன 2018 இறுதியில் வதிவற்றோரால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற மொத்த அரச படுகடன் பிணையங்களின் அதிகரிப்பில் மிகையொன்றை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை பல்வேறு வங்கிகளால் ஐ.அ.டொலர் 1,350 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிறுதியில் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் படுகடன் பிணையங்கள் பொறுப்பு நிலைமை குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளது.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**நாணயம் மற்றும் வைப்புக்கள் சொத்து நிலைமை சிறிதளவால் அதிகரித்துள்ள வேளையில் பொறுப்பு நிலைமை 2018 இறுதியில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.** வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை 2017 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,213 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,581 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வதிவற்றோர் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைவே முக்கிய காரணமாகும். வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்து நிலைமையை உள்ளடக்கியுள்ள நாணயம் மற்றும் வைப்புக்களின் சொத்து நிலைமை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 784 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 864 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்துள்ளது.

#### கடன்கள்

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை 2018 இறுதியில் அதிகரித்துள்ளது.** அரசு, மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளை உள்ளடக்கிய ஏனைய துறைகள் உள்ளடங்கலான அனைத்துத் துறைகளினதும் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை அதிகரித்தமையின் காரணமாக மொத்த வெளிநின்ற கடன் பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக, வெளிநாட்டுக்கடன் பொறுப்பு நிலைமை 2017 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 28,884 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 30,382 மில்லியனுக்கு அதிகரித்துள்ளன. புதிய செயற்றிட்டங்கள் புதிய நிகழ்ச்சித்திட்டக் கடன் மற்றும் அரசினால் பெறப்பட்ட புதிய வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி என்பவற்றின் விளைவால் அரசின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை ஐ.அ.டொலர் 19,623 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. குறுங்காலக் கடன் அதிகரிப்புக்களின் மூலம் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற கடன்கள் அதிகரித்துள்ளன. படுகடன் மீள் கொடுப்பனவுகள் மற்றும் 2018 காலப்பகுதியில் புதிய கடன் பகிர்ந்தளிப்புக்கள் ஏதும் வழங்கப்படாமை என்பவற்றின் விளைவால் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பொறுப்பு நிலைமை குறைவடைந்த வேளையில் தனியார் துறையின் வெளிநின்ற கடன் பொறுப்பு நிலைமை சில முக்கிய கம்பனிகள் மற்றும் முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டு கடன்களின் அதிகரிப்புடன் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்துள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதிப் பெறுகையினால் மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை அதிகரித்துள்ளன.

#### வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் சொத்து நிலைமை அதே போன்று பொறுப்பு நிலைமை 2018இல் அதிகரித்துள்ளன.** தனியார்துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சியின் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கிய வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் பொறுப்பு நிலைமையானது 2017 இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 1,930 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 2,154 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதான காரணமாகும். அதேவேளை வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை என்பவற்றால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரதிபலிக்கின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமையானது 2017 இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 1,002 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 1,150 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.


#### பெறத்தக்க/ கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

ஏனைய பெறத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை அதிகரித்துள்ள வேளையில் ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் 2018இல் குறைவடைந்துள்ளன. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் ஏனைய பெறத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 1,584 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 1,700 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. அதேவேளை மத்திய வங்கியின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடன் தொடர்பான பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைவினால் ஏனைய கொடுபடத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 432 மில்லியனுக்கு குறைவடைந்துள்ளது. மேலும் வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பொறுப்பு நிலைமையானது 2018 இறுதியிலிருந்த செலாவணி வீத மாற்றங்களினால் ஐ.அ.டொலர் 550 மில்லியனுக்கு சிறிதளவால் குறைவடைந்துள்ளது.

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்கள் நிலைமையானது 2017 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.0 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது.** 2018 இறுதியில் காணப்பட்ட நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டமானது 3.7 மாத இறக்குமதிப் பொருட்களுக்கு நிதியிடுவதற்கு சமமானதாகும். ஒப்பீட்டளவில் உறுதியாகக் காணப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகள் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 459 மில்லியனை ஈர்த்துக் கொள்வதற்கு மத்தியவங்கியினை இயலச்செய்தது. இது 2018 ஏப்பிறலில் அரசினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் பெறுமதி கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகளுடன் இணைந்து மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கட்டியெழுப்புதல்கள் 2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனளவில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த மட்டமொன்றை அடைவதற்கு ஆதரவாக அமைந்தது. இதற்கு மேலாக, அம்பாந்தோட்டை துறைமுக நீண்டகாலக் குத்தகையின் பெறுகைகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதியின் பெறுகைகள் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியின் பெறுகைகள் என்பன ஆண்டுகாலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் ஒன்றுசேர்ந்த தன்மைக்கு ஆதரவளித்துள்ளன. எனினும் இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகளாலும் அதன் விளைவான அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப்பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான மூலதனப் பாய்ச்சல்களில் ஏற்பட்ட பின்னடைவின் விளைவுகளாலும் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைகள் மீது தோற்றுவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்களவான அழுத்தங்கள் 2018 ஏப்பிறல் இறுதியிலிருந்து சந்தைக்கு வெளிநாட்டு செலாவணி வழங்குவதற்கு மத்தியவங்கியைத் தேவைப்படுத்தியுள்ளது. இத்தகைய அபிவிருத்திகளுடன் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்களும் இணைந்து 2018 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுக்குக் குறைவடையச் செய்துள்ளன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளானது 2018 இறுதியில் நாட்டின் குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 50 சதவீதத்தினை உள்ளடக்குவதற்கு போதுமானதாகும். அதேவேளை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கியுள்ள மொத்த வெளிநாட்டு சொத்துக்களானது 2017 இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 10.4 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனாக குறைவடைந்துள்ளதுடன் இது 5.2 இறக்குமதி மாதங்களுக்கு நிதியிடுவதற்கு சமமானதாகவும் காணப்படுகின்றது. இத்தகைய வீழ்ச்சிக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட மெதுவடைவு முக்கிய காரணமாக அமைந்துள்ள வேளையில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 2017 இறுதியுடன் ஒப்பிடும் போது 2018 இறுதியிலும் அதே மட்டங்களிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

வரைபடம் 5.13
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.13
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

(கால இறுதியிலான நிலைமை)

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 635 | 470 | 289 | 488 | 817 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 7,573 | 6,834 | 5,730 | 7,470 | 6,102 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 8,208 | 7,304 | 6,019 | 7,959 | 6,919 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து | 1,676 | 2,033 | 2,414 | 2,478 | 2,664 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 9,884 | 9,337 | 8,433 | 10,436 | 9,583 |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 1,691 | 2,275 | 1,490 | 1,361 | 1,425 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 6,517 | 5,029 | 4,529 | 6,597 | 5,495 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | 1,369 | -1,489 | -500 | 2,068 | -1,103 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.1 | 4.6 | 3.8 | 4.6 | 3.7 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.3 | 3.8 | 3.1 | 3.8 | 3.1 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 6.1 | 5.9 | 5.3 | 6.0 | 5.2 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 5.1 | 4.9 | 4.3 | 4.9 | 4.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தகக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


5

## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**இலங்கையின் வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 2018இல் ஐ.அ.டொலர் 706 மில்லியனால் அதிகரித்துள்ளது.** இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 51,604 மில்லியனிலிருந்து 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 52,310 மில்லியனாக அதிகரித்தமைக்கு அரசு, அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகள் மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில் முயற்சிகள் என்பவற்றின் வெளிநாட்டுப் படுகடன் 2018இல் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2018 காலப்பகுதியில் அரசின் வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட ஐ.அ.டொலர் 654 மில்லியனளவான அதிகரிப்பானது ஆண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களுக்கு மத்தியிலும் செயற்றிட்ட கடன்களின் மீள் கொடுப்பனவு, அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்துள்ளது. அரசின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் அளவான மொத்தப் பெறுமதி கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல், ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட செயற்றிட்டக் கடன்களின் உட்பாய்ச்சல்கள் மற்றும் ஆண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் எனபவற்றால் நிதியிடப்பட்டுள்ளன. அதேவேளை மத்திய வங்கியானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதியினைப் பெற்றுக் கொண்டுள்ள வேளையில் மத்திய வங்கியால் முகாமைசெய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடனான வெளிநின்ற பொறுப்புக்கள் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையுடன் ஒப்பிடுமிடத்து குறைவடைந்துள்ளன. 2018 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.35 பில்லியன் பெறுமதியுடைய இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் டிஎப்சிசி வங்கியின் வெளிநின்ற பன்னாட்டு முறிகளின் முதிர்வுகளின் விளைவினால் வைப்புகளை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின்

வரைபடம் 5.14
வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.14
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|
| அரசாங்கம் | 31,355 | 32,009 |
| குறுங்காலம் | 167 | 60 |
| படுகடன் பிணையங்கள் | 167 | 60 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 167 | 60 |
| நீண்ட காலம் | 31,188 | 31,949 |
| படுகடன் பிணையங்கள் | 12,077 | 12,326 |
| திறைசேரி முறிகள் (இ) | 1,700 | 728 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 30 | 4 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 10,347 | 11,594 |
| கடன்கள் | 19,111 | 19,623 |
| மத்திய வங்கி | 1,924 | 1,975 |
| குறுங்காலம் | 596 | 432 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 1 | ... |
| செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகள் | 594 | 432 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 594 | 432 |
| நீண்ட காலம் | 1,329 | 1,542 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 563 | 550 |
| நாணய மற்றும் வைப்புகள் | ... | ... |
| கடன்கள் | 765 | 992 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 765 | 992 |
| துணைநில் ஒழுங்குகள் | 765 | 992 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | | |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 8,711 | 7,359 |
| குறுங்காலம் | 5,140 | 5,353 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 2,212 | 1,580 |
| வர்த்தக வங்கிகள் | 2,212 | 1,580 |
| கடன்கள் | 2,929 | 3,772 |
| வர்த்தக வங்கிகள் | 2,929 | 3,772 |
| நீண்ட காலம் | 3,571 | 2,007 |
| படுகடன் பிணையங்கள் (உ) | 1,666 | 249 |
| வர்த்தக வங்கிகள் | 613 | - |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 1,053 | 249 |
| கடன்கள் | 1,904 | 1,758 |
| வர்த்தக வங்கிகள் | 1,886 | 1,643 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 19 | 115 |
| ஏனைய துறைகள் (எ) | 6,282 | 6,562 |
| குறுங்காலம் | 1,930 | 2,154 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 1,930 | 2,154 |
| நீண்ட காலம் | 4,352 | 4,407 |
| படுகடன் பிணையங்கள் (உ) | 177 | 171 |
| கடன்கள் | 4,175 | 4,237 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 1,919 | 2,167 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,256 | 2,070 |
| நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ) | 3,332 | 4,406 |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **51,604** | **52,310** |
| மொ.உ.உ. சதவீதமாக | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 58.6 | 58.7 |
| குறுங்கால படுகடன் | 8.9 | 9.0 |
| நீண்டகால படுகடன் | 49.7 | 49.7 |
| மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக | | |
| குறுங்கால படுகடன் | 15.2 | 15.3 |
| நீண்டகால படுகடன் | 84.8 | 84.7 |
| ஞாபகார்த்த விடயங்கள் | | |
| படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு | 13,566 | 13,448 |
| அரசாங்கம் | 11,791 | 13,023 |
| திறைசேரி உண்டியல்கள் | 180 | 65 |
| திறைசேரி முறிகள் | 1,930 | 804 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 30 | 4 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 9,650 | 12,150 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 1,600 | 250 |
| வர்த்தக வங்கிகள் | 600 | - |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,000 | 250 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மீது கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வெளிநின்ற வெளிநாட்டு படுகடனில் குறிப்பிடத்தக்களவான குறைவொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. 2018 காலப்பகுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏனைய அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்களின் கணிசமான மீள்கொடுப்பனவிற்கு மாறாக அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுகாலத்தில் துறைமுகங்கள், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் சுற்றுலா விடுதிகள் துறைகளின் பாரிய எண்ணிக்கையிலான நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் மற்றும் பங்குரிமையாளர்களின் முற்பணங்கள் என்பவற்றினால் முக்கிய நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.1 பில்லியனளவான குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்துள்ளது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 2018 காலப்பகுதியில் அதேமட்டத்திலிருந்தது.** 2018 காலப்பகுதியில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஒத்ததாகக் காணப்பட்டமையால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் 2017 இறுதியின் 58.6 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018 இறுதியில் 58.7 சதவீதமாகவிருந்தது. நீண்ட கால முதிர்வுடன் கூடிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையுடன் ஒப்பிடும் போது 2018 இறுதியிலும் அதே மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், மொத்த வெளிநாட்டுப்படுகடனின் பாரிய பகுதியாகக் காணப்படுகின்ற வெளிநின்ற அரச படுகடன் 2017 இறுதியின் 60.8 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018 இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் 61.2 சதவீதத்தில் காணப்பட்டது.

### 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**உயர்ந்த மூலதன மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மூலம் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2018இல் அதிகரித்துள்ளன. அரசு, வங்கித்தொழில் துறை**, தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவுகளால் வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதன மீள்கொடுப்பனவுகள் 2017இன் ஐ.அ.டொலர் 3,167 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 4,188 மில்லியனுக்கு அதிகரித்துள்ளன. 2018 ஆண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 613 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மீள்கொடுப்பனவுகளாலும் ஐ.அ.டொலர் 1,158 மில்லியன் கொண்ட செயற்றிட்டக் கடன் மீள்கொடுப்பனவுகளாலும் அரசின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளன. மேலும், ஆண்டுகாலத்தில் வங்கித்தொழில் துறையானது பன்னாட்டு முறிகளின் முதிர்வில் ஐ.அ.டொலர் 1,350 மில்லியனை மீளச் செலுத்தியுள்ளன. ஆண்டுகாலத்தில் தனியார்துறை மற்றும் அரசுக்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளன. வெளிநின்ற மொத்த வெளிநாட்டு படுகடனின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2017இன் ஐ.அ.டொலர் 1,399 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018இல் ஐ.அ.டொலர் 1,678 மில்லியனுக்கு அதிகரித்துள்ளன. வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பாரியளவான நறுக்குக் கொடுப்பனவுகள் அரசின் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அரசு, வர்த்தக வங்கிகள் மற்றும் தனியார்துறைகளின் வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவின் பெடறல் றிசேர்வ் வங்கியின் வட்டி வீத உயர்வுகளால் தூண்டப்பட்டு உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் பங்களிப்புச் செய்துள்ளன. அதேவேளை 2018 ஆண்டுகாலத்தில் வணிகப் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளும் அதிகரித்துள்ளன. படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வணிகப் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பினை விடக் குறைவாகக் காணப்பட்டதன் விளைவால் வணிகப் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2017இன் 23.9 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018இல் 28.9 சதவீதமாக அதிகரித்துள்ளன.

**நடுத்தரகாலத்தில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளில் குறிப்பிடத்தக்கதொரு சவாலை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.** 2019 இலிருந்து வருடாந்த வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் கடப்பாடுகள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4 இலிருந்து 5 பில்லியன் வரையாகக் காணப்படும் என்பதால் பன்னாட்டு நிதியியல் சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் ஏனைய நிதியிடல் வசதிகளில் குறிப்பிடத்தக்கதொரு அளவிலான கடன்பாட்டுத் தேவையை ஏற்படுத்தும். நடுத்தரகாலத்தில் உளகளாவிய வட்டி வீதங்கள் உயர்வடைவதற்கான சாத்தியப்பாட்டின் மூலம் அத்தகைய கடன்பாடுகளின் செலவு அதிகரிக்கப்படலாம். வெளிநாட்டுக் கடன்பாடுகளை உறுதியான மட்டத்தில் பேணுவதற்கு நீண்ட கால அணுகுமுறையொன்றில் நடைமுறைக் கணக்கினை மீள் சமனிலைப்படுத்துதல் அதேபோன்று நிதியியல் கணக்கில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் பங்கு முதலீடுகளின் வடிவிலான அதிகளவான படுகடனை உருவாக்காத

அட்டவணை 5.15
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **3,635** | **4,772** | **4,461** | **4,566** | **5,866** | **474,527** | **648,541** | **648,315** | **695,690** | **954,971** |
| **1.1 கடன் தீர்த்தல்** | **2,479** | **3,580** | **3,243** | **3,167** | **4,188** | **323,626** | **487,275** | **472,270** | **482,750** | **682,374** |
| பொது அரசாங்கம் | 1,296 | 1,976 | 1,040 | 1,354 | 1,815 | 169,150 | 265,662 | 151,236 | 206,531 | 294,845 |
| செயற்றிட்டக் கடன்கள் | 793 | 798 | 876 | 1,320 | 1,771 | 103,540 | 107,536 | 127,396 | 201,430 | 287,381 |
| படுகடன் பிணையங்கள் | 503 | 1,178 | 164 | 34 | 45 | 65,610 | 158,126 | 23,840 | 5,101 | 7,464 |
| மத்திய வங்கி | 719 | 907 | 1,555 | 635 | - | 93,917 | 125,686 | 226,118 | 96,584 | - |
| பன்னாட்டு நாணய நிதியம் | 719 | 507 | 455 | 235 | - | 93,917 | 68,775 | 65,956 | 35,601 | - |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | 400 | 1,100 | 400 | - | - | 56,911 | 160,162 | 60,983 | - |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 464 | 698 | 648 | 1,178 | 2,373 | 60,559 | 95,928 | 94,916 | 179,635 | 387,528 |
| வெளிநாட்டு கடன்கள் | 309 | 553 | 559 | 559 | 596 | 40,280 | 76,199 | 81,944 | 85,242 | 97,270 |
| படுகடன் பிணையங்கள் | - | - | - | 500 | 1,350 | - | - | - | 76,169 | 217,384 |
| நேரடி முதலீடு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 155 | 145 | 88 | 119 | 426 | 20,279 | 19,729 | 12,972 | 18,225 | 72,874 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,156** | **1,192** | **1,219** | **1,399** | **1,678** | **150,901** | **161,266** | **176,045** | **212,419** | **270,209** |
| பொது அரசாங்கம் | 876 | 870 | 862 | 1,063 | 1,280 | 114,368 | 117,496 | 124,042 | 161,458 | 207,905 |
| செயற்றிட்ட கடன்கள் | 260 | 266 | 264 | 332 | 425 | 33,883 | 36,024 | 38,440 | 50,652 | 68,847 |
| படுகடன் பிணையங்கள் | 616 | 604 | 597 | 731 | 855 | 80,485 | 81,472 | 85,602 | 110,806 | 139,057 |
| மத்திய வங்கி | 20 | 13 | 10 | 16 | 30 | 2,546 | 1,693 | 1,436 | 2,119 | 4,834 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 20 | 10 | 8 | 12 | 24 | 2,546 | 1,395 | 1,179 | 1,897 | 3,833 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | 2 | 2 | 3 | 6 | - | 298 | 257 | 222 | 1,001 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 260 | 309 | 347 | 311 | 354 | 33,986 | 42,077 | 50,567 | 47,433 | 57,441 |
| வெளிநாட்டு கடன்கள் | 118 | 148 | 179 | 169 | 242 | 15,470 | 20,128 | 26,121 | 25,775 | 39,498 |
| படுகடன் பிணையங்கள் | 142 | 159 | 159 | 142 | 112 | 18,517 | 21,779 | 23,186 | 21,658 | 17,943 |
| நேரடி முதலீடு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | - | 1 | 9 | 9 | 15 | - | 170 | 1,260 | 1,409 | 2,388 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **16,735** | **16,943** | **17,448** | **19,084** | **20,264** | | | | | |
| **3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **23,936** | **24,078** | **24,835** | **26,432** | **27,549** | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 21.7 | 28.2 | 25.6 | 23.9 | 28.9 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 17.3 | 25.1 | 22.9 | 22.6 | 28.8 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 15.2 | 19.8 | 18.0 | 17.3 | 21.3 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 12.1 | 17.7 | 16.1 | 16.3 | 21.2 | | | | | |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 2,172 | 2,846 | 1,901 | 2,417 | 3,095 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 59.7 | 59.6 | 42.6 | 52.9 | 52.8 | | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

உட்பாய்ச்சல்களை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும்.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**2018 இன் முதல் நான்கு மாதங்களில் ஒப்பீட்டளவில் உறுதியாக விளங்கிய செலாவணி வீதமானது அதன் பின்னர் குறிப்பாக 2018 இன் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க அழுத்தங்களிற்கு உட்பட்டுள்ளது.** ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டு செலாவணியின் பாய்ச்சலானது தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 459 மில்லியனளவான வெளிநாட்டுச் செலாவணியை உள்ளீர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியுள்ளது. எனினும் அத்தகைய சாதகமான நிலைமை 2018 இன் மேயிலிருந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணிகள் இரண்டினதும் விளைவால் மாறுபட்டிருந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில் வலுவடைந்துவரும் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் பெடரல் றிசேர்வ் வங்கியினை கொள்கை வட்டி வீதத்தை உயர்த்துவதற்குத் தூண்டியதுடன் 2018 இலும் 2019 இலும் சில சாத்தியமான வட்டிவீத அதிகரிப்புக்களிற்கான எதிர்காலத்தினையும் இணைந்திருந்தது. இத்தகைய அபிவிருத்திகளின் விளைவால் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவரித்தனையின் தொடர்ச்சியான வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் உள்நாட்டு செலாவணிச் சந்தையில் குறைவான திரவத்தன்மை

## சிறப்புக்குறிப்பு 7
## உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினை மீள்தளப்படுத்தல்

### 1. அறிமுகம்

இலங்கை மத்திய வங்கி, 1989ஆம் ஆண்டிலிருந்து, 5 நாணயம் மற்றும் 24 நாணயக் கூடைகளை அடிப்படையாகக் கொண்டு பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினையும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தனையும் தள ஆண்டிற்கு காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்துகின்ற திருத்தங்களுடன் தயாரித்திருக்கின்றது. குறிப்பிட்ட நாடுகளுக்கிடையிலான இருபுடை வர்த்தகத்தின் தொடர்பான பங்குகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் வேறுபடலாம் என்பதனால் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள்[1] கிரமமான முறையில் திருத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, ஐரோப்பிய மத்திய வங்கியும் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியும் அவற்றின் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் தள காலங்களை ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கொரு முறை இற்றைப்படுத்துகின்றன. இலங்கையின் தற்போதுள்ள உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பனவற்றின் சுட்டெண்களின் தள ஆண்டு 2010 ஆக இருந்ததுடன் இதனை வர்த்தகப் பங்காளர்களின் தொடர்பான பங்குகளிலுள்ள ஏதேனும் மாற்றங்களைச் சிறந்த முறையில் பிரதிபலிப்பதற்காக 2017ஆம் ஆண்டிற்கு முன் கொண்டுவரப்பட்டது. தள ஆண்டு 2017இற்குத் திருத்தப்பட்டதனைத் தொடர்ந்து 5 நாணய மற்றும் 24 நாணயங்களின் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பனவற்றின் தற்போதைய சுட்டெண்கள் 2013 சனவரியிலிருந்து தொடங்கும் விதத்தில் பின்னோக்கிக் கணிக்கப்பட்டது.

### 2. தள ஆண்டினைத் தெரிவு செய்தல்

பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தில் தள ஆண்டு ஒவ்வொரு நாட்டிற்கும் வழங்கப்பட்ட தொடர்பான நிறைகளினூடாக சமகால வர்த்தகத் தன்மைகளைப் பிரதிபலிக்கின்றது. எனவே, யதார்த்தமான நிறைகளைப் பேணும் பொருட்டு காலத்திற்குக்காலம் இற்றைப்படுத்துவதற்கான தள ஆண்டினைக் கொண்டிருப்பது அவசியமாகும். தொடர்பான நிறைகளைத் தீர்மானிப்பதற்கான தள ஆண்டினைத் தெரிவு செய்யும் பொழுது அண்மைய வர்த்தக மாதிரிகளைப் பிரதிபலித்தல் மற்றும் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு போன்ற பல காரணிகளைப் பரிசீலனையில் கொள்வது அவசியமாகும். நாடொன்றின் வெளிநாட்டு வர்த்தகத்தின்

அட்டவணை சி.கு.7.1
24 நாணய பெ.தா.செ. வீதம்/ உ.தா.செ.வீதம் வர்த்தக நிறைகளின் ஒப்பீடு

| | தள ஆண்டு 2017 இற்காகப் பயன் படுத்தப்பட்ட நிறைகள் (மூ) | தள ஆண்டு 2010 இற்காகப் பயன் படுத்தப்பட்ட நிறைகள் (மூ) | வேறுபாடுகள் (மூ) |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 19.30 | 19.74 | (0.44) |
| இந்தியா | 16.65 | 15.57 | 1.08 |
| சீனா | 14.26 | 6.41 | 7.85 |
| ஐக்கிய இராச்சியம் | 7.18 | 9.86 | (2.68) |
| யப்பான் | 4.66 | 4.99 | (0.33) |
| ஜேர்மனி | 4.60 | 5.88 | (1.29) |
| இத்தாலி | 4.18 | 4.83 | (0.64) |
| கொங்கொங் | 2.42 | 3.63 | (1.22) |
| பெல்ஜியம் | 2.36 | 4.45 | (2.09) |
| சிங்கப்பூர் | 2.17 | 1.79 | 0.38 |
| மலேசியா | 2.16 | 2.36 | (0.20) |
| கனடா | 2.02 | 1.96 | 0.06 |
| தாய்லாந்து | 2.01 | 2.15 | (0.14) |
| அவுஸ்திரேலியா | 1.96 | 0.97 | 0.98 |
| தாய்வான் | 1.87 | 1.51 | 0.36 |
| ருஷியா | 1.85 | 2.18 | (0.33) |
| துருக்கி | 1.70 | 1.52 | 0.17 |
| நெதர்லாந்து | 1.60 | 2.11 | (0.51) |
| பாகிஸ்தான் | 1.59 | 1.80 | (0.20) |
| பிரான்ஸ் | 1.57 | 2.93 | (1.36) |
| இந்தோனேசியா | 1.47 | 1.73 | (0.26) |
| தென் கொரியா | 1.43 | 1.17 | 0.25 |
| வங்காளதேசம் | 0.89 | 0.36 | 0.53 |
| கென்யா | 0.13 | 0.10 | 0.03 |
| மொத்தம் | 100.00 | 100.00 | |

வரைபடம் சி.கு. 7.1
உ.தா.செ. வீதம் 24 (2010ஸ்ரீ100) மற்றும் உ.தா.செ. வீதம் 24 (2017=100) என்பவற்றின் ஒப்பீடு

1 தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றைய நாணயக் கூடைக்கு எதிரான நாணயங்களை மதிப்பிடுவதுடன் பொதுவாக சுட்டெண்ணொன்றாக விளக்கப்படுகிறது. உண்மையில், வெளிநாட்டு நாணயங்களின் கூடை தொடர்பான நாட்டின் முக்கிய வர்த்தகப் பங்காளரின் நாணயங்களை உள்ளடக்குகிறது. பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பது இலங்கையின் மொத்த வெளிநாட்டு வர்த்தகத்திற்கான இருபுடை வர்த்தகத்தின் விகிதாசாரத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறைகளுடன் கூடிய முக்கியமான இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேத்திரகணிதச் சராசரியாகும்.

பெ.தா.செ. வீதம் $=\prod_{i=1}^{n}[e_i]^{w_i}$ இங்கு நை ஸ்ரீ வெளிநாட்டு நாணயத்திற்கெதிரான ை உள்நாட்டு நாணயத்தின் செலாவணி வீதம் (சுட்டெண்படுத்தப்பட்ட வடிவில் உள்நாட்டு நாணயச் சொத்துக்கான ை வெளிநாட்டு நாணயம்), றைஸ்ரீ வர்த்தக நிறைகள், ழஸ்ரீ கூடையிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது உள்நாட்டு மற்றும் தொடர்பான வெளிநாட்டு நாணயங்களுக்குமிடையிலான பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவு செலாவணி வீதத்தினைச் சீராக்குவதன் மூலம் பெறப்படுமொன்றாக இருப்பதுடன் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மைக் குறிகாட்டியாகவும் பயன்படுத்தப்படுகிறது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண், ஏற்றுமதிப் போட்டித்தன்மையின் குறிகாட்டியொன்றாக அல்லது நாணய ஒழுங்கின்மையொன்றாகப் பயன்படுத்தப்படுகிறது.


உ.தா.செ.வீதம் $=\prod_{i=1}^{n}[e_i\cdot(\frac{P}{P_i})]^{w_i}$ இங்கு ஁ ஸ்ரீ அடிப்படை காலப்பகுதி சுட்டெண்ணுடன் (சுட்டெண்ணின் சுட்டெண்) ஒப்பிடுகையில் இலங்கையின் நுகர்வோர் விலைச் சுட்டெண், ஁ை ஸ்ரீ நாட்டின் நுகர்வோர் விலைச் சுட்டெண் ை அடிப்படைக் காலச் சுட்டெண்ணுடன் ஒப்பிடப்பட்டது.

அமைப்பு அடிக்கடி ஏற்படும் மாற்றங்களுக்குட்பட்டதாக இருக்குமாயின், இற்றைப்படுத்தலை குறுகிய கால இடைவெளிகளில் மேற்கொள்ளுதல் வேண்டும். 2010 மற்றும் 2017 இற்கிடையில் வர்த்தகப் பங்காளர்களுடனான இலங்கையின் இருபுடை வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக நிறைகளை ஒப்பிடும் போது சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவதானிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, சீனா மற்றும் இந்தியாவுடனான இலங்கையின் இருபுடை வர்த்தகத்தின் தொடர்பான பங்கு அதிகரித்திருக்கின்ற வேளையில் இலங்கையின் ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் கொங்கொங் என்பனவற்றுடனான இருபுடை வர்த்தகத்தின் தொடர்பான பங்கு 2010 - 2017 காலப்பகுதியில் குறைவடைந்தது. சீனாவுடனான இருபுடை வர்த்தகப் பங்கு அதிகரித்தமைக்கு முக்கியமாகப் புடவைகள், பொறிகள், கட்டடப்பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணங்களாக அமைந்த வேளையில் இந்தியாவுடனான இருபுடை வர்த்தகத்தின் பங்குகள் அதிகரித்தமைக்கு புடவைகள், பொறிகள், கட்டட மூலப்பொருட்கள் மற்றும் ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாகக் காணப்பட்டது. பெரும்பாலான மற்றைய நாடுகளுடனான இருபுடை வர்த்தகத்தின் தொடர்பான பங்கு அவற்றிற்கேற்றவாறு சீராக்கப்படுகின்றன (திருத்தப்பட்ட வர்த்தக நிறைகள் அட்டவணை சி.கு. 7.2 இல் காட்டப்பட்டுள்ளன). ஆகவே, 2010 இலிருந்து 2011 வரையான காலப்பகுதியில் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினையும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினையும் மீள்தளப்படுத்துவது, தொடர்பான காலப்பகுதியில் வர்த்தகப் பங்காளர்களுடனான வர்த்தக மாதிரிகளின் மாற்றத்தினைப் போதுமானளவிற்கு உள்ளடக்கிக் கொள்ளும். செலாவணி வீதத்தினைப் பொறுத்தவரை குறிப்பிட்ட ஆண்டு மிகையான தளம்பல் தன்மைகளைக் கொண்டிருக்கக்கூடாது. எனவே, செலாவணி வீதம் ஒப்பீட்டு அடிப்படையில் உறுதியாகவிருந்த 2017ஆம் ஆண்டினைப் பரிசீலனையில் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

**உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் மீள்தளப்படுத்தலின் தாக்கம்**

வரைபடம் சி.கு. 7.1, முன்னைய தள ஆண்டான 2010 இனையும் திருத்தப்பட்ட தள ஆண்டான 2017 இனையும் அடிப்படையாகக் கொண்டு உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் சுட்டெண்ணினை ஒப்பிடுகிறது. வரைபடம் காட்டுகின்றவாறு தள ஆண்டுத் திருத்தங்கள் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தில் சமாந்தரமான பெயர்வுகளுக்கு இட்டுச்செல்கின்ற வேளையில் அதன் போக்கு முன்னைய தள ஆண்டினை அடிப்படையாக் கொண்ட சுட்டெண்ணுடன் பரந்தளவிற்கு இசைந்து செல்வதாகத் தொடர்ந்தும் காணப்படுகிறது. 2017 இற்கான மீள்தளப்படுத்தலுடன் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் கீழ் நோக்கிய திருத்தம், 2017இல் உண்மைச் செலாவணி வீதம் 2010 தள ஆண்டில் இது பிரதிபலிக்கப்பட்டதிலும் பார்க்க மிக போட்டித்தன்மையாக இருந்தமையினை எடுத்துக்காட்டுகிறது. மேலும், ஒப்பீட்டு ரீதியில் சமாந்தரமான பெயர் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினைக் கணிப்பதன் மீதான முறையியலும் அடிப்படை எடுகோள்களும் ஒன்றாகப் பேணப்பட வேண்டும் என்பதனை பிரதிபலிக்கின்ற வேளையில் 2017 இற்கும் 2010 இற்குமிடையிலான வர்த்தக நிறை பெரும்பாலான வர்த்தகப் பங்காளர்களிடமே குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தவில்லை-

வரைபடம் சி.கு. 7.1
24-நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்ணினதும் (2010=100) 24-நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்ணினதும் (2017=100) ஒப்பீடு




மட்டங்களை விளைவித்தது. உள்நாட்டுப் பக்கத்தில் இறக்குமதியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி அதிகரிப்பு, ஏற்றுமதியாளர்களின் டொலர் மாற்றல்களின் குறைவு மற்றும் சாதகமற்ற அரசியல் அபிவிருத்திகள் என்பன குறிப்பாக 2018 இன் பிற்பகுதியில் ரூபாவின் தேய்விற்குப் பங்களித்துள்ளன. செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் குறைப்பதற்காக மட்டும் திரவத்தன்மையை வழங்குவதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்தியவங்கி தலையிட்டிருந்த

அதேவேளை செலாவணி வீதத்தில் பாரியளவான நெகிழ்வுத்தன்மை அனுமதிக்கப்பட்டதன் மூலம் சந்தை அடிப்படைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் செலாவணி வீதம் தேய்வடைவதற்கு அனுமதித்த வேளையில், செலாவணி வீதத்தின் கடுமையான தேய்வினைக் குறைப்பதற்காக மாத்திரம் வெளிநாட்டு செலாவணி திரவத்தன்மை வழங்கலினால் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்தியவங்கி தலையீடு செய்தது. இதன் விளைவாக 2018 காலத்தில் மத்திய வங்கி தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,120 மில்லியனை

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு வழங்கியிருந்ததுடன் ஆண்டுகாலத்தில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கையின் ரூபா 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கியின் வட்டி வீத உயர்வடைதலுக்கு மத்தியில் ஐ.அ.டொலரின் பரந்த அடிப்படையிலான வலுப்படுத்தலுடன் இணைந்து செல்லும் விதத்தில் ஐ.அ.டொலருக்கெதிராக ஏனைய முக்கிய நாணயங்களும் தேய்வடைந்திருந்தன.** அதன்படி இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் யூரோவிற்கெதிராக 12.68 சதவீதத்தினாலும் இந்தியா ரூபாவிற்கெதிராக 8.72 சதவீதத்தினாலும் யப்பானிய ஜென்னிற்கெதிராக 18.05 சதவீதத்தினாலும் ஸ்ரேலிங் பவுணிற்கெதிராக 11.35 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையின் விளைவால் ஆண்டுகாலத்தில் சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராகவும் இலங்கை ரூபா 14.13 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

### 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**5 நாணய மற்றும் 24 நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் (2017=100) ஆகிய இரண்டும் ஆண்டுகாலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளன.** குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இணைந்து தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய நாணயங்களின் இலங்கை ரூபாவுக்கெதிரான பெயரளவுத் தேய்வினை பிரதிபலிக்கும் வகையில் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. அதன்படி 5 நாணய அடிப்படையிலான பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 12.74 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள. அதேவேளை 24 நாணய அடிப்படையிலான சுட்டெண்ணும் 2018இல் 11.69 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை, ஆண்டுகாலத்தில் பெயரளவு செலாவணி வீதங்களிலுள்ள வேறுபாடுகளுடன் நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாடுகளையும் வெளிப்படுத்துகின்ற இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையினைக் குறித்துக் காட்டுகின்ற 5 நாணய மற்றும் 24 நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்ணும் முறையே 12.46 சதவீதத்தினாலும் 11.60 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அடியாண்டின் மட்டத்திற்கு கீழாக வீழ்ச்சியடைந்தமையானது இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையில் ஏற்பட்ட மேம்பாடு ஒன்றினை குறித்துக் காட்டுகின்றது.

### 5.11.2 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகள்

அட்டவணை 5.16
செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2016 | 2017 | 2018 | 2016 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 |
| யூரோ | 157.87 | 182.49 | 208.99 | 161.16 | 171.73 | 191.71 | -13.49 | -12.68 | -6.16 | -10.42 |
| இந்திய ரூபா | 2.21 | 2.39 | 2.61 | 2.17 | 2.34 | 2.38 | -7.54 | -8.72 | -7.48 | -1.47 |
| யப்பானிய யென் | 1.29 | 1.36 | 1.65 | 1.34 | 1.36 | 1.47 | -5.10 | -18.05 | -1.12 | -7.58 |
| ஸ்டேர்லிங் பவுண் | 184.04 | 205.54 | 231.86 | 197.15 | 196.47 | 216.67 | -10.46 | -11.35 | 0.35 | -9.32 |
| ஐ.அ.டொலர் | 149.80 | 152.85 | 182.75 | 145.60 | 152.46 | 162.54 | -2.00 | -16.36 | -4.50 | -6.20 |
| சி.எ.உ. | 201.38 | 217.69 | 253.51 | 202.39 | 211.49 | 229.90 | -7.49 | -14.13 | -4.31 | -8.00 |
| **தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ)** | **ஆண்டிறுதி சுட்டெண்** | | | **ஆண்டுச் சராசரி சுட்டெண்** | | | **முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம்** | | | |
| | | | | | | | **ஆண்டிறுதி சுட்டெண்** | | **ஆண்டுச் சராசரி சுட்டெண்** | |
| **(2010=100)** | **2016** | **2017** | **2018** | **2016** | **2017** | **2018** | **2017** | **2018** | **2017** | **2018** |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 105.00 | 97.17 | 85.81 | 104.89 | 100.00 | 94.08 | -7.46 | -11.69 | -4.66 | -5.92 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 103.05 | 99.34 | 87.81 | 100.79 | 100.00 | 95.49 | -3.60 | -11.60 | -0.78 | -4.51 |


(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.


(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.15
**செலாவணி வீத அசைவுகள்**





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**2018இல் கூடியளவிற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதச் கொள்கைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் உடனடிச் சந்தை தொடர்ந்தும் தீவிரமாகக் காணப்பட்டுள்ள அதேவேளையில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவுவீழ்ச்சியடைந்துள்ளன.** ஆண்டு காலத்தில் உடனச் சந்தை கொடுக்கல்வாங்கல்களால் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2017இன் ஐ.அ.டொலர் 16,451 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 17,402 மில்லியனாக அதிகரித்துள்ளது. உடனடிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2017இன் ஐ.அ.டொலர் 8,426 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 10,770 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 61.9 சதவீதம்) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளது. எனினும் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2017இன் ஐ.அ.டொலர் 8,025 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 6,632 மில்லியனுக்குக் குறைவடைந்துள்ளது. அதேவேளை ஆண்டுகாலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடானது 2018இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,120 மில்லியன்

வரைபடம் 5.16
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கொண்ட வழங்கலொன்றை விளைவித்துள்ளது. இது ஐ.அ.டொலர் 1,677 மில்லியன் கொண்ட வழங்கலொன்றினையும் ஐ.அ.டொலர் 557 மில்லியன் கொண்ட கொள்வனவினையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கு மாறாக மத்திய வங்கி 2017 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,214 மில்லியன் கொண்ட வெளிநாட்டு செலாவணித் திரவத்தன்மையை கொள்வனவு செய்துள்ள அதேவேளை ஐ.அ.டொலர் 550 மில்லியனை வழங்கல் செய்துள்ளது. 2018இல் காணப்பட்ட தேறிய வழங்கலின் உயர்ந்த மட்டத்திற்கு குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாக இருந்ததுடன் இது இலங்கை ரூபாவினை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு வெளிநாட்டு திரவத்தன்மையை வழங்குவதற்கான மத்திய வங்கியின் தலையீட்டை தேவைப்படுத்தியுள்ளது.

## 5.12 வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடு

**சில கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்பட்டமைக்கு இடையிலும் 2019இல் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு சாதகமானதாகவே காணப்படுகிறது.** இறக்குமதிகளுடன் தொடர்பான வரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் மற்றும் 2018இல் ரூபாவின் கடுமையான தேய்வின் சாத்தியமான தாக்கம் என்பனவற்றின் துணையுடன் இறக்குமதிகளில் எதிர்பார்க்கப்படுகின்ற வீழ்ச்சியுடன் 2019ஆம் ஆண்டுப் பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய வர்த்தகப் பங்காளர்களுடனான அதிகரித்த வர்த்தகத் தொடர்புகள், சாதகமான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், வலுவான நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் கூடியளவு போட்டித்தன்மைவாய்ந்த செலாவணி வீதம் என்பனவற்றின் உதவியுடன் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்படும் வளர்ச்சி உத்வேகம் 2019இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2019இல் உயர்ந்த உட்பாய்ச்சல்கள் குறிப்பாக, சுற்றுலா, தகவல் மற்றும் தொழில்நுட்பம், வெளியிலிருந்து வியாபார நடவடிக்கைகளைப்

5

பெற்றுக்கொள்ளுதல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பனவற்றின் பெயரிலான உயர்ந்த உட்பாய்ச்சல்களின் உதவியுடன் பணிகள் கணக்கின் மிகை மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிலாளர் பணவனுப்பல் தற்போதைய மட்டங்களில் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் முதனிலை வருவாய்க் கணக்கு பற்றாக்குறை ஒப்பீட்டு ரீதியில் இறுக்கமான உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்படும் அதிகரிப்புடன் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கானது கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள நீண்டகால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் மற்றும் ஏனையவற்றிற்கான உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களினால் பெருமளவிற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களின் வட்டி வீத வழமைப்படுத்தலின் மந்தமான வேகம் காரணமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் உறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மீள ஆரம்பமான பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி காரணமாக மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவத்துடன் வெளிநாட்டுத் துறை வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் எதிர்பார்க்கப்படுகின்ற குறைப்பு மற்றும் அதனுடன் இணைந்து நிதியியல் கணக்குப் பாய்ச்சல் என்பன செலாவணி வீதம் படிப்படியாக வலுவடைவதற்கும் இவ்வாண்டுப்பகுதியில் அலுவல்சார் ஒதுக்குகள் ஒன்றுதிரள்வதற்கும் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

5

**சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளின் காரணமாக 2019இல் வெளிநாட்டு துறையின் தோற்றப்பாடு கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை கொண்டிருக்கக்கூடும்.** உள்நாட்டுப் பக்கத்தில், 2018இன் பின்னரைப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகின்ற வழிமுறைகளின் அகற்றலினால் ஏற்படக்கூடிய தேறிய தாக்கம் இவ்வாண்டுப்பகுதியில் ஊர்திகளின் இறக்குமதிகளுக்கான உரிமத்தின் பயன்பாடு இடைநிறுத்தப்பட்டமை அகற்றப்பட்டமை, 2019 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் இறக்குமதிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வைச் சீராக்கங்கள் மற்றும் ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு போன்றவை வர்த்தக நிலுவையில் அவதானிக்கப்பட்ட சில நன்மைகளை மாற்றியமைத்துவிடும் சாத்தியங்களை காட்டுகின்றது. வெளிநாட்டுப் பக்கத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளால் விதிக்கப்படக்கூடிய சாத்தியமான நிரம்பல் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய புவிசார் அரசியல் காரணிகள் என்பனவற்றின் காரணமாக உலகளாவிய எண்ணெய் விலைகள் அதிகரிக்குமிடத்து எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் உயர்வடையக்கூடும். மேலும், 2019இன் பின்னரைப்பகுதியில் தேர்தல் காலப்பகுதியின் அரசியல் அபிவிருத்திகளுடன் சேர்ந்து 2019 ஆண்டுப்பகுதியில் செலாவணி வீதத்தின் மீதான சில அழுத்தங்கள் தோன்றக்கூடும். மேலும், முன்னேற்றங்கண்ட நாடுகளின் வழமைப்படுத்தலின் கட்டம் மற்றும் அளவுகளில் ஏற்படுகின்ற நிச்சயமற்ற தன்மைகள் எல்லை கடந்த மூலதனப் பாச்சல்களை பாதித்து அதன் மூலம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தையில் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மீது அழுத்தங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் எறிவுசெய்யப்பட்ட உயர்வானது 2019 இலும் நடுத்தர காலப்பகுதியிலும் முக்கிய கரிசனைக்குரிய விடயங்களாகக் காணப்படுகின்றன.** நாட்டிற்கான பன்னாட்டு நாணய முறிகளின் பலவற்றினதும் முதிர்ச்சி, வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மூலதன மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய 2019இலும் அதற்கு அப்பாலும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய சராசரியாக ஐ.அ.டொலர் 5 பில்லியனுக்கு மேற்பட்ட வருடாந்தப் படுகடன் மீள்கொடுப்பனவுக் கடன்பாடுகளின் காரணமாக, முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ வழிமுறைகளினால் முகாமைப்படுத்தப்பட்டாலொழிய, இலங்கை அதிகரித்தளவிலான மீள்நிதியிடல் இடர்நேர்வினை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இப்பின்னணியில், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கும் நிலைத்துநிற்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைப் பேணுவதற்கும் படுகடனை உருவாக்காத நீண்ட கால மூலதனப் பாய்ச்சல்களினூடாக பன்னாட்டு ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். குறைந்த மட்டத்திலான வெளிநாட்டுக் கடன்பாடுகளைப் பேணும் பொருட்டு ஏற்றுமதி சார்ந்த தயாரிப்பு மற்றும் பணிகள் துறைக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள், நடுத்தர காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 3 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சலை உறுதிப்படுத்துவது அவசியமாகும். இதன் மூலம் வெளிநாட்டுப் படுகடனின் பாதிக்கப்படும் தன்மையினைக் கட்டுப்படுத்தலாம். மேலும், குறிப்பாக அரசாங்கத்தின் தேசிய ஏற்றுமதி உபாயத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு பணிகள் ஏற்றுமதிகளின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளைச் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துவது 2019இல் நடுத்தர காலப்பகுதியிலும் வெளிநாட்டுச் செலாவணியின் உயர்ந்த உட்பாய்ச்சல்களை உறுதிப்படுத்தும்.